SEMINAR ON

# Hero-Stones

3 JUN 1975

*Editor*

R. NAGASWAMY

Published by

the State Department of Archaeology,

Government of Tamilnadu.

1974.

First Edition 1974.
T. N. D. A. Pub. No. 36.

417.70934
NAG

© Department of Archaeology

4940
3 JUN 1975

Editor:

R. Nagaswamy

PRICE: Rs. 10-00

Departmental Press,
Department of Archaeology

5 JUN 1975

# FOREWORD

This is the era of seminars. It is one of the academic devices for focussing attention on the less understood topics of importance. We have had two such organised by the Directorate of Archaeology, Tamil Nadu, one on 'Hero Stones,' and the other on the 'Chola history'.

It is well known that the early History of the Tamils is still largely shrouded in chronologically unverified cultural stages. It has been customary to consider the 'Sangam classics' as representing the very peak of the early Tamil socio-cultural scene, but it has not been possible for scholars to pin-point its chronological stage yet. Assessments had been swinging between the remote centuries before Christ, to the first four or five centuries after Christ. It would be healthy, however, to analyse the situation from a multi-disciplinary approach of archaeology, epigraphy and culture, and also to follow the archaeological technique of proceeding from the known to the unknown, backwards into time.

In so far as the Chengam 'hero stones' (which are apparently the oldest of this kind) are concerned, their palaeography adopting a transitional Vaṭṭeḻuttu and at the same time dealing with the several known kings of the early Pallava line, places in our hands, perhaps for the first time, a tool which can be used for not only assessing the cultural situation of the institution of 'hero stones' in the then society, but also to perceive the earlier stages of the palaeographic wealth of Tamil Nadu, in relation to these 'hero stone' records. We know now, thanks especially to the painstaking and methodical work in recent years, of Iravatham Mahadevan on the early Tamil Brahmi cave records that they might range from the 1st Century B.C. to the 5th-6th Century A.D. in pristine and evolutionary forms. We have several stages of their records with comparable material in the form of graffiti letters on pot-sherds, as at Arikamedu, Uraiyur, Korkai etc. and ending with the series of records at Pugaliyur, Varicchiyur, Tirunatharkunru and Pillayarpatti. Some where in between also fall the evidence from the Chengam coin hoard (from the self-same tract, may it be noted, as that of the 'hero-stone's

under discussion), now acquired by the Madras Government Museum All these show that the first few centuries of the Christian era had a script-vogue of a particular kind, and the contents and their literary quality also was of a particular mode. Those said to be of the pre-Christian early cave Brahmi groups do not differ from these significantly, and it is debatable if they could indeed be considered as so much antedating the rest, especially when, archaeologically speaking, it is now very well established that the periods prior to the Christian era had been reflected in Tamil Nadu by a robust culture, represented ceramically by the 'Black and Red Ware', moored into the Iron Age technically, and given to the erection of ostentatious funerary stone edifices to the dead, in the form of 'megalithic' tombs, several thousands of which dot the Tamil country-side, especially in Tondaimandalam (coming again within the purview of the 'hero stone' provenance). These megaliths, in their ' black and red ware' pottery, have graffiti markings which have no direct relationship to any script form as such. Thus, the erection of hero stones-inscribed as well as uninscribed-( both of which belong to the category of non-sepulchral memorials and hence outside the purview of megalithic custom) might advisedly be considered as well post-dating the megaliths of the Iron Age, which are seen to spill into the very first century of the Christian era in Tamil Nadu. Considered from the era of Roman contacts and the other data, therefore, we could assume a cultural matrix of the Iron age megalithic period as the *basal* stratum (with a Neolithic sub-stratum) of the Tamils in the pre-Christian centuries, upon which was built the subsequent developments of their cultural scene. A *terminus post-quem* was also needed for the process of sophistication, as reflected in the Sangam epics, and the inscriptions on the 'hero stones' would seem to indicate they do indeed reflect, by tone and tenor, the developed stages of these classics. One of their classics, *Malaipaḍukaḍām*, especially, apart from others in *Aham*, *Puram*, *Peruntogai* and *Aingurunūru* talks about the 'hero stones', in a graphic manner, in the *very* zone, where they have now been discovered and recorded in profusion, namely, the Chengam taluk, and the implication would, therefore, be that these 'hero stones' were in vogue at the time that particular Sangam classic was compiled. This together, with the fact that it is recorded in the Vaṭṭeluttu script throughout-in sharp contrast with the early Tamil Brahmi records upto the Pugaliyūr-Tirunatharkunru later stages, would appear to give us a compact cultural-chronological sequence that would help us much in dating the central 'Sangam' lore. They would seem to be filling upto the gap

between the 3rd-4th Century A. D. and the 6th-7th Century A. D., and would suggest that the Vaṭṭeḷuttu itself was derivable scriptally in upper Tamil Nadu, from the early cave Brahmi records, but shows a full social utilisation of the script-record potential by the Tamil Muse more profusely in developed Vaṭṭeḷuttu stages, as reflected in the present 'hero stone' series; and this would appear to be the most valuable contribution of the nature, place and possible regnal date, ascribable to the Chengam 'hero stones'. Thus, the method of archaeology, of proceeding to the unknown from the known, also has received a link in these 'hero stone' records with their regnal years. The scholars would do well to be thankful for these very valuable records, and make full use of them for assessing and analysing certain of the stages of early Tamil culture and sociology.

I am thankful to my friend, Shri R. Nagaswami, Director of Archaeology, Tamil Nadu, for having given me this pleasant opportunity.

K. V. SOUNDARA RAJAN,
*Superintending Archaeologist,*
*Archaeological Survey of India.*

# PREFACE

The Tamilnadu State Department of Archaeology organised a Seminar and exhibition on Hero-stones on the 24th and 25th of February 1973. This venture was the fruition of intensive survey by the epigraphy wing of the department, in the years 1972-73. These Hero-stones are abundantly present in the Chengam taluk of North Arcot District and Uttangarai, Harur taluks of Dharmapuri District.

The Seminar was inaugurated by Dr. T. P. Meenakshisundaram, former Vice-Chancellor of the Madurai University. Dr. Ayyappan, former Vlce-Chancellor of the Kerala University distributed the prizes. The exhibition was opened by Thiru K. G. Krishnan, Superintending Epigraphist, Archaeological Survey of India, Mysore. Thiru K. S. Narasimhan, Commissioner, Hindu Religious and Charitable Endowment Department, released the departmental publication "Temple Arts of Tamil nadu" in Tamil.

The Seminar was divided into four sessions presided respectively by Thiru S. R. Balasubramaniam, Dr. N. Sanjeevi, Thiru K. V. Soundararajan and Dr. K. K. Pillai. Nearly thirty research papers were presented. The papers read were broadly divided into the following topics– Hero-stones and literature; Hero-stones and History; Hero-stones and Grammar. Papers pertaining to Hero-stones of individual rulers and dynasties besides the sociological impact of Hero-stones on Tamil culture were also presented. The evolution of Vatteluttu script in Hero-stones received merited discussion amongst the scholars.

Distinguished scholars like Professor K. A. Nilakanta Sastri, Dr.T. V. Mahalingam, Thiru N. Vanamamalai, Thiru Mylai Seeni Venkataswamy and others participated in the proceedings.

In connection with the Seminar and Exhibition, the department conducted an oratorical contest for college students on 'Hero-stones and Literature'. Students from various colleges in the city took part in large

members. A three member panel headed by Professor Hanumanthan, Chief Professor of History, Presidency College, Madras decided three prize winners.

The exhibits displayed in the exhibition ranged from early Pallava period to late Vijayanagar reigns and included estampages of Pallava, Chola, Pandya, Ganga, Nolamba and Vijayanagara kings. Besides estampages, a map showing the density of Hero-stone epigraphs in Tamilnadu, charts comparing ancient and modern names of villages that provided Hero-stones and other literary references, in addition to model setting of Hero-stone environment and photographic enlargements, added lustre to the exhibition.

The exhibition was on view for a fortnight and school children and college students, in Madras and its suburbs benefitted immensely and had a glimpse of the heroes of ancient Tamilnadu.

The present volume contains papers both in Tamil and English read at the seminar in its enirety, barring those that dealt with "Hero-stones and Literature". The latter have been pruned accordingly such that repetition of ideas raised and points discussed does not occur, for which the editor craves the indulgence of the scholars concerned. Literary references pertaining to Hero-stones have been appended at the end.

It must be admitted that many new evidences have come to light subsequent to the seminar held in 1973. The Tamilnadu State Deparment of Archaeology, has copied more than 150 Hero-stones after the seminar calling for further addition and in some cases revision to some of the papers included in this collection. However we are publishing them as they were presented then, as it will take sometime before these new finds are read and assessed. We were amazed at the interest evinced by scholars and students when the seminar was organised, where one witnessed a joy of discovery -a discovery of close relationship between monumental relics spread over a vast part of the land, and literature, particularly the Sangam classics. The excitement was quite justifiable as this was the first time that such a large number of inscribed Hero-stones ranging from 5th, 6th centruies to the almost the present times have been discovered in a short span of time. It may be seen that this collection of papers includes a number of articles dealing with Hero-stones and literature, reflecting the enthusiasm of the participants.

Inaugurating the seminar Dr. T. P. Meenakshisundaram remarked that Hero-stones were intimalety connected with the life of the common-man who has preserved the tradition to this day not only by regularly worshipping them but by way of hundreds of folk songs which are yet to be collected and published. Dr. T. P. Meenakshisundaram suggested that besides arranging to collect and publish them it is also necessary to tape record them, as the folk-tunes in which they are sung are fast disappearing.

I am thankful to Thiru. K. V. Soundararajan who has kindly given a foreword to this collection of papers. My colleagues in the epigraphical and printing wings of the Department have done a splendid job by collecting these epigraphs and seeing this collection through the press. Thiru S. Hariharan Registration Officer, and Selvi Marxia Gandhi, Epigraphist, merit special mention for patiently going through the proofs and seeing it through the press. I do hope that this would stimulate further studies on the subject.

R. NAGASWAMY.

*Director, State Department of Archaeology*

# CONTENTS


1 Hero-Stone Inscriptions of the Pallava Times – K. G. KRISHNAN

2 நடுகல் வழிபாடு – வே. மகாதேவன்

3 An Interesting Hero-Stone Inscription from Chengam – V. S. SUBRAMANIAM 1

4 சோழர் கால நடுகற்கள் – Dr. லீலாவதி திருநாவுக்கரசு 1

5 நடுகல்லும் இலக்கியமும் – மா. ரா. அரசு 1

6 Some Hero-Stones in the Pandyan Country – DR. K. V. RAMAN 2

7 நடுகல்—உள்ளும், புறமும் – மா. சந்திரமூர்த்தி 2

8 Hero-Stone Inscriptions of Narasimha I & II – NATANA. KASINATHAN 3

9 இலக்கியத்தில் நடுகல் – மயிலை சீனி. வேங்கடசாமி 3

10 நடுகற்களும், நம்பிக்கைகளும் – நா. வானமாமலை 4

11 செங்கம் நடுகற்களும், இலக்கியமும் – ச. வரதராசலு 5

12 நடுகல்லும் இலக்கியமும் – இ. சுந்தரமூர்த்தி 5

13 நடுகல்லும் இலக்கியமும் – பெ. கு. வரதராசன் 6

14 நடுகல்லும் இலக்கணமும் – முத்து எத்திராசன் 6

15 Simhavishnu – S. HARIHARAN 6

16 இலக்கியத்தில் நடுகல் – அ. பாஸ்கர பால்பாண்டியன் 7

17 நடுகல்லும் இலக்கியமும் – வி. சீனிவாசன் 7

18 நடுகல் காட்டும் சமுதாயம் – கொடுமுடி ச. சண்முகம் 7

19 பட்டோரைப் பரவுதல் – இ. ஸ்ரீதரன் 7

20 நடுகல்லும் வரலாறும் – செ. இராசு 8

21 நடுகல்லும் இலக்கியமும் – தெ. ஞானசுந்தரம் 8

22 நடுகல்லும் இலக்கியமும் இரா. ஆ. கணேசநம்பி 9

23 Chhaya-Stambhas from Nagarjunakonda – H. SARKAR 9

24 முதல் மகேந்திரவர்மனின் நடுகற் கல்வெட்டுகள் – கு. தாமோதரன் 9

25 Agamas on Memorial-Stones. – R. Nagaswamy 103

26 நடுகல் மேற்கோள்கள் 105

# HERO-STONE INSCRIPTIONS OF THE PALLAVA TIMES

**K. G. KRISHNAN,**
Superintending Epigraphist,
Archaeological Survey of India, Mysore.

A number of hero-stones bearing inscriptions were discovered in 1971 by the Department of Archaeology of the Government of Tamil Nadu mostly in the Chengam Taluk of the North Arcot District.[1] A majority of these inscriptions are in Tamil Language and Vaṭṭeḻuttu script. They throw a flood of light on the social conditions obtaining then in this hilly tract. It is necessary to understand the geographical back-ground before we evaluate the bearing of these inscriptions on the contemporary history. The western borders of the Chengam Taluk have a narrow opening of about fifteen miles bounded on the north by the Javvaji ranges and on the south by the Kalrayanmalai ranges. The river Pennaiyār flowing eastwards enters at a point to the middle of this opening. The modern road from Uttangari to Chengam passes through this opening, skirting the southern end of the Javvaji ranges. This natural setting reveals to us the trend and nature, as well, of the frequent cattle raids across the borders. It is noteworthy that very few among these inscriptions speak of any genuine warfare between dynasties so well-known to us and that the rest confine themselves to the prosaic pattern of raid on cattle raids and their rescue. Tamil literary conventions have held such cattle sheds as a preliminary step leading to a battle between the two contending parties. But unfortunately we have not got records pertaining to the later stage which would have thrown light on the political aspects of the period. Only two feudatory families viz. the Ganga-Koṅgaṇis and the Bāṇas are referred to. It is well-known that kings of the former dynasty were described as Gaṅgas.[2] Vāṇakōaraisar referred to in the Koṭṭaiyūr, Eḍattaṇūr and Kūḍalūr inscriptions appears to belong to branch of the Bāṇa family, which sought service under the Pallavas in this region. We witness here a rather enigmatic spectacle of internecine warfare between two parties of the same feudatory family.

1. This paper is based on the impressions of these inscriptions stored in the office of the Chief Epigraphist.
2. *Ind. Ant.*, Vol. VI, pp. 24-25; *Ep. Ind.*, Vol. XIV, pp. 331-40.

The earliest king represented in the collection examined by me belongs to Siṅgaviṇṇavarman (Simhavishṇu). The inscription is dated in the 33rd year in his reign and records the death of Kandaparuman (Skandavarman) Enādiyār's son. The reference to Viṇṇaṉ in this record recalls to us the prevalence of this name in the ruling houses of this region in earlier times.[1] The next important inscription belongs to the 1st regnal year of Mahendravarman where a Gaṅgaraisar is mentioned.[2] The Koṭṭaiyūr inscription of Mahēndravarman testify to the internecine quarrel between two parties both of whom are described to the nephews (*marumakkaḷ*) of Vāṇakō-araisar. The highest regnal years viz., 54, 58 and 59 are obtained for this king respectively from the Eḍattaṉūr, Kuḍalūr and Śāttaṉūr epigraphs.[3] Two inscriptions from Śāttaṉūr and Torappāḍi give the 11th and 12th regnal years for Narasimhavarman I.[4] The Toṟappāḍi inscription records an internecine quarrel between two parties Koṅgaṇi-araisar and Gaṅgaraisar both obviously of the same stock. Next comes in the order, on the basis of palaeography, a solitary record of Mahēndravarman II from Periya-kōḷāppāḍi dated in the 11th year in his reign. The expression Perumpōttaraiyar occuring in this is interesting. Another inscription from the same place dated in the [12]th year of an Īśvaravarman has to be placed in this period[5] Perumpōttaraiyar figures in this record also. We now come to the famous reign of Narasimhavarman II to whom the highest regnal year 50 is cited in the inscription from Śāttaṉūr. Paramēśvaravarman II is represented by the Mēlpaḷḷippaṭṭu inscription which is dated in the ninth year of his reign. The collateral line is represented in this collection through Nandivarman II, Dantivarman and Kampavarman. It is interesting to note that a term *piḍugu* (thunderbolt) suggesting their Telugu association is used in connection with the name Dantivarman in the Piñjūr record.

It is clear that these highest known regnal years, when put together (33+59+12(13)+11+12(19)+50+9) upto the reign of Paramēśvaravarman II, add up to 186. This makes it impossible for us to accommodate the reigns of Simhavishṇu and his descendants, without any adjustment

1. Vide Irulappatti inscription of Vinnavarman
2. 3. Contra Chengam Nadukarkal
4. Contra Chengam Nadukarkal
5. See also Ep. Ind., Vol. VII, plate facing p. 24 where it may be noted that Isvaravarman of No. III from Habbini is earlier to his namesake represented by Nos. II A & II B from Hanumantapuram. This assessment of mine is based on a close study of the palaeography of the three records.

of their reign periods. For there are already certain landmarks which cannot be either ignored or revised. The Badami inscription of Narasimhavarman I dated in the 13th year of his reign is followed by a record, engraved later, which is probably dated Śaka 56[5], thus placing the 13th year sometime before 643 A. D.[1] This will place his accession before 629-30 A. D. The defeat claimed to have been inflicted upon the three Pallava kings Narasimhavarman, Mahēndravarman and Iśvarapōtavarman by Chalukya Vikramāditya I fixes 675 A. D. as the latest date when Iśvaravarman had probably come to rule.[2] But we know that Iśvara who is also known as Paramēśvaravarman ascended the throne in 668-69 A. D. The highest known regnal year for him being 19 his reign should have lasted at least upto 687 A. D.[3] If we add 50 years of the rule of Narasimhavarman II to this date it may lead to an impossible phenomenon of Narasimhavarman II living upto 757 A. D. Therefore it is clear that there was an overlapping between the reign of Paramēśvaravarman I, Narasimhavarman II and Paramesvaravarman II. Regarding the predecessors of Mahendravarman I, the addition of 59+33 to the year 629-30, the date of accession of Narasimhavarman I, will place the accession of Simhavishṇu in C. 536-37 A. D.

Cattle were no doubt the important or perhaps the only form of wealth of the people in this region during this period and it had therefore proved to be the bone of contention between the residents of various villages. Except on a few occasions when robbers had raided to lift the cattle, the fight for them had occurred between to well-delineated parties like the *marumakkaḷ* of Vāṇakōvaraiyar. Villages such as Perumugai, Velpp[ūṇḍi] and Pōndai in the times of Mahendravarman I, Mēṟkōvalūr in the times of Narasimhavarman I and Irāmandaipāḍi in the times of Nandivarman II were also targets of attack by parties whose delineations and affiliations are not made clear. The name Irāmandaipadi is an eloquent commentary on the foundation of such villages for purposes of protecting (*pāḍi*) the cattle shed (*mandai*) in the nights (*irā*), thus testifying to the most important vocation of the people living around. It is but natural, therefore, that we meet with prosaic records which have nothing else to speak of. We find that some of the heroes died in the defence or recapturing of the cattle (*toṛu*) while some others died in the course of defending their villages.

1. *SII.*, Vol. XI, Part I, No. 1 and plate; Introduction. p. I.
2. *Ep. Ind.*, XXVII, pp. 115 ff.
3. Ibid, Vol. XXXII, pp. 91 ff.

Most of these hero-stone inscriptions bear sculptural representation of certain objects depicted to have been placed near the hero. They are no doubt associated with the cult of worship of the dead. Nearly all of them except one have been identified as bow, shield, arrows or shoulder-bags containg arrows etc. The one object which requires elucidation is what has been describud as a receptacle (*śimiḻ*). The relevance of a *śimiḻ* is not clear. It looks more like a pedestal or a representation of what might have been the form of a shrine raised in memory of the dead hero. This is very clear from the hero-stones of Eḍattaṉūr, Kuḍalūr and Śāttaṉūr. If they represent shrines, as is suggested by me here, they may be considered as the precursors of the later day paḷḷipaḍai shrines erected over the remains or the place of the dead heroes. We may recall that a shrine was erected at Toṇḍaimāṉ-Āṟṟūr for Āditya who is described as Toṇḍaimāṉāṟṟūrtuñjiṉa i. e., one who died at Toṇḍaimāṉ-Āṟṟūr, perhaps in the course of his northern campaigns. An analogous instance in the case of Ariñjaya at Mēlpāḍi is also known to us.

Last but not the least important aspect of these hero-stone inscriptions is its palaeography. All the inscriptions assignable to a period before that of Kampavarman are in Vaṭṭeḻuttu characters. Their evolution can be clearly traced right from the inscription of Simhavishṇu through those of Mahēndravarman, Narasimhavarman I, Narasimhavarman II and Paramesvaravarman II. The most conspicuous among the characters of the alphabet showing significant stages are *i*, *ai*, *e*, *ṅa*, *cha*, *ña*, *ṇa*, *ta*, *na*, *ma*, *va* and *ṉa*. The difference between *ai* and *ma* is quite clear enough, without giving room for confusion. The curved beginning of the left arm, the definitely flat base and the projected downward shaft across the centre of the base distinguish the *ai* from the *ma* which maintains its plain horse-shoe shape for long. At a later stage the clear loop in its right arm makes it totally different from *ai*. The letter *ṅa* shifts its top *mātra* to its left and gives birth to the original form of modern *ṅa*. The plain curve of *cha* cuts as a cross in later days. The early *ṇa* looking like a later *ta* developes a loop on its top inner curve. The letter *ñā* shows marked changes by developing a loop at the bottom of the central stem and by converting the left curved arm into looped horizontal arm. The final *ṉa* changed its form of a straight horizontal line followed by a convex curve in Simhavishṇu's times into a entire concave curve with a downward tail.

# நடுகல் வழிபாடு

வித்துவான் வே. மகாதேவன்,
தமிழாசான், திருப்பனந்தாள்.

பிணங்களைச் சுட்டனர் சிலர்; வறிதே இட்டனர் சிலர்; குழியில் புதைத்தனர் சிலர்; தாழ்வயின் அடைத்தனர் சிலர்; தாழியிற் கவித்தனர் சிலர். மணிமேகலையில் 'சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை' இத்தகைய வழக்கங்களைக் காட்டுகிறது. (வரிகள் 65 - 9). பெருங்கதை, "நடுகல் உழலை, ஆளிடுபதுக்கை, அரில்பிணங்கு அடுக்கம், தாள் இடு குழி, தலை கரந்து யாத்த புல், பொள்ளல்" என அடக்க முறைகளை அறிவுறுத்துகிறது.

இறந்தவரின் உடலை வறிது மூடாது அவ்வுடல்களின் மேலே கற்குவைகளை இட்டு மறைப்பது 'கற்பதுக்கை', 'கற்றிட்டை' முறை என்று சங்க நூல்கள் கூறுகின்றன. 'அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை' என்ற புறப்பாட்டு வரியும் (பாடல் 3) அகநானூற்றுப் பகுதிகளும் (109, 157, 215, 231) போரில் இறந்த வீரர்களின் உடல்களின் மேல் புதுக் கற்குவியல் இட்டுக் கற்பதுக்கைகள் அமைக்கப் பட்டதனைக் காட்டுகின்றன.

உறையூர் இளம்பொன்வணிகனாரின் புறப்பாடல் வீரனின் உடலின் மேல் கற்பதுக்கையை உருவாக்கியதுடன் அமையாது நடுகல் நாட்டியதாகவும் குறிக்கிறது. 'பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி . . . இனி நட்டனரே கல்லும் . . .' என்னும் பாடற் பகுதியும் பழங்குறிப்புரையும் இதனை விளக்கும்.

வீரரைப் புதைத்த இடத்தும் பிற இடங்களிலும் நடப்பட்ட நடுகற்கள் காலப்போக்கில் கடவுளராகக் கருதப்பட்டன. நடுகல் வழிபாடு, எவ்வெவ்வாறெல்லாம் விளங்கியது என்பதும் அவ்வழிபாட்டால் உருவாகிய வழிபாட்டு முறைகள் யாவை என்பவையும் நோக்கத்தக்கவை.

### சங்க நூல்களில் :

போரில் இறந்த வீரர்களின் நினைவுக்குறிகளே நடுகற்கள். வீரரின் பெயரும் பீடும் எழுதப்பட்டிலங்கிய அக்கற்கள் பெருவழிபாடு உற்றிருந்த பான்மையைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்கள் பகர்கின்றன.

"கழல் முள்வேலிச் சீறூரினள்; தழைத்த கூந்தலும் ஒள்ளிய நெற்றியும் உடைய ஒண்டொடி, கணவனை இழந்தாள். கல்நாட்டினர் மறவர் அவள் துணைவனுக்காக. கல்லானாலும் அவன் கணவன் தானே! நங்கை, நடுகல்லைக் கண்டு, கை இரண்டும் கூப்பி வணங்கித் தொழுகிறாள்" என்று கூறுகிறார் அள்ளூர் நன்முல்லையார்.

ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும்

என்பது புறப்பாட்டு (எண் 306).

கல்லானன் ஒரு வீரன். முல்லை நிலத்தவராகிய பல்லான் கோவலர், வேங்கை மலரைப் பனந்தோட்டில் தொடுத்துக் கல்லுக்குச் சூட்டினார்கள்.

ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீ
போந்தை அம்தோட்டில் புனைந்தனர்தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல் ஆயினையே கடுமான் தோன்றல்

என்பது சோணாட்டுச் சிறுகருந்தும்பியாரின் புறப்பாடல். (எண். 265)

புறநானூற்றுப் புலவன் இரவலனோடு உரையாடுகிறான். இரவல! ஆநிரையை அயலார் கவர்ந்ததை அறிந்த மறவன் நிரை மீட்கச் சென்றான். கரைபுரண்டு செல்லும் புனலை அணை தடுப்பது போல அம்புகள் பலவற்றை அவன் தடுத்தான். அழிந்துபட்டான். அவனுக்காக எடுக்கப்பட்ட கல் நீ செல்லும் வழியில் உள்ளது. நீ அப்பக்கம் சென்றால் அதனைத் தொழாதொழியாதே! தொழுதால் இக்கொடிய காட்டு வழியில் வண்டுகள் மேம்படும்'' என்று குறிக்கிறது அப்பாடல்.

பெருங்களிற் றடியில் தோன்றும் ஒருகண்
இரும்பறை இரவல சேறி யாயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி வழாது
வண்டு மேம்படூஉம் இவ் அறநிலை யாறே
பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்
வில்உமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே

என்பது பாடல் (263).

இப்பாடலும் இதன் பழைய குறிப்புரையும் அரிய செய்தி ஒன்றை அளிக்கின்றன. நடுகல்லைத் தொழுதால் வழியில் வண்டு மேம்படுதல் காரியநிகழ்ச்சி. 'தொழுது போகவே கொடும் கானம் மழை பெய்தலான் குளிரும் என்பான் வண்டு மேம் படுதலாகிய காரியம் கூறினன்' என்பது பழம் குறிப்புரை. இப்பாடல் நடுகல்லைத் தொழுதால் மழை பொழியும் என்னும் சங்கச் சான்றோரின் உள்ளக் கருத்தை உரைக்கிறது.

'இல்லடுகள்ளின் சில்குடிச்சீறூர்—புடை நடுகல்லின் நாட் பலியூட்டி—நன்னீர் ஆட்டி நெய் நறைக் கொளீஇய—மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் அருமுனை இருக்கைத்து . . .' என்னும் அறுவை வணிகன் இளவேட்டனார் புறப்பாடல் நடுகற்கு விடியற்காலை வழிபாடு செய்தமையையும், நீராட்டியமையையும், தூப ஆராதனைகள்

செய்தமையையும் காட்டுகிறது. 'நடுகற் பீலி சூட்டி நாரரி – சிறு கலத்துகுப்பவும் கொள்வன் கொல்லோ' என்னும் ஔவையின் புறப்பாட்டடிகள். நடுகல்லுக்குப் பீலி சூட்டிக் கலத்துக் கள்படைத்த வழக்காற்றைக் காட்டுகின்றன.

பூநான்கு, உணவுநான்கு, குடிநான்கு, என்று பட்டியல் இட்டுக் காட்டும் மாங்குடிமருதனர் பாடல் நடுகல்வழிபாடு பற்றிய நல்ல தகவல் ஒன்று தருகிறது.

ஒன்ருத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லேபரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே

(புறப் பாடல் எண். 335)

என்பது அப்பாடல். நெல் உகுத்துப் பரவத்தக்க கடவுளாக நடுகல் ஒன்றை மட்டுமே காட்டுகிருர் மாங்குடிமருதனர். சங்ககாலத்தவர் நடுகல்லேத் தெய்வமாக வழி பட்டமையை இத்தகைய பல சான்றுகளால் அறியலாம்.

## இலக்கண நூல்கள் இயம்பும் விளக்கம் :

ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியமும், புறப்பொருள் வெண்பாமாலேயும், நடுகல் வழிபாட்டு வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. தொல்காப்பியர், 'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்—சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்தல் என்று—இருமூன்று வகையின் கல்லொடுபுணர" என்று ஆறுதுறைகளே நடு கல்லுக்கு அளிக்கிருர். இவ்வாறினுள் பெரும்படையும், வாழ்த்தலும் நடுகல் வழி பாட்டைக் காட்டுவனவாகும்.

நச்சினுர்க்கினியர், தொல்காப்பிய உரையில் வீரன் செய்தபுகழைத் தகும் படிப்பொறிப்பதும், நடுகல்லேத் தெய்வம் ஆக்கிப் பெருஞ்சிறப்புக்களேப் படைப் பதுமாக இருவகையாகப் பிரிக்கிருர். பீடங்கள் வகுத்துத் தீபமேற்றி வழிபடுமாறு செய்க என்னும் பாடலே மேற்கோளாகக் காட்டுகிருர். நடுகல்லேத் தெய்வமாக்கி வாழ்த்துவதை வாழ்த்து என்கிருர். நடப்படும் கல்லிற்குக் கோயிலும், மதிலும் வாயிலும், ஏனேச் சிறப்புக்களும் படைத்தல் பெரும் படைப் பகுதிகள் என்பது நச்சர் கருத்து.

இளம்பூரணர் "சீர்த்தகு மரபின் பெரும்படையாவது நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல்; அஃது இற்கொண்டு புகுதல் என்று உரைத்த துறை" என்பர். புறப்பொருள் வெண்பாமாலே இற்கொண்டு புகுதல் என்ற துறையைக் கூறுகிறது. போரில் இறந்த வீரனுக்குக் கோயில் எடுத்துப் புகுதல் இத்துறை ஆகும்.

வேத்தமருள் விளிந்தோன் கல் என
ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று

என்பது கொளு. தொல்காப்பியமும், உரையாசிரியரும், புறப்பொருள் வெண்பா மாலேயும் நடுகல்லே ஒட்டிக் கோயில் அமைக்கப் பட்டதனேக் காட்டுகின்றன.

## வழிபாட்டு வளர்ச்சி :

*நடுகல் வழிபாட்டு வளர்ச்சியை ஓரளவு சுருக்கிக் கூறி இறுதியில் விளக்குவோம். நடுகல்லைத் தெய்வமாக வழிபட்டனர். நடுகல்லை ஒட்டிக் கோயில்களை அமைத்தனர். அவை நடுகற்கோயில்கள் ஆகும். இதன் செல்வாக்கால் நடுகற்கோயில்களைப் போலவே, அரசனைப் புதைத்த இடத்துச் சமாதிக் கோயில்கள் உருவாயின. இவை பள்ளிப் படைக் கோயில்கள் என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெறும்.*

## நடுகல் கோயிலும் பள்ளிப் படைகளும்:

### *1. பல்லவர் காலப் பள்ளிப் படைகள்*

வேலூருக்கு அருகில் சோழபுரத்தில் உள்ள கம்பவர்மனின் எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு, (A. R. E. No. 429 of 1902 E. I. Vol. VII p. 122–123) பள்ளிப் படைபற்றிக் கூறுகிறது. கம்பவர்மனுக்கடங்கிய சிற்றரசன் இராசாதித்தன். இவனுடைய தந்தை மருதிவிதங்கரையனின் நினைவாக இவன் பள்ளிப் படை கோயில் கட்டினன் என்று கல்வெட்டின் தமிழ்ப் பகுதி கூறுகிறது. இரண்டு சம்ஸ்கிருதப் பாக்களும், கிரந்தப் பகுதியும், தமிழ்ப் பகுதியும் கொண்டதாகக் கல்வெட்டு உள்ளது.

இராசாதித்தன் விசையகம்பவர்மனின் எட்டாவதாண்டில் தன் தந்தை இறந்த இடத்துக் கோயில் எழுப்பியதனைத், '*தம் அப்பனார் பள்ளிப் படுத்த இடத்து ஈசராலயமும் அதிதகரமும் எடுப்பித்துக் கன்டு செய்வித்தான்*' என்ற கல்வெட்டு அடிகளால் அறியலாம் (பல்லவர் வரலாறு பக்கம் *231*). இக்கல்வெட்டு பள்ளிப் படுத்த இடத்தில் ஈசராலயம் ஒன்றும் அதீதகரம் ஒன்றும் எடுப்பிக்கப்பட்டதாகக் கூறுகிறது. (Rajaditya built a Siva Temple and a tomb in memory of his 'deceased father—Pallavas of Kanchi-R. Gopalan Appendix A. No. 82) மொழி பெயர்ப்பு இருகோயில்கள் எடுக்கப்பட்டதனைக் காட்டுகிறது.

## சோழர் காலத்தில் :

### *1. திருப்புறம்பிய நடுகற்கோயில்கள்*

*பல்லவ அரசன் அபராஜிதவர்மன் காலத்தில் வரகுணபாண்டியன் சோழ நாட்டின் மீது படை எடுத்தான். முதல் ஆதித்த சோழன் வரகுணபாண்டியனோடு போரிட்டுத் தோற்றான்.* (A. R. E. 693 of 1905) கி. பி. *880*-இல் பாண்டியன், மண்ணிநாட்டு இடவையைக் கைப்பற்றினான். சோழநாட்டின் ஒரு பகுதி பாண்டியன் வசமாயிற்று பல்லவன் அபராஜிதவர்மன் சோழனுக்கு உதவச் சில மாதங்களில் படையுடன் வந்தான். கங்க அரசன் முதலாம் பிருதிவிபதி பல்லவனுக்குத் துணை புரியப் படையுடன் வந்தான் பல்லவன், கங்கன், சோழன் ஒரு புறமாகவும், பாண்டியன் மறுபுறமாகவும் இருந்து திருப்புறம்பயத்தின் கி. பி. *880*-இல் பெரும் போரிட்டனர் இப்போரில் ஆற்றலுடன் போரிட்ட முதலாம் பிருதிவிபதி வீர மரணம் அடைந்தான். (South Indian Ins. Vol. II No. 76 V. 18) பல்லவன் வென்றான்.

" திரும்புறம்பியத்தில் இப்போரின் சின்னங்கள் உள்ளன. முதலாம் பிருதிவிபதியின் நடுகற்கோயிலும், உதிரப்பட்டி என்னும் பெயருடைய நிலமும், கச்சியாண்டவர் நடுகற் கோயிலும் உள" எனப் பண்டாரத்தார் கூறியுள்ளார் (பாண்டியர் வரலாறு பக்கம். 73-4). கச்சியாண்டவர் கோயில் என்று வழங்கும் நடுகற்கோயில், போரில் இறந்த பல்லவ அரசன் ஒருவனுக்கு உரியதாகும். அரசன் பெயர் அறிய இயலவில்லை. இவ்விரண்டு கோயில்களும் நடுகல்லை ஒட்டி அமைந்த கோயில்களாகும்.

## 2. ஆதித்தேஸ்வரம்

முதலாம் ஆதித்தசோழன் (891-907) சித்தூர் ஜில்லாவின் காளத்திக்கு அண்மையில் உள்ள தொண்டைமான் பேராற்றூரில் கி. பி. 907 இல் இறந்தான். திருமாற்பேறு கல்வெட்டு ஒன்று (South Indian Ins. Vol. III No. 142) சபையாற்குத் தேவதான பிரமதேசமாகித் தொண்டைமான் ஆற்றூர்த் துஞ்சின உடையாற்கு இருபத்தொன்றுவது கொடுத்து" என்று குறிக்கிறது. இராவ்பஹதுர் வெங்கய்யா அவர்கள் தொண்டமான் ஆற்றூர்த் துஞ்சின உடையார் முதலாம் ஆதித்தன் என்றும், இப்பெயர் பெறக் காரணம் எதுவென்றும், தொண்டமான் ஆற்றூர் இன்றைய தொண்டமானுடு என்றும் குறித்துள்ளார். (A. R. E. year 1905 page 60, 1907 page 72). வீரராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டின் 56-ஆவது பாடற் பகுதி (Adityarama Bavada'sya putraha Kodhandaramabidaya prasidhaha) யால் (T. A. S. Vol. III No: 34 p. 142) ஆதித்தனுக்குக் கோதண்டராமன் என்ற பெயருண்மை புலனாகிறது.

முதல் பராந்தகசோழன் தொண்டமான் ஆற்றூரின் ஸ்ரீகோதண்டராமீஸ்வரமாகிய ஆதித்தேஸ்வரம் என்ற பெயரால் ஆதித்தன் நினைவாகப் பள்ளிப் படை கட்டினான். புரட்டாதித் திங்கள் திருக்கேட்டை முதல் எதிர் எழு நாளும் திரு நட்சத்திரமாகிய திருச் சதையத்தன்றும் உற்சவம் நடத்தினான். இந்நாட்களில் ஆயிரம் பேருக்கு உணவுக்கும் திருவிழாப் போனகத்துக்கும் ஏற்பாடு செய்தான் என்பதைக் கல்வெட்டு ஒன்று காட்டுகிறது. (South Indian Inscriptions Vol. VIII No. 142 page-268 anb 269).

## அரிஞ்சிகை ஈஸ்வரம் :

வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவல்லத்தின் வடக்கே ஆறு கல் தொலைவில் உள்ள ஊர் மேற்பாடி. இவ்வூரில் சோமநாதர் கோயில், சோமேச்ரவர் கோயில்கள் உள்ளன.

அரிஞ்சய சோழன் ஆற்றூரில் இறந்தான். முதலாம் ராஜராஜன் அரிஞ்சய சோழனுக்குப் பள்ளிப் படை கோயில் கட்டினான். ராஜராஜ தேவற்கு யாண்டு 29 ஜெயங்கொண்டசோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடி நாட்டு மேற்பாடியாகிய ராஜாஸ்ரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த் துஞ்சின தேவற்குப் பள்ளிப் படையாக உடையார் ஸ்ரீராஜராஜதேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித்தருளின திருஅரிஞ்சிகை ஈஸ்வரத்து மஹாதேவர் ஸ்ரீ கோயிலுக்கு" என்பது கல்வெட்டு வாசகம்.

இங்குள்ள கல்வெட்டுக்கள் இப்பள்ளிப் படையை திரு அறிஞ்சிகை ஈஸ்வரம் (S.I.I. III No. 15, 16). திருவறிஞ்சீஸ்வரம் எனக் (Ibid. 17-18) குறிப்பிடுகின்றன. சோளேஸ்வரர் கோயில் என்ற பெயரால் வழங்கும் இப்பள்ளிப் படை மிக அழிவுறும் நிலையிலுள்ளது.

## பஞ்சவன் மாதேவீச்சுவரம் :

தஞ்சைமாவட்டம் இராமநாதன் கோயிலில் உள்ள இராசேந்திரனின் ஏழாவது ஆண்டுக் கல்வெட்டு (271 of 1907) பஞ்சவன் மாதேவீச்சுவரம் என்னும் பள்ளிப் படையைக் குறிப்பிடுகிறது. இப்பள்ளிப் படை க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திரைமூர் நாட்டு பழையாறையான முடி கொண்ட சோழபுரத்தில் இருந்தது. பள்ளிப் படையான பஞ்சவன் மாதேவீஸ்வரம் உடைய மகாதேவற்கு வழிபாட்டுக்காகவும் நிவந்தங்கட்காகவும் நிலம்தரப் பட்டது. இப்பள்ளிப் படை பழுவேட்டரையர் மகளும் இராஜராஜனின் மனைவியுமான பஞ்சவன் மாதேவியின் (S. I. I. Vol. III 51, 53) பொருட்டு எழுப்பப் பட்டது எனலாம். மருதூர் வெண்காடன் கோவந்தையுடன் மடாபதி குலகுளீஸ்வர பண்டிதர் இப்பள்ளிப் படைக் கோயிலை மேற்பார்வை இட்டனர். (A. R. E. 1927 para. 16) இக்கல்வெட்டில் உள்ள பள்ளிப் படை என்ற சொல்லை உற்சாகமுள்ள கைகள் அழிக்கமுயன்றுள்ளதாக ஆண்டறிக்கை கூறுகிறது. (para. 12).

## பள்ளிப்படை ஆகிய விக்கிரம சோழ நல்லூர் :

கோப்பெருஞ்சிங்கனின் பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு (S. I. I. XII No. 159, 312/1913) நாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும் விக்கிரமசோழன் திருவீதி தென்பக்கத்து எழுந்தருளுவித்த பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி ஸ்ரீகோயிலும், திருமுற்றமும் திருமடை விளாகத்தும் அகப்பட்ட பள்ளிப் படையான விக்கிரம சோழ நல்லூர் எனக் கூறுகிறது. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (275/1913) அக்கன் பள்ளிப் படை என்று கூறுகிறது. இதுசுந்தரபாண்டியனின் தமக்கையுடன் தொடர்புடையது. விக்கிரம சோழன் பள்ளிப் படுத்தப் பட்ட இடம் அன்று ஆதல் உறுதி. (S.I.I. Vol. XII No 159 lnro. A. R. E. 1927, p. II para. 13).

## வேடியப்பன் கோயில்கள் :

செங்கம் வட்டார நடுகற்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்நடுகற்கள் 'தொறு' மீட்டும், கொண்டும் பட்ட பல வீரர்கள் முதலானவற்கு எடுப்பிக்கப்பட்ட நீத்தார் நினைவுச் சின்னங்களாயின இன்றைய கோயில்கள். இக்கல்வெட்டுக்களில் 'தொறு' என்ற சொல் அதிகமாகக் கையாளப்படுவது. திருவண்ணாமலை திருஞானசம்பந்தர் பதிகம் "தூமா மழை நின்ற திரவெறுவித் தொறுவின் நிரை ஒடும்" எனக் கூறும். பிங்கலந்தை "தொழுவும் ஆநிரையும் தொறுதியும் தொறு வவல்" எனப் புலப்படுத்தும். தொறுவன், தொறுவி, தொறுத்தி, தொறுவிடம், தொறுவி எனப் பல சொற்கள் 'தொறு' என்பதில் இருந்து பிறந்தவை. இச்சொல்லின் பொருளழகை எருமைத் தொறு (1971/56, 57, 75) ஆன் தொறு (1971/36) மறித் தொறு (1971/73) என்றெல்லாம் செங்கம் கற்கள் கையாளுவதால் அறியலாம்

வீரர்களுக்காக நடப்பட்ட கற்கள் இன்று வழி பாட்டுத் தலங்களாக நிலவுகின்றன. நடுகற்கள் வேடியப்பன் கோயில்களாக ஆற்காடு, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் போற்றப்படுகின்றன. வேடர், கிருஷ்ணரப்பன், மீனரப்பன், சன்யாசிப்பன் கோயில்களாக வழிபடப்படுகின்றன. நடுகல்லிலுள்ள உருவிற்கேற்ப மொசவேடியப்பன், நொண்டி வேடியப்பன் என்றெல்லாம் மக்கள் வழங்குகின்றனர். நடுகற்கள் கோவில்களாகவோ, பள்ளிப் படைகளாகவோ, ஈஸ்வராலயங்களாகவோ மாறாமல் மக்களால் போற்றப்படுகின்றமைக்குச் சான்றாக உள்ளன.

## வழிபாட்டு வளர்ச்சி முறையும் செல்வாக்கும் :

இறந்தவரை நினைவுகூற விரும்பிய மக்கள் முன்னவர் நினைவாகச் சிலநாட்கள் விழா நடத்தினர். பின்பு நிலையானதாக நடுகல் தோன்றியதாகலாம். நடுகல்லின் மேல் பந்தரிட்டு (புறம். 268) வணங்கியோர் அதனையே கோவிலாக ஆக்கினராதல் வெள்ளிடை.

'முன்னவர் வழிபாடு' பல்லாற்றான் வளர்ந்தது. உயிருடன் வாழும் போது தொழுவது போல எடுத்த சிலை நாளாவல் தெய்வமாகும். திருநல்லம் கண்டராதித்தர் சிலை இதற்குச் சான்று. ராஜராஜனின் தமக்கை முன்னோரை வழிபட நிவந்தம் தந்தாள் (S.I.I. II p. 68) ராஜராஜன் சிலை, கோவில் வழி பாட்டுச் சிறப்புக்கள் எல்லாவற்றையும் பெற்றது. (A. R. E. 1925 p. 81) 'கண்டராதித்தர்' பெயரால் கோவிலும் சிலையும் செய்தாள் செம்பியன் மாதேவி. (1909 p. 45) போரில் இறந்த சோழப் படைத் தலைவன் விருப்பப்படி காளத்தியில் செப்புப் பிரதிமமாக எழுந்தருள்வித்தாள் அவள் சகோதரி. இச்சிலை இன்றுமுள்ளது (1921–2 para. 21).

போரில் இறந்த வீரனின் நினைவாகக் கோயில்களில் கொடை தரப் பட்டது. போரில் பட்ட இருவருக்காகப் பாண அரசன் கொடை தந்தமை இதற்குச் சான்று (283 of 1906).

நடுகற்கள் நடுகற்கோயில்களாயின. அவ்வாறே இறந்த அரசர் முதலியோரை நினைவு கூர்தல் பொருட்டுச் சிலைகளமைத்தனர். சிறப்பு வழிபாடுகள் செய்தனர் பின் இறைவன் அருகே பள்ளிப் படுத்தனர் (429/1902). சோழர் காலத்துப் பள்ளிப் படுத்த இடத்து ஈசுவரக் கிருகங்களையே அமைத்து விட்டனர்.

நடுகற்கள் வழிபடப் படுதலைச் செங்கம் நடுகற்களும் திருப்புறம்பியமும் காட்டுகின்றன. பள்ளிப் படைகள் பல திருப்பணிகளால் சிதைவுற்றன ஆயினும் இராசபாளையம், பூந்தமல்லிக் கோயில்கள் இன்றும் பள்ளிப் படைகளாக உள. (A.R.E. 1926–27, Part B. para. 12, 13, 14).

# AN INTERESTING HERO-STONE INSCRIPTION FROM CHENGAM[1]

**V. S. Subrahmanyam**

The hero-stone inscriptions recently discovered by the Department of Archaeology, Government of Tamil Nadu are interesting from various points of view. Nearly all the inscriptions record the death of heroes in the course of campaigns for capturing the cattle or rescuing them. A few record the death of heroes in the course of encounters with tigers in the forest. But an inscription on a hero-stone lying in the tank at Chengam[2] is interesting from another point of view. It is damaged and is in Tamil characters of about the 10th century A. D. The inscription is engraved around the figure-in-relief of the hero. To the left of the figure the word *'Cheṅgai'* could be read. This is obviously the ancient name of Cheṅgam. One line below the sculpture and two lines to the right of the sculpture read as follows.

Kavarai Māyileṭṭi Kambaṉ peṇḍukaḷaik kūṟai koḷḷa eṟiñju paṭṭāṉ[ ॥ *]

This passage says that Kavarai Māyileṭṭi Kambaṉ died in the course of saving some women from molestation. Kavarai Māyileṭṭi Kambaṉ was, as his name signifies, a big merchant of the Gavara community. Kūṟai means cloths. Another inscription of about the same period is worth mentioning in this connection.[3] It is from Vēlūr (T). It records the death of Kāḷimaṉ, said to be a resident of Mīkoṉṟai, after rescuing his elder brother's daughter from robbers.

Again it is interesting to note a similar instance in a record from Navalai in Harur Taluk, Dharmapuri District, in Kannada language and characters, dated in the 15th year in the reign of Vira Noḷamba.[4] This Vīra Noḷamba who is also known as Aṇṇiga seems to have ascended the throne in about 925 A.D. It records the death of Prituva, son of Puḷiyaṇṇa, while defending certain women, when they were stripped of their dress i. e. when their modesty was about to be out raged. Thus the above inscriptions throw some light on the social conditions in the region during the period.

---

1. I am thankful to Dr. G.S. Gai, the Chief Epigraphist for permitting me to read this unpublished record.
2. *A.R.Ep.*, 1971-72 No. B. 211.
3. *A. R. Ep.* 1933-34, No. 68.
4. *Damilica*, Vol. I, page ; *A.R. Ep.* 1968-69, Introduction, p.9.

# சோழர் கால நடுகற்கள்

**டாக்டர் திருமதி. லீலாவதி திருநாவுக்கரசு**

தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி,
வடசென்னை.

"காதல், வீரம், இறப்பு, இறப்பிற்கு அப்பாற்பட்ட நிலை" இவை நான்குமே மனித வாழ்க்கையின் நான்கு பெரு நிலைகளாகும். வாழ்வினைச் செம்மைப்படுத்த இயற்றப்படும் இலக்கியங்களும் இந்நாற்பெரும் கூறுகளைப் பாடுபொருளாகக் கொண்டு, மக்கள் வாழ்வின் பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. வரலாற்று உணர்வுடன் படைக்கப் பெறும் இலக்கியங்களில் சமுதாய உணர்வுகள் வெளிப்படுதல் ஒருதலை. பண்டைத் தமிழர் நாகரிகத்தினைத் தெளிவுபடுத்தும் சங்க இலக்கியங்கள், நிலையில்லா உலகத்தில் நிலைத்த உண்மைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மானிட வாழ்வின் அகப்புற இயல்புகளை விளக்குகையில், அவை வாயிலாக மக்கள் சமுதாய வாழ்வின் பழக்க வழக்கங்களைச் சான்றுகள் காட்டி நிறுவுகின்றன. முன்னோர் போற்றிய மரபு நெறிகளில் வீரம் போற்றுவது தலையாயது. "வீரக்கல் நட்டு வீரர்களை வழிபடும் முறையானது தமிழ், கன்னட நாடுகளில் 9-ஆம், 10-ஆம் நூற்றாண்டுகள் வரை பரவியிருந்தன. அங்குள்ள நடுகற்கள் சங்க இலக்கியங்கள் கூறும் நடுகல் குறிப்புகளோடு ஒத்துள்ளன. சமய சமுதாயக் கோட்பாடுகள் சடங்குகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றன. நடுகல் வழிபாடு பண்டைத் தமிழ் வீரநெறியோடு தொடர்புடைய சடங்காகும்" என்பார் திரு. என். சுப்ரமண்யம்.[1]

நடுகல் நட்டு வீர வழிபாடு செய்வதன் அடிப்படைத் தத்துவம் இங்கு சிந்திப்பதற்குரியது. சோழர் நடுகற்கள் வாயிலாக உணர்த்தப் பெறும் பண்பாட்டு வரலாற்றில் அதனை விரிவாகக் காணலாம்,

சோழர் கால நடுகற்களைக் காணுமுன், அவற்றிற்குப் பிறப்பிடமான சங்க கால நடுகல் வழிபாட்டுக் குறிப்புகளை இங்கே சுருக்கமாய் அறிவது, நடுகல் வளர்ச்சி முறையை உணர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கும். புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டில் மலைபடுகடாம், திருக்குறள் ஆகியவை நடுகல் பற்றிய செய்திகளை விரிவாக எடுத்துரைக்கின்றன.[2]

> நடைமெலிந் தொழிந்த சேண்படர் கன்றின்
> கடைமணி உகுநீர் துடைத்த

பெரும்திறல் ஆடவர் பெயரும் பீடும் எழுதிக் கல்நட்டுப் பீலி சூட்டி வழிபட்டனர். இதுவே பண்டைத் தமிழ் வழக்கு. அக இலக்கியங்கள் காட்டும் நடுகல் குறிப்புகள்

எல்லாம் பாலைத் திணைக் குரியன. பாலைநில வருணனையில் நடுகற்களைக் காட்டுவர். இது ஆய்வுக்குரிய குறிப்பாகும். இப்போது கிடைத்துள்ள செங்கம் நடுகற்கள், வளமற்ற வடார்க்காடு மாவட்டத்திற்குரியன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ் சோழனுக்கு நடுகல் நட்டது அவன் செயற்கரும் செயலைப் போற்றுவதற்கே. அதியமான் நெடுமானஞ்சி மறைந்த பின் அம்மாபெரும் வீரனுக்கு நடுகல் நட்டனர். அஞ்சி, தகடூரைச் சார்ந்தவன். தகடூர் இன்றைய தருமபுரி என்பர். அங்கும் நடுகற்கள் பல கிடைத்துள்ளன. குறிப்பிட்ட நாட்டுப் பகுதிகளின் பயின்ற வழக்காக நடுகல் நடுவது இருந்தது போலும். ஆகவே தான் ஆநிரை காத்து மாண்ட மறவர்க்குச் செய்யும் நடுகற் சிறப்பு, மருத மன்னர்க்கும் சிறுபான்மை செய்யப்பட்டது. வடக்கிருந்தானுக்கு நடுகல் நட்டது அருமைக்குரிய தொன்றே. இந்நிலையினின்றும் புதிய திருப்பமாகப் பெண்ணொருத்திக்குக் கடவுள் எழுத இமயத்தினின்றும் கல் கொணர்ந்து கங்கையிற் படுத்துச் சேரநாட்டில் வழிபட்டதைச் சிலப்பதிகாரம் சாற்றும், இப்புதுநிலை, மரபாகாது நின்று விட்டமை குறிக்கத்தக்கது. கிடைக்கின்ற நடுகற்களில் சில வற்றில் பெண்ணுருவங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் அவர்க்காகக் கல் எடுக்கும் வழக்கு இல்லை போலும்! இடைக்காலத்துச் சங்கத் தமிழர் மரபு தொடர்கிறது. பல்லவர் காலத்தில் மிகப்பலவாக நடுகற்களைக் காண்கின்றோம், குறுநில மன்னர்கள் போர்கள், ஆநிரை மீட்பிற்காகப் பூசல், இவை தொடர்பாகப் பட்ட வீரர்களுக்கு நடுகற்கள் அமைத்துள்ளனர். பல்லவர் காலத்து உள்நாட்டு அமைதி குலைவுற்றே இருந்திருக்கிறது பல்லவர் காலப் போர்ச்சூழலில் ஆங்காங்கே மறவர்களுக்கிடையே ஆநிரை தொடர்பான பூசல்களும் மிக்கு இருந்தன. புறத் தாக்குதல்களினின்றும் தமிழர், தம் சமயம், கலை, மொழி, பண்பாடுகளைக் காக்கும் முயற்சிகளில் ஈடுபட்டமையைத் தமிழக வரலாறு தெளிவுறுத்தும். பல்லவர் காலம், தமிழர் வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலமாம். ஆகவே, பல்லவர் நாளில், பண்டைத் தமிழர் நடுகல் மரபினைப் போற்றிக் காத்து, மாண்ட வீரர்களைச் சிறப்பித்தல் காரணமாகத் தமிழர் தம் வீர உணர்விற்கு நிலையான சான்றுகளை உருவாக்குகிற உந்துதல் மக்களிடையே நிறைந்திருந்தது. எனவே, பல்லவர் கால நடுகற்கள் எண்ணிக்கையில் மிக்குள்ளன என்று கொள்ள இடமுண்டு

இந்நிலை மாறிச் சோழர் ஆட்சி தலை தூக்கிய நாளில் தமிழகத்துச் சமுதாய வாழ்வில் புதுத் திருப்பம் காண்கின்றோம். சோழர் வரலாற்றிற்கு அரண் செய்யக் கோயிற் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், மெய்க்கீர்த்திகளும் பெருகிப் பரவ, தொடர்ந்து நடுகற்களையும் போற்றினர். மரபு வழி வீரம் போற்றினர் ஆனால் பல்லவர் நடுகற்களைப் போல் உள் நாட்டுப் பூசல் காரணமாக நடுகல் நட்டனர் என்ற குறிப்பிற்கான நடுகற்களே இதுவரை கிடைத்துள்ளவற்றில் இல்லை என்பது குறிக்கத் தக்கது. அன்றியும் ஆநிரைகளையும் கூட கள்ளர் கொண்டு போகாமைக் காத்துப் பட்டனர் வீரர் என்ற குறிப்பையும் இங்கு நோக்க வேண்டும். எனவே உள்நாட்டு அமைதியைக் காக்க சோழர்கள் பெரிதும் முயன்றனர் என்பது பெறப்படும். அன்றியும், மாபெரும் மன்னர்கள் தம் வீரத்தை வழிபடும் வழக்குத் தலை தூக்கத் தொடங்கிய அந்நாளில், தனிப்பட்ட வீரர்களைப் போற்றும் நெறி முறையைத் தொடங்கிற்றே என ஐயுறவும் இடமுண்டு. ஆகவே கிடைத்துள்ள சோழர் கால நடுகற்கள், ஏற்கனவே நாம் அறிந்துள்ள சோழர் பற்றிய அரசியல்.

பொருளாதார, பண்பாட்டு வாழ்வியல் முறைகளை அரண் செய்வதாக அமைகின்றன.

## சோழர் கால நடுகற்கள்

"செங்கம் நடுகற்கள்" என்ற நூலில் சோழர் காலத்தனவாக ஐந்து நடுகற்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை வெளியிடப் படாத மூன்று நடுகற்களை உதவியருளிய தொல்பொருள் துறை இயக்குநருக்கு நன்றி பெரிதும் பாராட்டுவேன். இவற்றின் வாயிலாகச் சோழர் கால நடுகற்கள் காட்டும் சிறப்புச் செய்திகளை மேலே அறிதற்கு முற்படுவோம்.

கிடைத்துள்ள நடுகற்கள், 9, 10 ஆம் நூற்றாண்டிற்குப் பெரும்பாலும் உரியன. ஆதித்ய சோழன், முதற் பராந்தகன், முதலாம் இராஜராஜன், மூன்றும் குலோத் துங்க சோழன் ஆகிய மன்னர் காலத்தன.

வடார்க்காடு மாவட்டம் கடலாடி வேடியப்பன் கோயிலின் கீழே உடைந்து கிடக்கும் நடுகல் ஒன்று, பல் குன்றக் கோட்டத்துப் பங்கள நாட்டுக் காந்தளூர்க் கூற்றத்துக் கீழ் வேணாட்டுப் புதனாட்பாடி என்பான், கடலாடியில் அம்பலம் எடுப்பித்தான் எனக் குறிக்கின்றது. "இக்கல்வெட்டுப் பழமையானதொரு நடுகல்லில் பிற்காலத்தில் பொறிக்கப்பட்டதாகத் தெரிகிறது" என்ற குறிப்பு நூலில் காணப்படுகிறது.[7] அம்பலம் எடுப்பித்தார்க்கு நடுகல் எடுக்கும் மரபுண்டா என்பது ஆய்விற்குரியது. வீரனின் சிதைந்த உருவப் பகுதிகள் சில கல்லில் காணப்படுகின்றனவாம். நடுகல் செய்தி வேறாகத்தான் இருக்க முடியும். நடுகல் எடுத்துக் கோயிலாக்கினானோ புதனாட்பாடி என்பான் என்ற கேள்வியும் சிந்திப்பதற்குரியது. ஆயினும் இக் குறிப்பு வாயிலாகச் சோழ நாட்டுப் பிரிவினைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

முதலாம் பராந்தகன் காலத்தனவாகக் கிடைத்துள்ளவை ஐந்து.

அய்த்தாம்பாளையம் நடுகல்லில் மேற்கோவலூர் நாட்டு அளவிப்பாடி உடைய ஆந்தைப் பொன்னி மகன் மொடையன் தொறு மீட்டுக் கல்பட்டான் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

சாத்தனூர்க் கல்வெட்டு, ஆனைமங்கலமுடைய கள்ளன் தாழன் மேல்கோவலூர் நாட்டு அளவிப்பாடி தொறு மீட்டுப் பட்டான் எனக் குறிக்கிறது. இரு வேறு ஊர்களைச் சார்ந்த இருவர் ஒரே போரில் தொறு மீட்டுப் பட்டனர் என அறிகிறோம்.

தாழையூத்து நடுகல், தாழையூர் எருமைத் தொறு, கள்ளர் கொள்ள போகாமை தந்தையும் மகனும் பட்ட செய்தியைக் குறிக்கிறது,

கட்டமதகு கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை. கிலியனூர் ஏரி குறிக்கப் பெற்றுள்ளது.

காரப்பட்டுக் கல்வெட்டும் சோழ நாட்டுப் பிரிவு மட்டுமே குறிக்கிறது. பல்குன்றக் கோட்டத்து வேணாட்டைச் சுட்டுகிறது.

வடார்க்காடு மாவட்டம் தா. வேளூர் நடுகல் ஒன்று ஆதித்ய சோழன் காலத்தைச் சார்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மீய் கொன்றை நாட்டு மேல் வேளூருடைய பொங்கலத் தொண்டபன் மகன் வேம்படி என்பான் தொறுக் கொள்ளத் தொறு மீட்டுப் பட்டார் வேளூருடைய பொங்கலன் என்பார். இக்கல்வெட்டில் தொறுக் கொண்டார் பெயரும், மீட்டுப் பட்டார் பெயரும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இக் கல்வெட்டு இன்னும் வெளியிடப்படவில்லை.

இன்னும் வெளியிடப்படாத குலோத்துங்கச் சோழன் காலத்திற்குரிய குரிசிலாப்பட்டு நடுகல், அரசனது பன்னிரண்டாவது ஆட்சி ஆண்டைக் குறித்து, மானவங்க மகன் என்று அரைகுறையாக நிற்கிறது. இக்கல்வெட்டினால், நடுகல் மரபு தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தது என்ற குறிப்பை அறியலாம்.

செங்கம் மாவட்டம் வேடன்குப்பத்தில் முதலாம் இராஜராஜனது 'ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தி கிடைத்துள்ளது. சோழர் வரலாற்றுக்குரிய சிக்குரியது இது.

இனி, கிடைக்கப் பெற்ற, மேலே குறிப்பிட்ட நடுகற்கள் வாயிலாகச் சோழர் கால வரலாற்றிற்குரிய சில சிறப்புச் செய்திகளை அறியலாம்.

## அரசியல் வரலாறு

பெயரும் பீடும் எழுதிய சங்க கால நடுகல் அமைப்பு முறையின் வளர் நிலையாகச் சோழர் கால நடுகற்களில் மன்னர் பெயர், ஆட்சி ஆண்டு, நாட்டுப் பிரிவு, போர் நடந்த ஊர், தந்தை பெயர், கல் நின்றான் பெயர், கல் நின்ற காரணம் என்று வரன் முறையாகக் காணப் பெறுவது, இடைக்கால வளர்ச்சி கூறும். சோழ மன்னர்கள் ஐவரைப் பற்றி அறிகிறோம். பல்குன்றக் கோட்டம், பங்கள நாடு, காந்தளூர்க் கூற்றம், கீழ் வேணாடு, மேற் கோவலூர் நாடு, மேல் வேணாடு, மீய்கொன்றை நாடு, மேல் வேளூர் போன்ற நாட்டுப் பிரிவுகள் ஆய்வுக் குரிய துணை புரியும் அரிய செய்திகளாம். கடலாடி, அளவிப்பாடி, தாழையூர் (இப்போது தாழையூத்து என வழங்கப்படுகிறது) வேளூர், முதலான ஊர்ப் பெயர்களைக் காண்கின்றோம். கோட்டம், நாடு, கூற்றம், ஊர் என்ற வரிசையில் நாடு பிரிக்கப்பட்டிருந்தது என அறிகிறோம்.

மதுரை கொண்ட கோப்பரகேசரி என்று முதலாம் பராந்தகன் சுட்டப் பெறுகின்றான். கோப்பரகேசரி என்று மட்டும் குறிக்கப்பெறும் இரு கல்வெட்டுக் களும் விஜயாலனைக் குறிக்கும் என்பது இங்கு கருதத் தக்கது. இதன் வாயிலாக மற்றொரு வரலாற்று உண்மையும் 'செங்கம் நடுகல்' முன்னுரையில் இயக்குநரால் வலியுறுத்தப் பெறுகிறது. அதாவது,

" மதிரை கொண்ட என்று இல்லாமல், பரகேசரி என்று தொடங்கும் இரு கல் வெட்டுகளிலும் வாண கோவரையர் வேட்டுவதியரையர் என்பவர் குறிக்கப் பெறுகிறார், இவர் தென்னாற்காடு மாவட்டம் கீழூர் என்னுமிடத்தில் நிருப தொங்கவர்மனின் இரு கல்வெட்டுக்களிலும் குறிக்கப் பெறுகிறார். (இவை தவிர இதே இடத்தில் நந்திவர்மனின் கல்வெட்டில் வாணகோவரையன் காணப்படுகிறான்).

இப்பகுதியில் விஜயாலய சோழனின் 3, 4, 5 ஆம் ஆண்டைச் சார்ந்த சில கல் வெட்டுக்கள் உள்ளன. தஞ்சை கொண்ட பரகேசரி என இவன் ஒரு நடுகல்லில் குறிக்கப்படுகிறான். விஜயாலயனின் ஆட்சி இங்கு பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதலின் அண்மையில் கிடைத்துள்ள நடு கற்களில் குறிக்கப்பெறும் பரகேசரி, 'விஜயாலயன்' எனக் கொள்ளலாம். அவ் வாறாயின் விஜயாலயன் நிருபதுங்க வர்மனின் சமகாலத்தவனாகிறான். இது ஏற்புடையதாயின் பல்லவர் காலத்தின் இறுதியிலும் சோழர் காலத்தொடக்கத்தி லும் வரலாற்றில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கும்.[4] இக்குறிப்பினால் கால ஆராய்ச்சிக்கு நடுகற்கள் துணை நிற்கும் வியத்தகு உண்மையை அறிகிறோம்.

## பண்பாட்டு வரலாறு

நில்லா உலகம் புல்லிய நெறித்து. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் இறப்பிற்கும் அப்பாற்பட்ட நிலை பேற்றினை அடைகிறார்கள். கடமை யாற்றி மறைந்த செயல் வீரர்களைக் கல்லில் எழுதி வழிபடுவது, நம் கடமை உணர்த்து வதற்காகும். சங்க கால வீரக்கல் வழிபாட்டுப் பண்பாடு தமக்குணர்த்தும் உண்மைகள் சிந்திப்பதற்குரியன. அதனைச் சுமார் 16-ஆம் நூற்றாண்டு வரை, தமிழர் போற்றி வந்துள்ளமை நினைவிற் கொள்ளற்குரியது.

வீரர்கள் ஆநிரைகள் மீட்பதற்காகத் தம்முயிர் கொடுத்துப் புகழ் நிறுவி மாண்டனர். பாலை நிலப் பகுதிகளில் போர் நடந்த இடங்களிலேயே நிரை நிரையாக, எழுத்துப்பட்ட கற்களை அமைத்தனர் சங்கத்தமிழர். அக்காட்சியை 'வேலூன்று பலகை வேற்று முனை கடுக்கும்' என அகம் 67, 131-ஆம் பாடல்கள் குறிக்கும். வழிச் செல்வார் அவற்றைக் கண்டு போற்றவும், வீர உணர்வு கொள்ளவும் அவை வழிகாட்டின. வீர உணர்வை எழுப்பவும், வீரமரணம் அடைந் தாரைப் போற்றி நன்றி பாராட்டவுமாகத் தமிழர் கண்ட நெறி நடுகல் வழி பாட்டு நெறியாகும். வாழும் நெறியறிந்து வாழ்ந்து கல்நின்று காலம் கடந்த புகழுக்குரியாரைப் பாராட்டும் மரபினைத் தமிழர் காலம் காலமாகப் பின் பற்றியது பண்பாட்டின் மேம்பாட்டை உணர்த்தும்.

செங்கம் மாவட்டம் வறண்ட பகுதிகளைத் தன்னுட் கொண்டது. வான்மழை நோக்குவது. குறிஞ்சியும், முல்லையும் நல்லியல்பிழந்து பாலைத் தன்மை ஏற்றது. எனவே தான் மலை நாட்டிற்குரிய வீர மறவர்கள், வாழ்க்கைக்கு ஆதாரமான ஆநிரைகளைக் கள்ளர், பகைவர் கவர்கையில் உயிரைக் கொடுத்து மீட்டனர். பொருளாதார வாழ்வு செழிக்க இன்றியமையாத் தேவையான ஆநிரையை மீட்டுத் தந்தவர்களைத் தம்முயிர்த் தெய்வங்களாக மக்கள் போற்றியமை வியப்பிற் குரியதன்று. எனவே, நடுகற்களால் மக்கள் பொருளாதாரப் போராட்டத்தில்

வீரர்கள் கொண்ட பங்கு, ஆநிரைச் செல்வங்களின் சிறப்பு, அவற்றைப் பெறுதற்காக மேற் கொண்ட பூசல், பூசலில் மாண்டாரைப் போற்றியமை ஆகிய செய்திகளை உணர்கையில், சமுதாய வாழ்வின் அடிப்படைத் தேவைகளோடு நடுகற் செய்திகள் கொண்டுள்ள தொடர்பினை அறிந்து வியக்கிறோம். சுற்றுப்புறச் சூழல், மனித வாழ்வில் பெறும் தாக்குதலையும் (impact) உணர்கிறோம். போராட்டத்தில் முகிழ்க்கும் பண்பாடு வீரவழிபாட்டிற்கு வித்திட்டது.

இங்ஙனம் வழிவழியாய்த் தொடர்ந்த நடுகல் மரபு, சங்ககால மரபு, பல்லவர் மரபு, சோழர் மரபு என பல நிலைகளில் மாற்றங்கள் பெற்றுத் தமிழர் வாழ்வியல் கோட்பாடுகளுடன் ஒன்றி, வரலாற்று ஆய்வின் பல துறைகளுக்கும் நுழை வாயிலாய் அமைந்துள்ளமை குறிக்கத் தக்கது. வரலாற்று உணர்வுடன் அமைக்கப் பெற்ற நடுகற்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மூலமாய் தமிழக வரலாறு திருத்தம் பல பெற்றுப் புதுவடிவம் கொள்வதற்கான காலம் அண்மையில் உளது என்பதை இது போன்ற கருத்தரங்குகள் வலியுறுத்துகின்றன என்று நினைத்துப் பெருமிதம் கொள்வோம்.

---

1. Sangam Polity, N. Subramaniam, Asia Publishing House, P. 129-131.
2. புறம் 221, 264, 306, 329. அகம்: 53, 67, 131, 179, 387. ஐங்குறு: 352. மலைபடு கடாம்: 394-396.
   திருக்குறள்: "என்னை முன் நில்லன் மின் தெவ்விர் பலர் என்னை முன்னின்று கல் நின்றவர்.
3. செங்கம் நடுகற்கள், இரா. நாகசாமி, தொடர் எண். 1971\125.
4. செங்கம் நடுகற்கள், இரா. நாகசாமி, முன்னுரை. பக் VIII.

# நடுகல்லும் இலக்கியமும்

மா. ரா. அரசு

## முன்னுரை

உலக இலக்கியங்களுள் தமிழ் இலக்கியம் தனக்கே உரித்தான தனித்தன்மைகளால் சிறந்து நிற்கும் ஒன்றாகும். தமிழ் இலக்கியச் சிறப்பிற்கு அதில் இழையோடும் வரலாற்றுணர்வும் காரணமாம். தமிழர் வாழ்விற் காணப்படும் நடுகல் நடும் பழக்கம் பற்றித் தமிழ் இலக்கியங்கள் கூறுவதைப் பார்ப்போம்.

## நடுகல்லுக்குரியோர்

இறந்தவர்கள் எல்லோருக்குமே கல்நடுதல் வழக்கமாகப் போற்றப் பெறவில்லை. மணிமேகலை ஐவகை இறுதிச்சடங்குகளைப் பற்றி கூறுகிறது.. நடுகல் குறிப்பிட்ட சிலருக்கே நடப்பட்டுள்ளது. (1)போரில் தன் புகழ் நிறுத்தி வீரமரணம் அடைந்த வீரர்களுக்குக் கல் நடுதல் மரபு. (குறள் 771, அகம் 131, 387, 67, மலைபடுகடாம் வரி 386-389) (2)வடக்கிருந்து உயிர்நீத்தாருக்கு நடுகல் நடப்பெற்றது. இங்கு ஒரு செய்தியைக் கூற வேண்டும். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்ததால் மட்டும் நடுகல் எடுக்கப்படவில்லை. மாறாக அவன் ஒழுக்கம், செங்கோன்மை ஆகியவற்றிற்காகவும் நடுகல் எடுக்கப்பெற்றது என்றும் கருதலாம். (3) பத்தினிப்பெண்டிர்க்கும் நடுகல் எடுக்கப் பெற்றது.

## நடுகல் இருக்கும் இடம்

நடுகல் இருக்கும் நிலம் பற்றி புறம் 314-ஆம் பாட்டில் கூறப்பட்டுள்ளது. தாழைகள் நிறைந்த பாழ்பட்ட நிலத்தில் நடுகற்கள் உள்ளன. இவ்வகையான பாழ்நிலம் ஊர் நடுவில் இருக்கவில்லை. ஊரின் புறத்தே உள்ளது. ஊரின் புறத்தே காய்ந்த களர் நிலங்களில்தான் நடுகற்கள் நடப்பட்டன. (புறம் 260, 265, அகம் 179, 387) "பெரும்பாலும் நடுகற்கள் ஊரின் புறத்தே காணப்படுகின்றன. ஊர்களின் நடுவில் காணப்பெறவில்லை" (செங்கம் நடுகற்கள்-முன்னுரை) போரில் பட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லைச் சுற்றி அரண் போல வேலும் கேடயமும் நடப்பெறும். (பட்டினப்பாலை, 78-80, அகம் 131)

## நடும் முறை

நடுகல்லை நடும்முறை பற்றி பாட்டும் தொகையும் நமக்கு விளக்கு கின்றன. இறந்துபட்ட வீரனின் பெயரும் பெருமையும் எழுதப் பெற்று மயிற்பீலி சூட்டி நடுகல்லை நடுவர் (புறம் 243). சங்க காலத்தில் அரசர் நடுகற்களுக்குக் கோட்டம் எடுக்கப்பட்டது பற்றிய குறிப்பு யாண்டும் காணப்படவில்லை.

தொல்காப்பியர் காலத்தில் இறந்த வீரனுக்குக் கல் நடப்பட்டதே அன்றி அக்கல்லில் உருவமும், அவன் பீடும் பேரும் பொறிக்கப் பெறவில்லை. இக்கருத்து ஏற்புடைத்தாயின் தொல்காப்பியர் காலத்திற்கும் சங்ககாலத்திற் குமிடையே ஏற்பட்ட மாற்றத்தைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன என்று கொள்ளலாம். சங்ககாலத்தில் நடுகல்லில் இறந்தவர்களின் பேரும் பீடும் பொறிக்கப்பட்டன. இது நடுகல் வரலாற்றில் ஒரு வளர்ச்சி நிலை. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பெண்ணுக்கு நடுகல் எடுத்தது பற்றிக் கூறவில்லை. சிலப்பதிகாரம் பெண்ணுக்குக் கல் எடுத்தது பற்றி கூறுகிறது. கல்லெடுப்புடன் கோயிலும் எடுக்கப்பெற்றது. நடுகல் வரலாற்றில் இலக் கியம் உணர்த்தும் அடுத்த வளர்ச்சி நிலையை இது காட்டுகிறது. கோட்டம் அமைத்த நிகழ்ச்சியானது பிற்காலத்துப் பள்ளிப் படைக்கு முன்னோடியாக அமைந்தது எனலாம்.

## நடுகல் வழிபாடு

வீரன் நடுகல்லை அவனுடைய சுற்றத்தினரும் வழியினரும் வழி பட்டனர். நடுகல் போர்த்தெய்வமாகவும் வழிபடப்பட்டது. முல்லை நில மக்கள் நடுகல் வழிபாடு செய்வதன்றி வேறெந்த வழிபாடும் செய்தறியா தவர். (புறம் 335) புறம் 329-இல் நடுகல்லுக்கு விடியற்காலத்தில் செய்யப் பட்ட வழிபாட்டினைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. அகநானூறு 297-ஆம் பாட்டில் நடுகல்லில் அம்புகளைத் தேய்த்துக் கூராக்கினர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

# SOME HERO-STONES IN THE PANDYAN COUNTRY

**Dr. K. V. Raman,**
Deputy Superintending Archaeologist,
Archaeological Survey of India.

The purpose of my paper is to give a brief account of some of the hero-stones that have been found in the Pāndyan Country. But before that, I would like to make some preliminary observations on two related aspects – one on the diffusion pattern of hero-stones and another on the significance of meaning of the terms *Nadu-Kal*, and *Vira-Kal.*

1. DISTRIBUTION PATTERN: From the distribution map of the provenance of the hero-stones it would appear that they have a high concentration in the north western portions of Tamil-nadu. The hero-stones discovered recently by the Department of Archaeology, Tamil Nadu have highlighted this point viz, greater availability of the Vira-Kals in the districts of North Arcot, Dharmapuri, Salem etc. than in other parts of Tamilnadu. It is well known that neighbouring tracts of the Kannada Country also, and the ancient land of the Gangas, Nolambas etc, *Vira-gallus* have been found. They have been found as far west as the Kadamba country (near Goa). In the vicinity of Chittoor District alone more than 100 virakals have been found.

Comparatively speaking, the impact of this practice of erecting stones for heroes seems to have been less on the Pandyan Country, if we are to judge by the number of hero-stones available. It seems to have been prevalent more in the Tondaimandalam and Kongu Mandalam than in the Pandyan or even the Chola territory. The reasons for this pattern of distribution have to be carefully studied in the entire south Indian context. This will also give us an idea of the source of diffusion.

2. NADU-KAL AND VIRA-KAL: I would also invite discussion by Scholars about the difference if any between *Nadu-Kal* and *Vīra-Kal.* It appears to me that the former refers to a mode of burial, funerary in nature, that was popular during the Megalithic and subsequently in Sangam

times. From the *Tolkāppiam* and *Manimēkhalai*[1] we know the Nadu-Kal was a stone-chamber or stone erected over the post-excarnation remains of the dead person. This was practised as a burial mode even for an ordinary person, not necessarily a hero. In fact, *Nadu-Kal* had come to be synonymous to the dead and since the dead were honoured, the *Nadu-Kals* were also worshipped (*Nedum Kal Ninra Manram-Silap.* V. line 127). The way in whieh even in common parlance *Kalleduppu* is used euphemistically to refer to the death of a person, it may indicate the prevailing custom of erecting stones over the remains of the dead persons. Thus, the *Nadu-Kals* were evidently funerary or sepulchral in nature (like the Megalithic Dolmen) and were used for the common folk also. But the *Vīra-Kals* on the other hand, were probably a special class, erected to commemorate only the heroic acts of a person or group of persons. The *Vira-Kals* were exclusive for the heroes alone. Moreover, they were probably not erected over the remains but only raised as memorials. Regular excavation below some of the *Vīra-kals* would throw some light on this aspect. This would also lead to the question whether in the Sangam literature itself, there was any distinction made between the *Nadu-kal* and the *Vīra-kal.* Since all the Vīra-kals so far found, are datable only to the 5th-6th Centuries A.D. at the earliest, on the palaeographical grounds, what about those ones which were earlier to that period? In Nagarjunakonda (Guntur District) memorial stones called *Chāya-Kamba* with Prakrit inscriptions dating to 3rd Century A.D. have been found.[2]

Probably, the earliar practice of Dolmen-burial had gone out of vogue by about the 5th Century A.D. and cremation became almost universal. Stone memorials were erected only for the heroes.

3. Hero Stones in the Pandyan Country: Now let me briefly refer to the two hero-stones that have come from Vilinjam in the Southern coastal tip. Both the hero-stones are now kept in the Padmanabhapuram Museum[3] Both are in honour of heroes who laid down their lives in the battles that took place in Vilinjam when it was sought to be captured once by the Pandyas and another time by the Cheras. The region was under the Ay chieftains, who had ruled first in a semi-independent position and later under the over all control of the Pandyas. Both the hero-stones bear Vaṭṭeḷuttu inscriptions datable to the 8th Century. A D. One of them records that the hero

discharged his debt (Senjōṟṟupperunkadan) by giving up his life for the sake of his master, whose identity is not known. The capture of Vilinjam is mentioned frequently as an important achievement of the Pandyan kings right from the days of Nedunjadian Parāntaka. This inscription may well belong to him or his successor Sri Māran Sri Vallabha. The stone also bears the figure of the warrior unsheathing his dagger.

The other hero-stone from the same place, dated 27th year of Māranjaḍaiyan, records that when the Chera forces attacked Karaikkōttai-Tadam-Perumtinai, a *Ulvīttusēvaka* by name Ranakīrti of Perumur laid down his life.[4]

While the majority of the hero-stones in Tondaimandalam were erected in honour of those who took part and fell in the border skirmishes or cattle raids, these two hero stones of Vilinjam relate to the warriors who defended their masters in regular battles.

Other than these two, hero-stones are not many in Pandyan country. Probably, this has something to do with the predominence of the Urn-burial custom in the Pandyan region. Even kings' remains were interred in the Burial-Urns. Stone erection, when compared to Tondaimandalam and Kongu regions, was less popular in the Pandyan country.

4. MEMORIAL SHRINE IN PANDY-NADU: The practice of erecting temples (*Paḷḷipaḍai*) over the bodies of the departed king or prince or in their memory was prevalent in a limited way in the Tamil country. Such sepulchral temples were erected by Parantaka-I, Rāja Rāja-I and Rājēndra I at Tondamanād, Melpadi and Arrur respectively. This custom was disapproved and discarded later on, as clearly attested by the inscription of Ramanathan koil.[5] This practice was apparently never adopted in the Pandyan country. We have perhaps only one example of this kind. There is the temple of Sundarapāndyēśvaram at a place named Pallimadam in Ramanathapuram District. In the inscription, the place is referred to as Paḷḷippaḍai built in honour of Sundara Pāndya, the younger brother of Chōḷan-talaikoṇḍa-Vīra Pāndya.[6]

The Sepulchral temples cannot be directly associated with the hero-stone tradition but the underlying principle of honouring the dead by erecting a monument is a common link between them.

5. HERO STONES OF LATER PERIOD: Curiously, however, when the practice of erecting hero-stones had almost gone out of vogue elsewhere, it seems to have lingered on in the Pandyan Country; Thus, we have a group of scluptured hero-stones belonging to the 16th Century near the village of Ilavevangal in Koilpatti Taluk.[7] There are nine hero-stones with inscriptions many of which depict a series of conflicts between Tirunelveli-perumāl and his rebel chieftain Vengalaraja. Many Marava soldiers of Kundaiyankōṭṭai who fought on the side of Tirunelveli-perumāl laid down their lives after piercing the horse of the opponent (*Kudirai Kutti Paṭṭān*). The ruling chief on the region was the later Pāndya King Kulasēkhara Parākrama Pāndya whose brother was Tirunelveliperumāḷ. Most of the inscriptions are dated S' 1469 (= A.D. 1547). The field where the hero-stones are set up was probably this scene of the battle.

This group of hero-stones erected in the old tradition with sculptures of warriors and inscriptions would show prevalence of this system even upto the 16th Century in the Pāndyan Country.

Thus, on the whole, the hero-stone tradition, does not seem to have been popular in the Pāndyan country especially in the earlier times. The areas where the practice was very much in vogue were probably Tondai-nāḍu and Kongu-nāḍu which shared this legacy in common with the neighbouring Karnātaka regions.

---

1. Tol, Porul, 2:5.
2. Indian Archaeology. 1955-56, p.24.
3. Ibid, 1958-59. p.471. TAS. Vol.I, p.p. 153. ff.
4. Indian Archaeology, 1958-59. p.471.
5 K.A.N. Sastri. Cholas, p.4.
6. S.I.I. XIV, No, 79.
7. ARE. 1939-40, p. 253.

# நடுகல் — உள்ளும் புறமும்

மா. சந்திரமூர்த்தி எம். ஏ.
தொல்பொருள் ஆய்வாளர்.

வடஆற்காடு மாவட்டம் செங்கம் பகுதியில் உள்ள நீண்ட மலைத்தொடர் சவ்வாது மலைத்தொடராகும். இம்மலைநாட்டுப் பகுதி வரலாற்றுத் தொடர்புடைய தாகும். இது நன்னனின் மலைநாட்டுப் பகுதியாகும். சவ்வாது மலையடிவாரத்து வழியில் 8 கல் தொலைவில் செங்கம் என்னும் ஊர் அமைந்துள்ளது. இது நன்ன னின் பெருநகராகும்.

'இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர், பல்குன்றக் கோட் டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னனைப் பாடிய மலைபடுகடாம்' என உரையா சிரியர் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். இம்மலைப்பாட்டு, நடுகல்லைக் காண விழையும் அரியதொரு நெடுவழியைக் காட்டுவதோடல்லாமல், நன்னனின் கோநகரை அடையும் வழியையும் குறிக்கிறது. பத்துப்பாட்டுக்களில் ஒன்றான மலைபடுகடாம் பாடல் பற்றி இவ்வூர் சிவன் கோயில் கல்வெட்டுகளிலும் குறிப்பு காணப்படுவது சிறப்புடையதாகும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலப் பாடல் கல் வெட்டு ஒன்று, 'மூவண்டறை தார்மன்னர் மலைபடைத் தெந்மன்னரை வென்கண்ட திறற் காங்கேமன் கண்சிவப்ப-பண்டே மலைகடாம் பாட்டுண்ட மாலவரை செஞ்சொரி அலைகடாம் பாட்டுண்டது' எனக் குறிக்கிறது.

## ஊரும் பேரும்

இவ்வூரைப் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மா என்றும், செங்கமா என்றும், செங்கைமா (S.I.I. VII 117) என்றும், செங்கை (1971-78) என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவ்வூர் இன்று செங்கம் என அழைக்கப்படுகிறது. இவ்வூருக்கு அருகில் செய்யாற்றின் கரையிலுள்ள "நன்னன் மேடு" என்ற சிதைந்த மண் கோட்டையின் எஞ்சிய பகுதிகள் செங்கத்தின் தொன்மையை விளக்கும் சான்றாக அமைந்துள்ளன. அந்தனூர், பெருர்பட்டினம் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கறுப்பு சிவப்புப் பானை ஓடுகள் இப்பகுதியின் பழமையைக் கணிக்கும் சான்றாகும்.

இச்செங்கத்தைச் சூழ்ந்து அரசனேந்தல், அல்லியேந்தல், ஆயிமனந்தல், ஆனந் தல், கன்னக்கந்தல், சேரனேந்தல், தேவனேந்தல், நந்தல், நன்மியேந்தல், பரம னேந்தல், வீரனேந்தல் என்ற ஊர்ப் பெயர்கள் இப்பகுதியின் வளம் செழித்த வர லாற்றை எடுத்துக் காட்டுகின்றன. ஏந்தல், தாங்கல் என்று முடியும் சொற்கள் ஏரியைக் குறிப்பனவாக ஊர்ப் பெயர்களில் வழங்குகின்றன.

இன்னும் சமுத்திரம் என்று முடியும் சொல் நீர்நிலைகள் நிலைபெற்று இருந்ததைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, சின்னசமுத்திரம் என்னும் ஒரு ஊர் இப்பகுதியில் உள்ளது. மற்றும் இப்பகுதியைச் சார்ந்த அரசன்கண்ணி, அந்தனூர், களத்தூர், காவாடு, பெரும்பட்டினம் என்ற ஊர்களின் பெயர்கள் இவ்வூரின் வரலாற்றுத் தொன்மையினை எடுத்துரைக்கின்றன. கருங்காலி மரத்தில் பண்டு யாழின் கோடு செய்யப்பட்டது (பொ. ஆ. படை. அடி. 21-2 உரை). யாழை முக்கிய இசைக் கருவியாகக் கொண்ட பாணர் வசித்த மலைப்பகுதியும் இதுவேயாம். எனவே இத்தகைய கருங்காலி மரங்கள் நிறைந்த பட்டி கருங்காலிப்பாடிப்பட்டி எனப் பட்டது எனக் கருதலாம்.

வடஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் இன்று நடைமுறையில் வழங்கும் பெயர்கள் நடுகல் கல்வெட்டுகளில் சில மாற்றங்களுடன் குறிக்கப்படுகிறது. சில பெயர்கள் அதே பெயரிலும் உள்ளன.

| வழங்கும் பெயர் | கல்வெட்டுகளில் குறிக்கும் பெயர் | | | |
|---|---|---|---|---|
| ஆனந்தவாடி | ஆந்தைபாடி | (செங்கம் | நடுகற்கள் | 1971/77) |
| இளங்குண்ணி | இளங்குன்றி | ,, | ,, | 118 |
| கருங்காலிப்பாடிப்பட்டி | கருங்காலிப்பாடி | ,, | ,, | 114 |
| கடலாடி | கடலாடி | ,, | ,, | 125 |
| கீழ்இராவந்தவாடி | இராமந்தைவாடி | ,, | ,, | 51 |
| கிலியனூர் | கிலியனூர் | ,, | ,, | 81 |
| கூடலூரர் | கூடல் | ,, | ,, | 50 |
| கோரையாறு | கோரைகோட்டு | ,, | ,, | 85 |
| சாத்தனூர் | சாத்தனூர் | ,, | ,, | 37 |
| தாழையூத்து | தாழைஊர் | ,, | ,, | 75 |
| துக்காவாடி | தொக்கைபாடி | ,, | ,, | 79 |
| தொரைப்பாடி | தொப்புரவருப்பாடி | | ,, | 30 |
| பிஞ்சூர் | நந்பெருமாபுஞ்சிஊர் | | ,, | 72 |
| மணிக்கல் | மணிக்கலவடலூர் | ,, | ,, | 118 |
| மேல்பள்ளிப்பட்டு | மேற்செங்கை | ,, | ,, | 78 |
| வீரணம் | வெண்ணம் | ,, | ,, | 46 |

மலைகள்

சவ்வாது மலைத்தொடர் வேலூருக்குத் தென்மேற்கே 8 கல் தொலைவில் தொடங்கி, திருப்பத்தூர் வட்டத்தின் தென்கிழக்கு பகுதி (சிங்காரப்பேட்டை) வரை சுமார் 35 கல் தொலைவு பரவியுள்ளது. இம்மலைத்தொடர் வேலூர், போளூர், செங்கம், திருப்பத்தூர் ஆகிய நான்கு வட்டங்களிலும் பரவியுள்ளது. இம்மலைப் பகுதியில் பாணரும், மலையரண் முதலிகளும் வாழ்ந்தனர் என்பதை இலக்கியமும், கல்வெட்டுகளும் விரித்துரைக்கின்றன.

இப்பகுதியில் மலையும் மலையைச் சார்ந்ததாகிய குறிஞ்சி நிலப்பரப்பே அதிகமாக உள்ளது. சவ்வாது மலைத்தொடரில் நவிரமலை, பெரியமலை, சின்னமலை, தென்மலை, வடமலை, ஆட்டைமலை, பெருமாள்மலை ,மூலைக்காட்டுமலை எனப் பல மலைகளுள்ளன.

இம்மலைப் பகுதியில் சுமார் 125-க்கு மேற்பட்ட சிற்றூர்கள் அமைந்துள்ளன. பெரியமலையின் அடிவாரத்தில் கருங்காலிப்பாடிப்பட்டி, குலும்பப்பட்டி, இளங்குண்ணி, மணிக்கல் முதலிய ஊர்கள் அமைந்துள்ளன. ரெட்டிமலை அடிவாரத்தில் பள்ளிப்பட்டு அமைந்துள்ளது.

## நவிரமலை

நன்னனது நாட்டைச் சார்ந்த மலைகளில் நவிரமலை சிறப்புடையதாகும். இதனை 'நவிரம்' என மலைபடுகடாம் கூறும் (மலை, வரி-82). இலக்கியங்களில் குறிக்கப்படும் நவிரமலை இன்று 'பர்வதமலை' என்றும் 'திரிசூலகிரி' எனவும் அழைக்கப்படுகிறது. சவ்வாது மலைப்பகுதியில் துரிஞ்சாபுரம் காட்டில் உள்ள பாறைக் கல்வெட்டுகளில் நவிரமலை குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். செங்கம் சிவன் கோயில் கல்வெட்டுகளிலும் நவிரமலை குறிக்கப்படுகிறது. (தெ. இ. க. தொகுதி. 7. எண். 118)

## காளகண்டேசுவரர் கோயில்

நவிரமலை என்ற பர்வதமலையில் சிவபெருமானுக்கென்று எடுக்கப்பட்ட கோயில் உள்ளது. இது ஸ்ரீ காளகண்டேசுவரர் கோயில் என அழைக்கப்படுகிறது. இறைவன் திருப்பெயர் ஸ்ரீ காளகண்டேசுவரர் என்பது. மலைபடுகடாம், நவிரமலையில் காரியுண்டிக் கடவுளுக்குக் கோயில் இருந்ததாகக் குறிக்கிறது.

பேரிசை நவிர மேஎ யுறையும்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும் —மலை. வரி-82-83.

காரியுண்டிக் கடவுள் என்பவர் நஞ்சை உண்டியாகக் கொண்ட சிவபிரான். சிவபிரானைக் 'காரியுண்டிக் கடவுள்' என்றார் தேவரும் (சீவ 674). இவனையே நீலகண்டன், ஆலகண்டன், கறைக்கண்டன், கறைமிடற்றன் என்று கூறுவர். எனவே இவ்விறைவன் காளகண்டேசுவரர் என அழைக்கப்படுவதால் இலக்கியம் குறிக்கும் காரியுண்டிக் கடவுள் இவராக இருக்கவேண்டும்.

## நவிரமலை நடுகல்

இம்மலைப் பகுதியில் இரண்டு இடங்களில் விழுப்புண்பட்ட வீரமறவர்களுக்குப் பெயரும், பீடும் எழுதி நடுகற்கள் நடப்பட்டிருந்ததையும் அவை மராமரத்தின் கீழ் அமைந்திருந்ததையும், அவற்றைக் கூத்தரும் விறலியும் யாழ் கொண்டு பாடி மகிழ்ந்து வணங்கியதையும் இலக்கியம் கூறும் (மலை- அடி-386-96), இதனை 'நல்லிசைப் பெயரொடு நட்டகல்' என மலைபடுகடாம் (அடி. 388-89) புகழ்ந்து பாடும்.

இப்பகுதியில் ஆய்வு செய்தபொழுது சங்ககால நடுகற்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இப்பகுதியில் பல்லவ மன்னன் முதலாம் பரமேச்சுவரவர்மன் கால நடுகல் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் மொசவேடியப்பன் என்று அழைக்கப்படுகிறது.

## காடும் வளமும்

இம்மலைகளைச் சூழ்ந்து குறுங்காடுகள் பல நிறைந்துள்ளன. இப்பகுதியில் ஆனந்தவாடி காடு, செங்கண்மா காடு, இராமாபுரம் காடு, கல்லாவி காடு, காவாடு, கிழக்கத்திக் காடு, முலைக்காடு, துரிஞ்சாபுரம் காடு முதலிய காடுகள் உள்ளன. ஆங்காங்கே காட்டுப் பகுதியிலும், ஆற்றங்கரையிலும் வேட்டுவர் குடியிருப்புகள் காணப்படுகின்றன.

## முல்லை நிலமும் நடுகல்லும்

இங்குள்ள காட்டுப் பகுதிகளில் முல்லைக்காடு, காவாடு ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கன. இவை முல்லைக்காடு, காவற்காடு என்ற சொற்களின் திரிபாக இருக்கலாம். நவிரமலைப் பகுதியில் தூசிப்படையும் கோட்டையும் குறிக்கப்படுகிறது. காவற்காடு அருகில் பாசறை அமைத்தல் பண்டைய மரபு. எனவே இப்பகுதியில் போர்கள் அதிகம் நடந்திருக்க வேண்டும். இந்நீண்ட சவ்வாது மலைத்தொடர்ப் பகுதி தொண்டை நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் இடையே பெரிய மலையரணாக அமைந்திருந்த காரணத்தால் இப்பகுதியில் அதிகப் போர்கள் நடந்தன என அறியலாம். எனவேதான் செங்கம் வட்டத்தில் நடுகற்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன.

சிறப்பாக இங்குள்ள மக்கள் நடுகல்லைத்தான் முக்கிய தெய்வமாக வழிபடுகின்றனர். முல்லைநில மக்களைப் பாட முற்பட்ட மாங்குடி மருதனாரும் அவர்கள் வணங்கும் தெய்வத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, நடுகல் வீரர்களைப் பரவுவதன்றி வேறு கடவுளரை வணங்குவதை அவர் அறியார் எனக் குறிப்பிடுகிறார் (புறம். 335). மேற்குறித்த கருத்தை இவ்விலக்கியச் செய்தி உறுதிப்படுத்துகிறது.

## குடில்கள்

சவ்வாது மலையடிவாரங்களிலும், மற்ற மலைப்பகுதிகளிலும் பல்வேறு இனத்தவரின் குடில்கள் அமைந்துள்ளன. வேடர்கள் குடிசைகள் யாவும் மண்ணால் சுவர் எழுப்பப்பெற்று, தினையரிந்த தாளாலும், சோளத்தட்டையாலும், மலைப்புல்லாலும் வேயப்பெற்றுள்ளன.

## மரங்கள்

இக்குடில்களைச் சூழ்ந்து புன்னை, கொன்றை, வன்னி, கடம்பு, நாவல், பலா, மூங்கில், வாழை, யானைமரங்கள் உள்ளன. இறுதியில் குறிப்பிட்ட யானைமரம் இலக்கியம் குறிப்பிடும் 'யா' மரமாக இருக்கலாம்.

உம்பல் லகைத்த வொண்முறி யாவும் --மலை. அடி. 429.

## பல்குடியினர்

இப்பகுதியில் வேடர், போயர், பறையர், குறும்பர், இருளர், கவுண்டர் என்ற இனமக்கள் காடுகளின் நடுவே உள்ள சிற்றூர்களிலும், மலையடிவாரங்களிலும், ஆற்றோரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தொன்மைக்குச் சான்று தரும் வகையில் நடுகற்கள் சில வேட்டுவர் (செ. ந. 1971/74), கவுண்டர் (1971/37)

கட்டி (1971/66), மழவர், வடுகர் (1971/89) பற்றியும் அவர்கள் போரில் வீர மரணம் அடைந்ததையும் குறிக்கின்றன. செங்கம் சிவன் கோயில் கல்வெட்டுகளில் இருளர், உவச்சர், சங்கிலியர், மலையரண்முதலிகள் (தெ. இ. க. தொ, 7 எண் 118) முதலியோர் குறிக்கப்படுகின்றனர்.

## வேடர்கள்

இப்பகுதியில் வேடர், வேட்டுவர், வேட்டுவ வெள்ளாளர் என்ற பல பிரிவினர் உள்ளனர். இவர்கள் வேடர் என்ற பூர்வீகக் குடிமக்கள் வழியினர். கன்னட தேசத்தில் இருந்து இப்பகுதிக்கு வந்துள்ள 'வேடர்கள்' போயர் என அழைக்கப்படுகின்றனர். வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வேட்டுவக் குடியினர் வேட்டுவ வெள்ளாளர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெரியமலை அடிவாரத்திலும், கருங்காலிப்பாடிப்பட்டி, புளியம்பட்டி, மணிக்கல் என்ற பகுதியிலும் வேளாண்மை செய்து வருகின்றனர். கவுண்டர் என்பது இவர்களின் சிறப்புப் பட்டமாகும்.

## தலைவர்கள்

இவர்கள் பண்டு தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த முறையினைச்செவிவழி செய்தியாய் அறியலாம். அம்முறை சுவையானது. ஆண்டுக்கு ஒருமுறை வீட்டுக்கொருவர் தலைவராகலாம். மறு ஆண்டு மறு வீட்டினர் முறையே தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் இன்று இப்பகுதிகள் சில செங்கம் ஊராட்சி ஒன்றியத்தில் இணைந்துள்ளன. சில ஊர்கள் இன்னும் தனித்துள்ளன. அங்குள்ள ஊர்த்தலைவர்கள் 'நாட்டாமை' என அழைக்கப்படுகின்றனர். இம்மக்களில் பலர் வேடசாமி எனப் பெயர் பெற்றுள்ளனர்.

## உணவு முறை

இவர்களின் முக்கிய உணவு அரிசி, வரகரிசி, தினைச்சோறு, சாமைச்சோறு, கம்பு, சோளக்கூழ், முதலியன. இறைச்சியை இவர்கள் விரும்பி உண்கின்றனர். இவர்கள் கடமை, முயல் முதலியனவற்றை வேட்டையாடுகின்றனர்.

## பட்டி அமைத்தல்

இவ்வேட்டுவ இனத்தினர் ஆடுகளையும் மாடுகளையும், பகலில் காடுகளில் மேய்த்து விட்டு இரவு நேரங்களில் ஆட்டு மந்தைகளை நிலங்களில் வேலி அமைத்து. அதில் அடைத்து விடுகின்றனர். இதனைப் பட்டி என அழைக்கின்றனர். இப்பழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்ததால் இவ்வூர்களின் பெயர்கள் சில பட்டி என்றே முடிகிறது. உதாரணமாகக் கருங்காலிப்பாடிப்பட்டி, புளியம்பட்டி முதலியவற்றைக் கூறலாம். இவர்களில் சிலர் வேடன்குப்பம் என்னும் ஊரில் வாழ்கின்றனர், இவ்வேட்டுவர் தங்கிய குப்பம் அவர்கள் பெயரிலே உள்ளது சிறப்பாகும். இங்கு இராஜராஜன் கால நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

## நடுகற்கள்

இம்மக்கள் வழிபடும் தெய்வம் வேடியப்பன் ஆகும். இத்தெய்வங்கள் பொதுவாக வேடியப்பன் வனத்தில், எட்டி, புன்னை, வன்னி, கடம்பு மரங்களின் கீழே

நிறுத்தப்பெற்றுள்ளன. இத்தெய்வங்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்தும், அதன் அமைப்பைப் பொறுத்தும் அத்தெய்வங்களின் பெயர்கள் வழங்கப் படுகின்றன. உதாரணமாக இவைகள் காட்டு வேடியப்பன், கரிய வேடியப்பன், தொண்டி வேடியப்பன், முனியப்பன், போத்தராஜன் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. சில பெயர்கள் வரலாற்றுத் தொன்மைச் சிறப்பைத் தாங்கியுள்ளன.

பெரியமலை அடிவாரத்தில் ஒரு நடுகல் எடுக்கப்பெற்றது. இது பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் காலத்தது. இக்கல்லை இப்பகுதியினர் போத்தராஜன் என அழைக்கின்றனர். 'மகேந்திர போத்தராதிராஜன்' என்பது மகேந்திர வர்மனின் பட்டப் பெயர்களில் ஒன்று என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

## போயர்

இவர்களில் சிலர் இப்பகுதியில் தங்கியுள்ளனர். இவர்கள் பேடர் என்ற இனப்பிரிவினர். இவர்கள் போர்த்தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களில் சிலர் வேட்டுவ வேளாளர்களிடம் புன்செய் நிலத்தில் பணி புரிகின்றனர். வட்டுடை தரித்து, சுருட்டை முடியுடன், கருத்த மேனியராகக் காட்சி அளிக்கும் இப்போயர்கள் சிலர் காடுகளின் உட்பகுதியில் தங்கியுள்ளனர்.

## வேட்டை முறை

இவர்களின் முக்கிய தொழில் வேட்டையாடுதலாகும். இவர்கள் வேட்டை யாடும் முறை வேடிக்கையானது. இரவு நேரங்களில் காட்டுப்பன்றிகளை வேட்டை யாடுவதற்கு ஒரு தந்திரம் கையாளுகின்றனர். முழுத் தேங்காயைக் குடைந்து துளையிட்டு, அதனுள் வெடியுப்பு மருந்து முதலியன இட்டு அடைத்து விடுகின்றனர். இத்தேங்காய் மீது சாமைச் சாதத்தினை வைத்து உருண்டையாக்கிவிடுன்றனர். இரவு நேரங்களில் தினைக் கொல்லைக்கு வரும் காட்டுப் பன்றிகள் உணவு என் றெண்ணி அதனைக் கடிக்கும் பொழுது மருந்து வெடித்தவுடன் வாயில் காயப்பட்டு பெரும் சத்தத்துடன் வெளியே ஓடும்பொழுது அப்பகுதியில் உள்ள வலையில் மாட்டிக் கொள்கின்றன.

இதன் சத்தத்தை கேட்ட போயர்கள் தடியுடன் வந்து வலையில் உள்ள பன்றியை அடித்துக் கொல்கின்றனர். பின் அப்பன்றியின் நான்கு கால்களையும் கட்டி மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு, கீழே நெருப்பையிட்டு பொசுக்கு கின்றனர். பிறகு முடிகள் பொசுங்கிய பன்றியைக் கீழே இறக்கி அதன் உடலின் மேல் மஞ்சள் சாந்துகளைத் தடவி மீண்டும் பொசுக்குகின்றனர். இறுதியில் அப் பன்றியை வெட்டி, வீட்டுக்கு ஒரு கூறுகப் பங்கு போட்டுக் கொள்கின்றனர். இதுவே அவர்களின் சிறந்த மாமிச உணவு ஆகும்.

இத்தகைய கொடிய வழிகளில் நேரில் செல்லும் பொழுது, பன்றிப் பொறிகள் உள்ள வழிகளில் பகலில் செல்ல வேண்டும் என்ற கருத்துப் பொதிந்த பாடல்கள் எங்கள் நினைவுக்கு வந்தன (மலை 193-196)

'விளைபுன நிழத்தலிற் கேழல் அஞ்சிப்
புழைதொறு மாட்டிய இருங்கல் அரும்பொறி
உடைய வாறே நள்ளிருள் அலரி
விரிந்த விடியல் வைகினிர், கழிமின்'

எனவே பண்டைய பழக்கம் இன்றும் இருப்பது சிறப்புடையதாகும்.

## இருளர்கள்

இவர்கள் மலையைச் சார்ந்த காடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் இருக்கும் இடங்களுக்கு ஊர்ப் பெயர் இல்லை. பொதுவாக இருளர்குப்பம் என அழைக்கப் படுகிறது. வடஆற்காடு பகுதியில் 18 இருளர்கள் உள்ளனர் என 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக் குறிப்பு கூறுகிறது. ஆனால் இப்பொழுது 30க்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். இவ்வினத்தவர்கள் வர வகையிரா என்றும் தர்மராஜா வகையிரா என்றும் இருபிரிவினராக உள்ளனர். இருளர், அருளப்பள்ளர் என்ற உட்பிரிவுகளும் உள்ளன.

இவர்களது குடில்கள் அரைவட்டங்களாகக் காட்சி அளிக்கின்றன. மலைப்புல் கொண்டு கூரை வேய்ந்து வள்ளிக் கொடிகளைப் பின்னி விடுகின்றனர். பொதுவாக இவர்கள் காலையில் சூரிய உதயத்திற்குப் பின் வீடுகளில் தங்குவதில்லை. காட்டிற்குச் சென்று விடுகின்றனர்.

மலைத்தினைச்சோறு, சுட்ட காட்டுவள்ளிக்கிழங்கு, இறைச்சி முதலியன இவர் களின் உணவு ஆகும். தேன் எடுத்தல், செம்மறியாடு வளர்த்தல், கூடை பின்னுதல் இருளர்களின் முக்கியத் தொழிலாகும்.

## ஆநிரைகவர்தல்

சந்தர்ப்பம் கிடைத்தால் காடுகளில் மேயும் மாடுகளைத் திருடுவதும், அவற்றை ஓட்டிச் சென்று காடுகளில் மறைவாக கட்டி வைத்து விடுதலும் இருளரைப் பற்றி கவுண்டர்கள் கூறும் குறைகள் ஆகும். எனவே ஆநிரைகளை ஓட்டிச்செல்லும் அக்கால வழக்கையும், கல்வெட்டுகள் குறிப்பையும் இவை நிரூபிக்கின்றன. இப் பழக்கம் சென்ற நூற்றாண்டுகளில் இப்பகுதியில் அதிகமாக இருந்தது எனவும் வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

## இருளப் பெண்கள்

இப்பகுதியில் வாழும் இருளப்பெண்கள் கையிலும் உடலிலும் பச்சை குத்திக் கொள்கின்றனர். பாசி மணி அணிகின்றனர்.

## இருளர் சடங்கு :

இருளர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். புதைத்த இடத்தைத் 'தொப்பா' என அழைக்கின்றனர். பண்டைக் காலத்தில் இறந்தவர்களை ஒரே குழியில் புதைத்தனராம். சில நேரங்களில் உடலை உட்கார்ந்திருக்கும் நிலையில் வைத்துச்

சோறு, விளக்கு, அணிகலன்கள் வைத்துப் புதைப்பது வழக்காம். இப்பொழு இப்படி புதைக்கும் பழக்கம் இல்லை என்றாலும், இப்பகுதியில் இன்று உள் 'வாலியர் வீடுகள்', 'பாண்டவர் குட்டைகள்' என அழைக்கப்படும் கல்திட்டைகள் அவர்களின் தொன்மைச் சின்னங்களை எடுத்துக்காட்டுகின்றன.

## நடுகல் விழா

இப்பகுதியில் உள்ள மக்கள் வேடியப்பனுக்கு ஆண்டுக்கு இருமுறை விழ எடுக்கின்றனர். சிறப்பாக ஆடி 18-ஆம் நாள் விழா எடுத்து, அன்னதானம் செய்வர் அதுபொழுது வேடியப்பனிடம் மழை பெய்து நீர்பெருகி இன்று போல் என்று பூமி செழிக்க வேண்டும் என வேண்டுவர். வெள்ளிக்கிழமையன்று மாலை வேடியப்பனுக்கு முப்பூச்சுப் பணியிடுவர். மதுவகை, கத்தி, சுருட்டு வைத்து படைப்பர். இத்தெய்வத்திற்குப் பூசை செய்பவர் 'உளர் பூசாரி' எனப்படுவார் இப்பூசாரி கையில் உள்ள உடுக்கையைத் தட்டி ஒலி எழுப்பி இறைவனைப் பூசை செய்வார். அப்பொழுது வேடியப்பனைத் துதித்து ஒரு பாட்டு பாடுவார். அந்த பாடல் பின்வருமாறு;

*காட்டை வளைத்து வில்லாய்ப் பூட்டி*
*கானாய் கோபவிடும் செந்தலை வேடுவா*
*கோ கோ குமாரா கொலுவுக்கு அலங்காரா*
*நீதி வாகனா: நித்திய அவதாரா*
*நாராயணா, நரசிம்ம அவதாரா*
*அரிக்கும் சிவனுக்கும் உற்பத்தியாய்ப் பிறந்த*
*அரிமால் புத்திரா! ஐயனாரப்பா!*
*வேட்டுவத் தலைவா! வேடியப்பா!*

பூசை நடக்கும் பொழுது குப்பத்தினர் சிலர், மண்ணால் செய்து சுட்ட பொம்மைகளும், மணிகளும் வேண்டுதலுக்கென்று கொடுப்பார்கள். சிலர் சேவல் ஆடு, மாடு இவைகளைச் சாமியின் பெயருக்குத் தானமாக வழங்குவார்கள். கோயி லுக்கு விடப்படும் மாடு, ஆடுகளுக்கு எங்கும் திரிய சுதந்திரம் உண்டு. யாரும் பட்டியில் அடைக்கக்கூடாது.

மக்களுக்கு ஏதாவது குறையோ அல்லது யார் மேலாவது பகையோ இருந்தால், தன் குறைகளை ஒரு சீட்டில் எழுதி நூல் கட்டி, வேடியப்பன் முன் உள்ள வேல்களில் தொங்கவிடுவர். சிலர் குதிரையின் கழுத்தில் தொங்க விடுவர் இப்படிச் செய்தால் அவர்கள் குறைகள் வேடியப்பனால் நீக்கப்படும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். பொதுவாகப் பெண்கள் வேடியப்பனை நெருங்கிச் சென்று வழிபடுவதில்லை. இப்பழக்கம் காட்டுப்பகுதிகளில் அதிகமாக உள்ளது.

# HERO-STONE INSCRIPTIONS OF NARASIMHA I & II

**Natana. Kasinathan,**

*Epigraphist, Department of Archaeology.*

NARASIMHA I.

In the course of the past two years Tamilnadu State Department of Archaeology has copied more than hundred hero-stone inscriptions. Most of them are in Vaṭṭeḷuttu characters belonging to Pallava period. Among them eleven inscriptions are dated in the reign period of Narasimha. On the basis of palaeography six of them are assignable to Narasimha I and the rest to Narasimha II.

Two inscriptions copied from Thaṇḍarāmpaṭṭu are the earliest ones, bearing the 7th regnal year of Narasimhavarman I. Sāttanūr epigraph is engraved in 11th regnal year of the same king. Two inscriptions from Pōndai and one from Toraippāḍi are in the 12th regnal year of the same king. These inscriptions are of great value since they were written before his 13th regnal year inscription found at Bādāmi.

The Bādāmi and Tirukkaḷukkuṇṛam inscriptions are the earliest inscriptions hitherto assigned to Narasimha I. The 13th regnal year of his Bādāmi inscription is in correspondence with 642 A. D. the date in which Pulikēsin II, the Chāḷukya king is said to have been defeated. From this coincidence it has been understood that Narasimha I ascended the throne in 630 A. D. The Tirukkaḷukuṇṛam inscription throws no new light, except affirming his conquest of Vātāpi (*Vātāpikondān*).

So far no copperplate assignable to Narasimha I has been found. But the copper-plates of his successors pay a glowing tribute to him and uniformly confirm his victory over Pulikesin II at three battle fields and Pulikesin's retreat to Vātāpi.

The present hero-stones though were written in his reign periods do not speak of his personal encounter with the Chāḷukya or any other king. They only refer to the fight of his feudatories.

The following are the full texts of his inscriptions:

1 கோவிசைய நரைசிங்கபருமற்கு யாண்டேழாவது மேற்கோவலூர் மேல் வாணகோமுத்தரைசர் நாடு பாவிய தஞ்சிற்றப்படிகள் பொன் மாந்தாஞற் மேற் வந்த ஞான்று பொன்மாந்தனுர்க்காய்ப் பட்டான் கடுவந்தையார் மகன் விற்சிதை கல்வாண கோக்கடமர்.

2 கோவிசைய நரைசிங்கபருமற்கு யாண்டேழாவது வாண கோமுத்தரைசரு நாடு பாவிய் மேற்கோவலூர் மேல் வந்து தஞ்சிற்றப் படிகளை எறிந்த ஞான்று பட்டான் சேவர் பரி அட்டுங் கொள்ளி துருமாவனுர் மகன் மாற்கடலன்

3 கோவிசைய நரைசிங்கபருமற்கு பதினொன்ருவது மேற் கோவலூர் நாட்டு அளஇற்பாடி கடிபகையார் தொறு கொண்ட (ஞா)ன்று சென்று தொறு இடுவித்து பட்டாரு உணங்கயார் மகனுர் கோத்தையார் சேவகன் ஆரோகவன்கர் மக்கள் கணிமாதனுர் கல்.

4 கோவிசைய நரசிங்கபருமற்கு யாண்டு பன்னிரண்டாவது மீகொன்றை நாட்டு பாசாற்று பசைமதர் சேவகன் தொறு இடுவித்து பட்டான் பனயநாத்தன்

5 கோவிசய நரசிங்கபருமற்கு யாண்டு பன்னிரெண்டாவது மீகொன்றை நாட்டு பாசாருள் பகைமதர் சேவகர் தொறு இடுவித்து பட்டார் வண்ணக்க சாத்தனுர்

6 கோவிசையஅ நரைசிங்கபருமற்கு யாண்டு [பன்]னிரண்டாவது கொங்கணி அரைசர் மகன் வாச்சன் மேற்சென்று சிரிகங்கரைசர் செவோர் எறிந்த ஞான்று பட்டார் சிரிகங்கரைசர் சேவகர் கொற்றவிணற்ற குன்றனுர் கல்

Numbers 1 and 2 were copied from Thaṇḍrāmpaṭṭu, a small town, on the road between Tiruvaṇṇāmalai and Sāttanūr. They are in vaṭṭeḷuttu characters and in 7th regnal year of Narasimha.

Number 3 from Sāttanūr, very near the present Sāttanūr Dam, is in Vaṭṭeḷuttu character, dated in his 11th regnal year. It records the death of a hero Kaṇimādanār, the son of Arōhavankanār, a soldier under Kōttaiyār while Kaḍipahaiyār of Aḷavirpadi lifted the cattle.

Numbers 4 and 5 were copied from Pōndai, an interior village situated in between Thaṇḍrāmpaṭṭu and Thānippāḍi in Chengam Taluk. They are

in Vaṭṭeḻuttu charecters, bearing 12th regnal year of Narasimhaparumar. One refers to the death of Paṇayanāttan, a soldier under Pakaimadar of Pāsāṟu in Mīkoṉṟai Nāḍu, while rescuing the cattle. The other records the death of Vaṇṇakkasāttan, a soldier under Pakaimadar of Pāsāṟu in Mīkoṉṟainādu, while rescuing the cattle.

Number 6 from Toraippāḍi, in Vatteḻuttu character dated in the 12th regnal year, records the death of a hero Koṟṟavinaṟṟa Kuṉṟanār, a soldier of Sri Gangaraisar.

Editing Thaṇḍrāmpaṭṭu inscriptions, the Director of Archaeology states that the term 'Muttarasar' may either qualify the teritorial division and may mean Muttarasar Nadu, or it may qualify the Bāna king, and mean the Bāna king Muttarasar" or that the Bāna king Muttaraisar, fought with his uncle.

The second intrepretation seems to be more probable that is there was a Bāṇa King namely Muttaraisar. So the name Muttaraisar is to be taken as a well known one even from the 7th century A. D. It makes one to think whether the Muttarasar family existed at Sendalai had originated from Bāṇa dynasty. Next point to be taken into consideration is who the uncle was. It is stated in one of them that Poṇmāndānār was his uncle.

This Poṇmāndārā may be identified with Māndaparumar found in two inscriptions from Kaḍalāḍi and Mēlpuñjai. Poṇmādanār is a combination of two words Pon-Māndānār. Poṉ is here used as a prefix. This prefix may indicate the name of a subsidiary clan as it is found with other chieftains also. For example there are Poṉṉarambanār, Ponnandiyār Poṟṟokkaiyār, Poṟchēndiyār; Poṉmōdannār, Poṉmudutpulli, Poṉmudutkāṭṭi etc. Therefore all these chieftains must have descended from one family that had its name as Poṉ. The puzzle to date Māndaparumar is also clear from this identification. He must be a contemporary of Narasimhavarma I.

Māndaparumar is definitely not a Pallava ruler since his name is not prefixed with Kō—Visaiya or suffixed with Vikkiramaparumar. So he must be a feudatory and the identification of him with Poṇmāndānar may not be wrong.

As Māndaparumar was the uncle of Vāṇakō Muttaraisar, he was also a Bāṇa king.

The territorial divisions that existed during the time of Narasimhavarman I continued to exist upto Vijayālayā times. Aḷavippāḍi, a village, was included in Mēlkōvalūr Nāḍu during the time of Narasimha I. In the time of Vijayālaya also it was included in Mēlkōvalūr Nāḍu.

NARASIMHA II.

Among the present inscriptions that are assignable to Narasimhavarman II, the T. Vēḷūr inscription is the earliest one bearing 2nd regnal year. Two inscriptions from Vēppūr Chekkaḍi and one from Tāḷaiyūttu are dated in 10th regnal year. One inscription from Sāttanūr is in the 30th regnal year.

The following hero-stone inscriptions are of Narasimhavarman II.

*1* கோவிசைய நரசிங்கபருமற்கு இரண்டாவது வாணகோஒ அதிரைசர் சேவகர் மீகொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பனையமாரியார் இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டா(ர்)

*2* கோவிசைய நரசிங்கபருமற்கி யாண்டு பத்தாவது மீகொன்றை நாட்டுப் பாலைகோட்டுத் தொறுக் கொண்ட ஞான்று தொறு இடுவித்து தாசமாரியார் பட்டார்

*3* கோவிசைய நரசிங்கபருமற்கி யாண்டு பத்தாவது மீகொன்றை நாட்டு பாலைகோட்டு தொறு கொண்ட ஞான்று வாணகோ அரைசர் சேவகர் பாலைகோடுடைய வண்ணக்க சாத்தனார் தொறு இடுவித்து நாயவனோடு பட்டார்

4 கோவிசைய நரசிங்கபருமற்கு யாண்டு பத்தாவது மீ வேண்ணாட்டுக் கோவலூர ஊரரைசர் பெரும்பாணதியரைசர் சேவகன் சிற்றுபாடி பனையனார் மறி தொறுக்கொண்ட ஞான்று பட்டான்

5 கோவிசைய நரசிங்கவிக்கிரமபருமற்கு யாண்டு முப்பதாவது மேற்கோவலூர் நாட்டுச் சாத்தனூர் ஆன்தொறுக்கொண்ட ஞான்று பகை மூர் சேவகர் குமாரமங்கலவுண்டன் தொறு இடுவித்து பட்டான்

The Tāḷaiyūttu inscription of Narasimhavarman can be easily dated to Narasimhavarman II as the script is very close to that of T. Vēḷūr inscription. Perumbāṇatiaraisar mentioned in Tāḷaiyūttu inscription might also be the same Vāṇakō Atiyaraisar referred to in T. Vēḷūr inscription.

The script of the Vēppūr Chekkaḍi inscriptions of Narasimhavarman is also in the same character of T. Vēḷūr. So they are assigned to Narasimhavarman II. In one of them Vāṇakō Araisar is mentioned. He might be the same Vāṅakō Atiaraisar of T. Vēḷūr inscription.

On the basis of its developed character and its high regnal year, the Sāttanūr inscription is also to be assigned to Narasimhavarma II. In this, Sāttanūr is said to be included in Mēṟkōvalūr Nāḍu.

Mēlvēlur which was included in Mīkoṉṟaināḍu during the time of Narasimhavarman II continued to be included in the same nāḍu in the time of Adityachola.

One of the inscriptions of Vēppūrchekkaḍi was copied from a dolmen. An inscription of Rājēndra from Vaḍivuḷḷamaṅgalam and another epigraph in poetic form from Paḷamangalam in Coimbatore District were copied from hero-stones in the form of dolmens. This shows that the practice of erecting dolmens for those who met heroic death continued till very late period.

Apart from these hero-stones, here are some Pallava Grantha inscriptions and one copper-plate from Rēyūru, assignable to Narasimhavarman-II. These Grantha inscriptions refer to a number of epithets of the rulers, like Atyantakāma, Atiraṇachaṅḍa etc. The copper-plate of Rēyūr is the only epigraph hitherto found bearing his regnal year, that is 12th regnal year. But the present discovery of hero-stone inscriptions, included from his 2nd regnal year to 30th regnal year, are great signficance. Since there is an inscription in his 30th regnal year, he must have ruled atleast for 30 year. The accepted date of his accession is 700 A. D. adding 30 years of his rule, 730 A. D. must have been the last date of his ruling.

Some observations on sculptural features on the hero-stones of Narasimhavarman I and II are worth noting. The heroes are portrayed in all hero-stones turning to the left, raising their left legs. Their right hand bears a curved sword, while their left, holds shields or bows. The weapons protrayed in the hands of heroes were probably the ones used by the soldiers in the battle fields. This confirms to the description in the Kuram copper-plates, where the battle is described.

□ □ □

# இலக்கியத்தில் நடுகல்

**மயிலை. சீனி. வேங்கடசாமி.**

உலகத்திலே எல்லா நாடுகளிலும் வீரர்களைப் போற்றினார்கள். எல்லா நாட்டிலும் வீரர்களுக்குத் தனிச் சிறப்பு இருந்தது. பழந்தமிழ் நாட்டிலே வீரர்களுக்குத் தனிச் சிறப்பு இருந்தது. பழந்தமிழர் போரைப் பற்றித் தனி இலக்கணம் எழுதினார்கள். போரைப் பற்றிய இலக்கியங்களும் இருந்தன. அவற்றிற்குப் புறப்பொருள் என்று பெயரிட்டிருந்தார்கள். தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூல்களும், புறநானூறு போன்ற இலக்கிய நூல்களும் தமிழில் உண்டு. போர் முறையை ஏழு விதமாகப் பிரித்திருந்தார்கள். நிரை (பசு மந்தை) கொள்ளுதல் வெட்சி என்றும், நிரைமீட்டல் கரந்தை என்றும் பெயர் பெற்றன. நாட்டைப் பிடிக்க ஓர் அரசன் படையெடுத்துப் போருக்கு வரும்போது அவனை எதிர்த்துப் போர் செய்து தன் நாட்டைக் காப்பாற்றுவான் அந்த நாட்டரசன். இவ்விரு அரசருக்கும் நடக்கும் போருக்கு வஞ்சிப்போர் என்பது பெயர். ஓர் அரசன் பகையரசனுடைய கோட்டைமேல் படையெடுத்துச் சென்று கோட்டை மதிலைச் சூழ்ந்து முற்றுகையிடுவது உழிஞைப்போர் என்று பெயர் பெற்றது. முற்றுகையிடப்பட்ட மதிலுக்குள்ளிருக்கும் அரசன் கோட்டைக்குள்ளிருந்து போர் புரிவது நொச்சிப் போர் என்று பெயர் பெற்றது. இரண்டு அரசர்கள் தம்முடைய வீரத்தைக் காட்ட போர் செய்வது தும்பைப் போர் என்று பெயர் பெற்றது. இவற்றைத் தவிர வாகைப் போர் என்று ஒரு வகைப் போர் உண்டு. இது அரசர், போர் வீரர்களுக்கு மட்டுமல்லாமல் இசை பாடுதல், யாழ் வாசித்தல், நாட்டியம் ஆடுதல், சேவல் போர், காடைப் போர், தகர் (ஆடு) போர் முதலிய ஏனையோருக்கும் பொதுவானது. இவ்வாறு பலவகையான போர்முறைகள் பழந்தமிழ் நாட்டில் இருந்தன. போர்க்காலங்களிலே வீரப்போர் செய்து பின் வாங்காமல் உயிர் நீத்த வீரர்களுக்கு நடுகல் நட்டு அவ்வீரர்களுக்குச் சிறப்பு செய்தார்கள். வீரக்கல் நடுகிற வழக்கம் மிகப் பழங்காலந் தொட்டு இருந்தது. பழங்காலத்தில் நடப்பட்ட ஆயிரக் கணக்கான நடுகற்கள் தமிழ் நாட்டிலே பல இடங்களிலே காணக் கிடக்கின்றன. தொல் பொருள் ஆய்வுத் துறையினர் நடுகற்கள் பலவற்றைக் கண்டுபிடித்து அவற்றைப் படிஎடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். இன்னும் பல நூற்றுக் கணக்கான நடுகற்கள் கண்டுபிடிக்கப்படாமலேயுள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலில் போரில் மடிந்த வீரர்க்கு நடுகல் நடுவது பற்றி இவ்வாறு கூறப்படுகிறது.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
(சீர்த்த மரபில் பெரும்படை) வாழ்த்தலென்று
இருமூன்று மரபில் கல்.

போரில் இறந்த வீரனுக்கு நடுகல் நட்டு அவனுடைய வீரத்தைப் போற்றினர்கள். அதற்குரிய கல்லே, மலேக்குச் சென்று தேர்ந்தெடுத்து அதைக் கொண்டுவந்து நீரில் இட்டு நீர்ப்படை செய்து பிறகு அந்த வீரனுடைய பெயரையும் புகழையும் அக்கல்லில் எழுதி, அதை நட வேண்டிய இடத்தில் நட்டு நாட்டு மக்கள் எல்லோரும் சேர்ந்து சிறப்பு செய்து வாழ்த்துவார்கள். இவை ஐந்தும் நடுகல் நடுவதற்குரிய ஐந்து துறைகளாகும்.

(மேற்சொன்ன தொல்காப்பியச் சூத்திரத்தில் 'சீர்த்த மரபில் பெரும்படை' என்று ஒரு தொடர் கூறப்படுகிறது. பெரும்படை என்பது போர்க் காலத்தில் மடிந்துபோன அரசனுக்கு எடுக்கப்படுகிற பள்ளிப்படை. இது பற்றி இங்கு ஆராய்ச்சி இல்லே. வடக்கிருந்து (பட்டினிகிடந்து) உயிர் விட்டவருக்கும், கண்ணகி போன்ற வீரபத்தினிக்கும் நடுகல் நட்டுச் சிறப்பு செய்வதும் உண்டு. கணவனோடு தீயில் விழுந்து உடன் கட்டையேறின மகளிர்க்கும் நடுகல் நடுவது உண்டு. இது மாஸ்திக்கல் (மாசதிக்கல்) என்று பெயர் பெறும். இந்த வகையான நடுகற்களேப் பற்றியும் இங்கு ஆராய்ச்சி இல்லே.)

பகைவருடைய (மாற்றருடைய) ஊரில் போய் அங்குள்ள தொறுக் களேக் (எருமை, பசுமந்தைகளே) கவர்ந்து கொண்டு வருவது பழந்தமிழ கத்தில் அடிக்கடி நடந்த சாதாரண நிகழ்ச்சி. இது களவுக் குற்றமாகக் கருதப்படவில்லே. இந்த வெட்சிப் போரைச் சிற்றரசர்களும் வீரத்தில் சிறந்த மறவர்களும் அரசர்களுங்கூட செய்தார்கள். முள்ளூர் மன்னன் (மலேயமான் திருமுடிக்காரி) இரவில் குதிரை மேல் சென்று அயலூரிலி ருந்த ஆனிரைகளேக் கவர்ந்து கொண்டு வருவது வழக்கம். இதைக் கபிலர் கூறுகிறுர்.

மாயிரு முள்ளூர் மன்னர் மாவூர்ந்து
எல்லித் தரீஇய இனநிரை (நற்றிணை-291-7-8)

செங்குட்டுவனுடைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தண்டாரணிய நாட்டில் (விந்திய மலைப்பிரதேசத்தில்) சென்று பகைவருடைய வருடைப்பசுக்களைக் கவர்ந்து கொண்டு சேரநாட்டுத் தொண்டிப் பட்டினத்தில் கொண்டு வந்து பலருக்குக் கொடுத்தான் என்று பதிற்றுப் பத்தில் 6-ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

பகைவர் கொண்டு போன ஆனிரைகளை மீட்பதற்காக நடந்த கரந்தைப் போரில் ஒரு வீரன் போர் செய்து ஆனிரைகளை மீட்டான். ஆனால், அவன் வெற்றியடைந்த போதிலும் அவன் பகைவரின் அம்புகளினால் இறந்து போனான். இதை ஒக்கூர் மாசாத்தியார் கூறுகிறார்.

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே
மேனாளுற்ற செருவிற்கு இவள்தன் ஐ
யானை யெறிந்து களத் தொழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டு பட்டனனே.
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித் துடீஇப்
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே. (புறம் 279)

வெட்சி வீரர் கவர்ந்து கொண்டுபோன ஆனிரைகளை மீட்பதற்காகக் கரந்தை வீரர் செய்யும் போர் கடுமையானது. ஆனிரைகளைக் கவர்ந்து கொண்ட வெட்சி வீரர் எளிதில் ஆனிரைகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். கடுமையாகப் போர் செய்து கரந்தை வீரர்களைக் கொல்வார்கள். வெட்சி வீரரிடமிருந்து ஆனிரைகளை மீட்கும் கரந்தை வீரர், கடலுக்குள் புகுந்து மறைந்த மண்ணுலகத்தைப் பெருமுயற்சி செய்து மீட்டெடுத்த வராகப் பெருமாளுக்கு உவமை கூறப்படுகின்றனர்.

கடல் புக்கு மண்ணெடுத்து காரேனக் கோட்டின்
மிடல் பெரிதெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர் கருதாதார் உள்ளத்
துரந்து நிரைமீட்ட தோள். (பெரும்பொருள் விளக்கம்)

கரந்தைப் போரில் வெற்றியோடு உயிர்விட்ட வீரர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள் ஏராளமாக உள்ளன. அவர்களைப் பற்றிய செய்யுட்

களும் இலக்கியங்களில் பல உள்ளன. அச்செய்யுட்களையெல்லாம் இங்குக் காட்ட வேண்டுவது இல்லை. ஆனால், ஒரு செய்யுளை மட்டும் கூறி மேற் செல்லுவோம். வடமோதங்கிழார், கரந்தைப் போரில் ஒரு வீரன் ஆனி ரைகளைப் பகைவரிடமிருந்து மீட்டின பின்பு அவனுடைய உடல் முழுவதும் பகைவருடைய அம்பு தைத்து அவன் இறந்து போனதைக் கூறுகிறார். சந்திர கிரகணத்தின் போது, முழு நிலாவைப் பாம்பு விழுங்கி விட, அதன் வாயிலிருந்து சந்திரன் மிக அரிதின் முயன்று வெளிப்பட்டது போல, அந்த வீரன் தன் ஊர் ஆனிரைகளைப் பகை வீரரிடமிருந்து கடும் போர் செய்து மீட்டுக் கொண்டான். ஆனால், அந்தோ! அவன் உடம்பு முழுவதும் பகை வீரர்கள் எய்த அம்புகள் தைத்து விட்டன, அவன் உயிரானது பாம்பு தன் தோலை உரித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டது போல, அவனுடைய உடம்பை விட்டுப் பிரிந்து வீரசுவர்க்கத்துக்குப் போய்விட்டது. உயிர் போய்விட்டபடியால், அவனுடைய உடம்பு, அம்புகள் தைத்த இலக்கு மரம்போலக் காணப்பட்டது. அவனுடைய பெயரும் புகழும் அவனுடைய நடுகல்லில் எழுதப்பட்டு விளங்கிற்று என்று அப்புலவர் அழகான ஒரு செய்யுளில் கூறுகிறார்.

முன்னூர்ப் பூசலில் தோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளியாளர்
விடுகணை நீத்தம் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்று கோள்விடுத்து
(வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின்) மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த உரையன் ஆகி
உரிகளை அரவம் மானத் தானே
அரிது செல் உலகிற் சென்றனன் உடம்பே,
கானச் சிற்றியாற்று அருங்கரைக் காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய இலக்கம் போல
அம்பொடு துளங்கி ஆண்டொழிந் தன்றே
உயர்இசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை அணி மயிர் சூட்டி
இடம் பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே. (புறம். 260 : 12-28)

(குறிப்பு: இச்செய்யுளில், 'கம்பமொடு துளங்கிய இலக்கம்' என்பது இலக்கு மரத்தை. வீரர்கள் குறி தவருமல் அம்பு எய்து பழகுவதற்காக, உயரமாக வளர்ந்த இலவம் பஞ்சுமரம், முருக்கமரம் போன்ற மரங்களைத் தேர்ந்தெடுத்து அந்த மரங்களின் கிளைகளையெல்லாம் வெட்டிவிட்டு நடு மரத்தை மட்டும் விட்டுவைப்பார்கள். அந்த உயரமான மரத்தின் ஓரிடத்தைக் குறியாக வைத்துக்கொண்டு வில்லிலிருந்து அம்பு எய்து பழகுவார்கள். அம்மரத்தின் மேல் வேல் எறிந்தும் பழகுவார்கள். 'வென் வேல், இளம்பல் கோசர் விளங்கு படை கன்மார், இகலினர் எறிந்த அகலிலை முருக்கின், பெருமரக் கம்பம்' என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனர் புறம் 169.இல் இதனைக் கூறுவது காண்க. இந்த இலக்குக் கம்பத்தில் பல அம்புகள் தைத்துக் கொண்டிருப்பதுபோல, ஆனிரைகளை மீட்ட வீரன் உடம்பில் பகைவீரர் எய்த அம்புகள் தைத்திருந்தன. வடமோதங்கிழார், இலக்குக் கம்பத்தில் அம்புகள் தைத்துக் கொண்டிருப்பதுபோல, வீரனுடைய உடம்பில் அம்புகள் தைத்துக் கொண்டிருந்தன என்று கூறுவது வெறுங் கற்பனை அன்று. வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணுமலைத் தாலுகாவைச் சேர்ந்த செங்கம் என்னும் ஊரில் உள்ள நடுகற்கள் இரண்டில், தொறு மீட்டு இறந்து போனவர் உடம்பில் அம்புகள் தைத்திருப்பதுபோன்று சிற்ப உருவம் காணப்படுகின்றன.

மகாபாரதத்தில் விராடபர்வத்தில் தொறு கவர்தலும், தொறு மீட்டலும் கூறப்படுகிறது. துரியோதனனுடைய வீரர்கள் விராடதேசத்துக்கு வந்து அந்தத் தேசத்தின் பசுமந்தைகளை ஓட்டிக் கொண்டு போனார்கள். அப்போது அங்குப் பேடியின் உருவத்தோடு அஞ்ஞாத வாசஞ்செய்திருந்த அர்ச்சுனன், உத்தரகுமரனைத் தேரில் ஏற்றிக் கொண்டு போய்ப் போர் செய்து ஆனிரைகளை மீட்டுக் கொண்டு வந்தான் என்று மகாபாரதம் கூறுகிறது.

கரந்தைப் போரில் தொறு மீட்கச் சென்றவர் பகைவருடைய அம்புக்கு அஞ்சித் திரும்பிவருவதும் உண்டு. ஆனால் அவர்களை நாட்டு மக்கள் மதிக்கமாட்டார்கள். தொறுவை மீட்காமல் பகைவருடைய அம்புக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடிவந்த 'வீரர்களை'த்திருத்தக்கதேவர் புகழ்வது போல இகழ்ந்து நகைக்கிருர். இராசமாபுரத்திலிருந்து பசு மந்தைகளை அயல் நாட்டு மறவர்கள் வந்து கவர்ந்து கொண்டு போனார்கள். இதை அறிந்த அரசன் கட்டியங்காரன், தன்னுடைய பிள்ளைகளை அழைத்து மறவர்கள் கவர்ந்து கொண்டு போன ஆனிரைகளை மீட்டுக் கொண்டு வருமாறு ஏவினன். அவர்கள் சென்று மறவர்களுடன் போர் செய்தார்கள்.

ஆனால் மறவர்கள் எய்த அம்புக்கு ஆற்ருமல் போர்க்களத்திலிருந்து ஓடி வந்துவிட்டார்கள். இந்தச் செய்தியைச் சிலர் அரசனிடம் சென்று தெரிவித்தார்கள். அரசனுடைய மக்கள் தோற்று ஓடிவந்துவிட்டதை வெகு நயமாகக் கூறினுர்கள்.

வம்புகொண் டிருந்த மாதர்
வனமுலை மாலைத் தேன் சோர்
கொம்புகொண் டன்ன நல்லார்
கொழுங் கயல் தடங்கண்போலும்
அம்பு கொண்டரசர் மீண்டார்
ஆக் கொண்டு மறவர் போனர்
செம்பு கொண்டன்ன இஞ்சித்
திருநகர்ச் செல்வ! என்ருர்.

3 JUN 1975

(கோவிந்தையார் இலம்பாம் 31)

இதில், 'அம்பு கொண்டரசர் மீண்டார், ஆக்கொண்டு மறவர் போனர்' என்பது படித்துப் படித்து இன்புறத்தக்கது.

போரிலே பின் வாங்காமல் வீரப்போர் செய்து உயிர் விட்டவர்களின் உயிர் விண்ணுலகஞ்சென்று வீரசுவர்க்கத்தைச் சேர்கிறது என்றும், அந்த வீரசுவர்க்கத்தில் அவர்கள் இன்பம் அனுபவித்துக் கொண்டு சுகமாக வாழ்கிருர்கள் என்றும் அக்காலத்தில் மக்கள் நம்பினுர்கள். குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளியும் 'போர்' என்னும் ஊரில் போர் செய்தார்கள். அந்தப் போரில் இரண்டு பேரும் உயிர் விட்டார்கள். இறந்துபோன அவர்கள் 'அருப்பெறல் உலகத்தை' யடைந்தார்கள் என்று கழாத்தலையார் என்னும் புலவர் (புறம் 62) கூறுகிருர்.

வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவினேரும் ஆற்ற
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்து பெற்றனரால்.

(புறம் 62 16-19)

சீவகசிந்தாமணி மண்மகள் இலம்பகத்தில், வீரப்போர் செய்து மாண்டவர் வீரசுவர்க்கம் அடைகிருர்கள் என்று கூறப்படுகிறது. விபுலனும் வேறு ஒரு வீரனும் போர்செய்தபோது அந்த வீரன் வீரமரணம் அடைந்

தான். அப்போது அரமங்கையர் அவன்மேல் மலர்மாரி சொரிந்து தொழு
வீரசுவர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்கள் என்று சிந்தாமணிக் காவிய
கூறுகிறது.

> எரிந்தார் அயில் இடைபோழ்ந்தமை உணராதவன் நின்றான்
> சொரிந்தார் மலர் அரமங்கையர் தொழுதார் விசும்படைந்தான்
>
> (சீவகசிந்தாமணி மண்மகள் 164

என்னும் செய்யுளும்,

> தற்புரந் தந்து வைத்த தலைமகற் குதவி வீந்தால்
> கற்பக மாலை சூட்டிக் கடியர மகளிர் தோய்வர்
> பொற்ற சொன்மாலை சூட்டிப் புலவர்கள் புகழக் கல்மேல்
> நிற்பர் தம் வீரந்தோன்ற நெடும்புகழ் பரப்பி என்றான்.
>
> (சீவகசிந்தாமணி மண்மகள் 201

என்னும் செய்யுளும் போரில் மடிந்த வீரர், வீரசுவர்க்கம் போகிறார் என்
பதைக் கூறுகின்றன.

சில நடுகற்களிலே கீழ்ப்பகுதி, மேல்பகுதிகளாக இரண்டு சிற்
உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதி சிற்பம், போர் வீரன்
போர் செய்வது போன்று காணப்படுகிறது. அந்த சிற்பத்துக்கு மேலே
யுள்ள சிற்பம், அந்த வீரன் போரில் இறந்த பிறகு வீரசுவர்க்கம் சென்று
அங்கு அரமங்கையரோடு இருப்பதைக் குறிக்கின்றன. இவை, வீரமரண
அடைந்த வீரன், வீரசுவர்க்கம் சென்று இன்பம் அனுபவிக்கிறான் என்னு
கருத்தைப் புலப்படுத்துகின்றன.

முன்பு சொன்னது போல நடுகற்களைப் பற்றித் தமிழ் இலக்கிய
களிலே பல குறிப்புகள் காணப்படுகின்றன. ஏட்டிலே கூறப்படுகிற நடு
கற்களைப் போலவே, நாட்டிலும் நடுகற்கள் காட்சியளிக்கின்றன.

அறுபத்து மூன்று சிவனடியார்களில் ஒருவராகிய சேரமான் பெரு
மாள் நாயனர் தாம் பாடிய திருவாரூர் மும்மணிக் கோவையில், "பட
ேடார் பெயரும் ஆற்றலும் எழுதி நட்டகல்லும்" என்று நடுகல்லை
கூறுகிறார்.

# நடுகற்களும், நம்பிக்கைகளும்

**நா. வானமாமலை.**

நடுகற்களைப்பற்றிச் சங்க இலக்கியங்களிலிருந்தும், தொல்காப்பியம், புறப் பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களிலிருந்தும் நாம் அறிகிறோம். ஆநிரைகளைப் பாதுகாக்கப் போர் செய்து உயிர் விட்டவர்களுக்கும், மன்னனுக்காகப் போர் செய்து உயிர் நீத்தவர்களுக்கும் நடுகல் நாட்டி, பண்டைத் தமிழ் மக்கள் வணங்கி வந்தனர். இப்பண்டைய வழக்கம் இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன் வரை நீடித்திருந்தது.

இக்கற்களில் உருவமெழுதிய கற்களும், உருவமற்ற கற்களும் இருந்தன. தெருச் சந்திகளிலும், பாதைச் சந்திகளிலும் இருந்த கற்களை 'கவலையகல்' என்றும், உருவமெழுதிய கற்களை 'கடவுளெழுதியகல்' என்றும் புறநானூற்றுச் செய்யுட்கள் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்கள் தலை மக்களது வீரத்தையே போற்றுவன ஆகையாலும், புலவர்கள் மன்னர்களிடம் பரிசில் பெறப் பாடியவையாதலாலும், அவை அரசர்களது நடுகல் வணக்கத்தையே குறிப்பிடுகின்றன. புறம். 231 அதியமான் நெடுமானஞ்சி போரில் வேல் பாய்ந்து மாய்ந்த செய்தியைக் கூறுகிறது. புறம். 243 அவனுக்கு நடுகல் எடுத்த செய்தியைக் கூறுகிறது. ஒளவை பாடிய இப்பாடலில் நடுகல் பற்றிய குறிப்பு பின்வரும் அடிகளில் காணப்படுகிறது.

> இல்லாகியரோ, காலை மாலை
> நடுகற் பீலி சூட்டி நார் அரி
> சிறுகலத்துகுப்பவும் கொள்வன் கொல்லோ, 1

அதியமான், ஒளவையை ஆதரித்த தலைவன். இவனது நடுகல்லைக் கண்டு ஒளவை, பிறருக்கு உணவளித்துப் போற்றிய இத்தலைவனுக்குப் பிண்ட உணவு பிறர் ஊட்டும் நிலை வந்து விட்டதே என்று கூறி வருந்துகிறார்.

"நடுகல் பீலி சூட்டி" என்று வணங்கப்படும் கல், உருவம் செதுக்காத கல் தான். பீலி சூட்டுவதும், சிறு கலத்துக் கள் வார்ப்பதும் சடங்குகள். அதியமானது ஆன்மா மகிழ்ச்சியோடிருக்க அவனது மக்கள் செய்யும் சடங்குகள். கடவுள் எழுதிய கல் என்ற தொடர், உருவக்கற்களும் நடப்பட்டன என்பதைக் காட்டும். 6-வது நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்துக் கற்களை அகழ்வாராய்ச்சியாளர் கண்டு பிடித்துள்ளனராயினும், சங்ககாலக் கற்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் பிற்காலக் கற்கள், இலக்கியத்தில் குறிக்கப்படும் கற்களைப் போலவே செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

சங்ககாலக் கற்களை ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்தெடுத்துக் காட்டாவிடினும், அக்கால நடுகல் சடங்குகள் பற்றிய வருணனைகளைச் சங்க இலக்கியங்களில் படிக்கிறோம்.2 இவை யாவும் மன்னர்கள், படைத் தலைவர்களது நடுகற்களுக்குச், சம காலத்து மக்கள் செய்த பூசனையாகவும், சாந்திச் சடங்குகளாகவுமே இருத்தலைக் காணலாம்.

இக்கற்கள் கல்லறைகளின் மீது மட்டுமல்லாமல், இறந்து விழுந்த இடத்திலும், இறந்தவனது ஊரிலும் நடப்பட்டு வணங்கப்பட்டன. எனவே இவற்றைக் கல்லறை மீதிருந்த அடையாளங்களாகக் கொள்வதற்கில்லை. இறந்தவர் உடல்களை எரிக்கும் வழக்கம் தோன்றிய பின்னர், கல்லறையில் உடலைப் பாதுகாத்துப் புதைத்து வைக்கும் வழக்கம் மறைந்து, கல்லை மேற்கூறியவாறு எரித்த இடத்தில் இல்லாமல் வேறிடங்களில், நாட்டும் வழக்கம் தோன்றிற்று.3 இன்றும் இவ்வழக்கத்தின் எச்சத்தை, கல் நாட்டுதல் என்ற சாவுச்சடங்கில் காணலாம். சில சாதியினர் சுடுகாட்டுக்கு வெகு தூரத்தில் உள்ள ஒரு அரச மரத்தடியில் சிறிய கல்லைப் புதைத்து வைக்கின்றனர். அவ்விடத்தில் இறந்தவரது ஆன்மா இருப்பதாகக் கருதிச் சடங்குகள் செய்கின்றனர். சில சாதியினர் இறந்தவர் ஆவி, அவருடைய வீட்டில் இருப்பதாகக் கருதி வீட்டின் வடக்கு மூலையில் ஒரு குழி தோண்டிக் கல் நாட்டுகின்றனர். இச்சடங்கு நடக்கும் பொழுது சொல்லப்படும் மந்திரங்களிலிருந்து இறந்தவரது ஆன்மா அங்கிருப்பதாகக் கருதுகிற நம்பிக்கையை அறிய முடிகிறது.

தொல்காப்பியர் காலத்தில் உருவமற்ற கற்களும், உருவம் செதுக்கிய கற்களும் இருந்திருக்க வேண்டும். ஆனால் எழுத்தைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை. ஆனால் 6-ம் நூற்றாண்டு முதல் எழுத்துத் தோன்றி விட்டன என்பதைச் செங்கம் நடுகற்களில் சில காட்டுகின்றன. ஆயினும் புறப் பொருள் வெண்பாமாலையாசிரியர் எழுத்துக்களைப் பற்றிக் குறிப்பிடாமல், சடங்குகளை மட்டுமே வருணித்துள்ளார்.

ஓர் தலைவன் இறந்தபின் அவனுக்குச் செய்வதற்குரிய நடுகற் சடங்கு பற்றி ஆறு செயல்களைத் தொல்காப்பியர் கூறுகிறார். அவையாவன : 1) காட்சி; 2) கால்கோள்; 3) நீர்ப்படை; 4) நடுகல்; 5) பெரும்படை; 6) வாழ்த்து 4

முதலில் நிமித்திகன் அல்லது கணியான் சுட்டிக்காட்டும் இடத்தில் கல்லைத் தேர்ந்தெடுத்து வெட்டிக்கொண்டு வருவதுதான் இச்சடங்கு. ஏன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கல்லை வெட்ட வேண்டும்? இறந்தவனது ஆவி பற்றிய நம்பிக்கைகள் இரண்டுதாம் இதற்குக் காரணம். ''இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம், அங்குள்ள ஒரு பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம்'' என்ற நம்பிக்கை உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படுகிறது. ஜே ஜி. பிரேஸர் (J. G. Frazer) இதனை விளக்கியுள்ளார் 5 ''ஆன்மா உடலிலிருந்து பிரிந்து, சாவு ஏற்படாமலேயே சில காலம் இருத்தல் கூடும் என்பது பண்டைய மக்களின் நம்பிக்கை. சில காலம் இருக்க முடியுமானல், நெடுநாட்கள் இருக்க முடியும் என்பதும் சாத்தியமே. அப்படி பிரிந்திருக்கும் பொழுது ஒரு பகுதி ஆன்மா வேறிடத்திலும், ஒரு பகுதி ஆவியின் இருப்பிடத்திலும் இருக்கும். உடலை விட்டுப் பிரிந்திருக்கும் ஆன்மா ஒரு பறவை, செடி, மரம், பெட்டி, புழு, மீன் முதலியவற்றில் இருக்கும். இவற்றிற்கு ஆபத்து ஏற்பட்டால், ஆன்மாவின்

நீராட்டுவார்கள். இது சாதாரணமாகக் குளிப்பாட்டுதல் அன்று. மந்திர ஸ்நானம் ஆகும். அதன் பின்னர் இக்கல்லுக்கு ஊட்டுப்படைப்பார்கள். இறந்தவன் உயிரோடிருந்த காலத்தில் அவனுக்கு விருப்பமாயிருந்த உணவை அவனுக்குப் படைத்து, அதனைத் தாங்களும் சடங்காசார முறையில் உண்பார்கள். இதனுல் அவனுடைய ஆற்றல், இப்படைப்பின் உணவை உண்கிறவர்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இச்சடங்கைச் செய்தனர். பெரும்படையில் உயிர்ப்பலி கொடுப்பதும், கள் படைப்பதும் வழக்கமாயிருந்தது. இதனையே பெரும்படை என்று தொல்காப்பியர் அழைத்தார்.

பின் கல்லில் நிலைத்து உறையும் ஆன்மாவை வாழ்த்தி ஆடலும், பாடலும் நிகழ்த்துவார்கள்.

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும் நடுகல் சடங்குகளை ஆறுகவே கூறுகிருர். அவர் கூறும் ஆறு சடங்குகளும் வருமாறு; (1) கல்காண்டல்; (2) கற்கோள் நிலை; (3) கல் நீர்ப்படுத்தல்; (4) கல்நடுதல்; (5) கல்முறைபழிச்சல்; (6) இல்கொண்டுபுகுதல்.[8]

இருநூல்களிலும் முதல் நான்கு சடங்குகள் ஒன்றுகவே கூறப்பட்டுள்ளன. ஐந்தாவது, ஆறுவது சடங்குச் செயல்கள் வேறுபடக் கூறப்பட்டிருக்கின்றன. கல்முறை பழிச்சலும், இல் கொண்டு புகுதலும் வேறுபடக் கூறப்பட்ட சடங்குகள். பழிச்சல் என்பது பூசனை. பெரும்படையை இச்சடங்கினுள் புறப்பொருள் வெண் பாமாலையாசிரியர் அடக்கிக் கூறினர். இல்கொண்டுபுகுதல் என்பது இந்நூலில் புதிதாகக் கூறப்பட்டதாகும். இல் என்பது கல் நாட்டும் இடம் என்பதை உரை யாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறுயின், அவ்விடத்தில் ஒரு சிறு பீடமோ, அறையோ இருந்திருக்கும். அதனுள் கல்லைக் கொண்டு சேர்த்தலை இச்சடங்கு குறிப்பிட வேண்டும். எனவே முதலைந்து சடங்குகள் கல்வெட்டிய இடத்திலும், இறுதிச்சடங்கு கோயில் கட்டிய இடத்திலும் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்நூல்கள் தோன்றிய காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள், நடுகற்களைப் பற்றி தொல்காப்பியரும், ஐயனரிதனரும் அறிந்திராத செய்திகளைக் கூறுகிருர்கள். ஆனல், தங்கள் காலத்து வழக்கம் என்று வேறுபடுத்திக் குறிப்பிடாமல், தொல்காப்பியர், ஐயனரிதனர் கால வழக்கங்கள் என்று கருதியே அவர்கள் அச்செய்திகளைக் குறிப்பிடுகிருர்கள். அவர்கள் நடுகற்களில் "ஊரும், பேரும், பீடும்" எழுதியிருந்ததாகக் குறிப்பிடு கிருர்கள். இவற்றை முதல் நூலாசிரியர்கள் குறிப்பிடவில்லை. எனவே இறந்த வனது ஊரையும், பேரையும், அவனது வீரச்செய்திகளையும் நடுகல்லில் எழுதுகிற வழக்கம் பிந்திய காலத்தில் எழுந்தது என்பதை ஊகிக்கலாம்.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற நடுகல் மரபுகளின் ஒரு வளர்ச்சி நிலையைத் தமிழகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்திருக்கும் நடுகற்களை ஆராய்வதன் மூலம் அறியலாம்.

தமிழ்நாட்டுத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர், செங்கம் வட்டத்தில் அறு பதுக்கும் அதிகமான நடுகற்களைக் கண்டுபிடித்துள்ளனர் இவை விளக்கும்

மற்றோர் பகுதி உறையும் உடலுக்கும் ஆபத்து ஏற்படும். இந்நம்பிக்கையை அடிப் படையாகக்கொண்டு புராதன மக்கள் படைத்த நூற்றுக்கணக்கான கதைகளைப் பிரேஸர் கூறுகிறுர். இக்கதைகள் பண்டைய மக்கள் அனைவரிடத்தும், வழங்கி வந்தன என்றும், இனக்குழு மக்கள் பெரும்பாலோரிடத்தும் வழங்கி வருகின்றன என்றும் அவர் கூறுகிறுர். இக்கூற்றை வலியுறுத்த அவர் 100க்கு மேற்பட்ட எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டுள்ளார். இக்கதைகளில் நெடுநாள் ஆவி குடியி ருக்க வேண்டுமானுல், அழியாத, கடினமான, உயிரில்லாத பொருள் தேவை என்ற நம்பிக்கை, மேற் கூறிய உயிருள்ள பொருளில் உயிர் போய்த் தங்குகிறது என்ற நம்பிக்கையின் வளர்ச்சியாகத் தோன்றியது. காலத்தால் பிற்பட்ட பண்டைய மக்களின் கதைகளில் கற்களில் ஆன்மா நெடுநாள் தங்க முடியும் என்ற கருத்துத் தோன்றியது.[6] கல், வைரம், முத்து போன்றவற்றில் அரக்கர்கள் உயிர்கள் நெடுநாள் தங்கியிருந்ததாகக் கதைகள் உள்ளன என்பதைப் பிரேஸர் எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு உடலிலிருந்து சிறிது காலம் பிரிந்து, ஒரு கல்லில் உயிர் தங்க முடியுமானுல், உடல் அழிந்து அதிலுள்ள ஆவி வேறுலகம் சென்ற பின், கல்லிலுள்ள அதன் மற்றோர் பகுதிக்கு அது திரும்ப முடியும் என்ற நம்பிக் கையும் மேற் குறிப்பட்ட கருத்திலிருந்து வளர்ந்தது. இதனுலேயே இறந்தவனது ஆன்மாவின் ஒரு பகுதியைக்கொண்டிருக்கும் கல்லைத் தேட வேண்டும். ஒரு பகுதி தேவருலகைச் சென்றடையும். இவ்வாறு ஆவி குடி புகுந்த கல்லைக் கணியானும், சோதிடனும் கண்டறிவார்கள்.

பிற்காலத்தில் ஆவி குடி புகுந்திருக்கும் கல்லைக் கண்டு பிடிக்க முயலாமல் ஒரு புனிதமான கல்லில் ஆவியை மந்திரங்களின் சக்தியால் புகுந்து கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை தோன்றியது. ஒரு புல், ஒரு பொம்மை, அல்லது கல், அல்லது சிலையில் அதனைக் குடிபுகச் செய்யலாம் என்று மக்கள் நம்பத் தொடங் கினர். பேய்களும் ஆவிகள் தான். அவற்றை ஒரு தேங்காய் அல்லது முட்டை க்குள் வரவழைத்து எங்காவது கொண்டு போய் விட்டு விடலாம் என்ற நம்பிக்கை மந்திரவாதச் செயல்கள், சூனியச் செயல்களின் அடிப்படையாயுள்ளது. இது போலவே விக்ரகங்கள் பிரதிட்டை செய்யப்படும் பொழுது தெய்வீக சக்தி அதனுள் நுழையும் படியாகப் பல மந்திரங்களை ஓதிச் சடங்குகளைச் செய்யும் வழக்கங்கள் சைவ - வைணவ ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதற்கு ஆவாகனம் என்று பெயர். இவ்வழக்கம், ஆவியை ஒரு பொருளில் குடியேறச் செய்யும் வழக்கத்தின் வளர்ச்சியே இலக்கண நூல்கள் கூறும் பெரும் படையும், கல்முறை பழிச்சலும், உணவு படைத்து, பாடல்கள் பாடி, துணங்கைக் கூத்தாடி, இறந்தவர் ஆவிகளைக் கற்களுள் உறைய அழைக்கும் சடங்கேயாகும். இக் கல்லை நிலைபெற ஒரே இடத்தில் அமைத்தல் இல்கொண்டு புகுதலாகும்.

நீர்ப்படை என்பது நீராட்டுதல். நீரினல் பொருள்கள் புனிதமடையும் என்ற நம்பிக்கை பண்டைய மக்களுக்குண்டு. நீருக்கு இயற்கையில் பூமியை பயன்தரச் செய்யும் சக்தி இருப்பதைக் கண்டு பண்டைக் கால மக்கள், அதற்குப் பல அதிசய சக்திகள் உண்டென்று நம்பினர்[7]. புனிதமான தீர்த்தம் என்று சில இடங்களைக் கருதி அவ்விடத்தின் நீர், மலட்டுத் தன்மையைத் தீர்க்கும்; இறந்தவன் சாம்பலை அங்கு கரைத்தால், அவன் ஆவி சுவர்க்கம் புகும் என்று நம்பினுர்கள். இதனுல் தான் வெறும் கல்லை ஆவி புகும் கல்லாக்கும் தகுதி பெறச் செய்ய அதனை

செய்திகள் இலக்கியத்திலிருந்தும், இலக்கண நூல்களிலிருந்தும் அறியப்படும் தலை மக்களது நடுகல் செய்திகளாக இல்லாமல், பொதுமக்களது நடுகற்களைப்பற்றிய செய்திகளாகவே காணப்படுகின்றன. அதாவது, ஆளும் பிரிவினரது நடுகற்களைப் பற்றி இலக்கிய இலக்கணங்கள் கூறுகின்றன. நாட்டு மக்களது, வீரர்களது நடு கற்களை (hero-stones) ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்துள்ளார்கள். நடுகல் எழுத்துக் களிலிருந்து, இவை சேவகர், பறையர், இளையர் முதலிய சமுதாயத்தின் கீழ்நிலை மக்களது நடுகற்களாகவே உள்ளன என்பதை அறிகிறோம். இவர்களுக்கு நடுகற் சடங்கு செய்து, எழுத்துக்களைக் கல்லில் வெட்டியவர்கள், இறந்தவனது ஊரார் அல்லது சுற்றத்தார்களாகவே இருப்பதைக் காணலாம். இக்கற்கள் சாதாரணப் போர் வீரர்களின் நினைவுச் சின்னமாக உள்ளன என்பதை, ஒவ்வொரு நடுகல்லின் இறுதி வாசகம் தெளிவாக்குகிறது.

உதாரணமாக,

1 "கங்கதி அரைசரு மக்கள் மேல் விண்ணன்னுர்
சேவகந் தொப்புரவருப்பாடி ஆள்கின்ற பசிர
பண்ணன் குறட்டாதன் .... வரமு கொண்ட
ஞான்று எறிந்து பட்டான்"

2 "கங்கரைசரு சேவகரு எறிந்து பட்டாரு"

3 "கருங்காலி பாடி ஆள் கொற்ற வாசிற்
கருஞ்சாத்தனுரு மகன்"

4 "பொன்மோதன்னுர் சேவகன் அக்கந்தைக்
கோடன் தொறு விடுவித்துப் பட்டான்கல்"

5 "பொன்னரம்பனுர் கொல்லகச்
சேவகன் காகண்டி அண்ணுவன் கல்"

இவர்கள், சேவகன், ஆள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இவர்கள் மன்னர்களோ, சிற்றரசர்களோ, படைத் தலைவர்களோ அல்லர். இவர்கள் சாவிற்குக் காரணம் என்ன?

தம் ஊரை முற்றுகையிட்ட அரசர், சிற்றரசர் படைகளை எதிர்த்துப் போராடி உயிர் விட்டவர்கள் சிலர். இதற்கு ஓர் உதாரணம்:

6 ............. ஊர் போ
ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
ன்று ஞக்கையார் இளமகன் வந்தாவ
ன் மகன் னந்தி எறிந்து பட்டா
ன் கல் 9

இக்கல்லுடையான், சக்கிரவரு படை தன் ஊரை முற்றுகையிட்ட போது போர் செய்து உயிர் விட்டவன். அவன் பெயர் நந்தி.

சிற்றூர் தலைவர்களும், குறுநில மன்னர்களும் வெட்சிப் போர்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் பசுநிரைகளையும், எருமை மந்தைகளையும் கொள்ளை கொண்டு செல்லும் பொழுது, நிரை மீட்க நடந்த பூசல்களில் இருபுறமும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. மன்னர்களும் சிற்றரசருமே கொள்ளையடிக்க வந்தவர்கள். இறந்தவர்கள் ஊர்ப்பசுமந்தையைப் பாதுகாக்கப் போராடிய கரந்தை வீரர்கள்-அதாவது கொள்ளை கொண்டு போன பசுக்களையும், எருமைகளையும் மீட்கப் போராடியவர்கள். உதாரணமாக கீழ் வரும் கல்வாசகங்களில் எதற்காக நடுகல் வீரன் உயிர் விட்டான் என்பது கூறப்படுகிறது.

1 "வாணகோ அரைசரு மருமக்கள் கந்த விண்ணனுர் கூடல் தொறுக் கொண்ட ஞான்று தொறு இடுவித்துப்பட்டான் பொன்னரம்பனுர் கொல்லகச் சேவகன் காகண்டி அண்ணுவன் கல்"

2 "வேண்ணாட்டுக் கோவலூா ஊரரைசர் பெரும்பாணதியரைசர் சேவகன் சிற்றுப்பாப்பணையனுர் மறி தொறுக்கொண்ட ஞான்று பட்டான்"

3 "மீகொன்றை நாட்டு பாசாற்று பகைமதர் சேவகன் தொறு இடுவித்துப் பட்டான் பணைய நாத்தன்"

4 "மறுக்கோட்டு வேட்டுவர் தாழை ஊர் தொறுக் கொண்ட ஞான்று தாழை ஊருடைய வண்ணக் கடையனுர் தொறு மீட்டுப் பட்டார்"[10]

எனவே நடுகல் வீரர்கள், தங்கள் ஊரில் அரசரும், சிற்றரசரும், வேட்டுவரும் படை எடுத்து வந்து எருமை மந்தைகளைப் பற்றிச் செல்லும் பொழுது, மீட்டுக் கொணர நடந்த போரில் கொல்லப்பட்டனர் என்று தெரிகிறது. "தொறு மீட்டுப் பட்டார்" என்ற வாசகம் இதனைக் குறிப்பிடுகிறது. இன்னும் சிலர் மந்தையைப் பற்றிச் செல்லும் பொழுது கொல்லப்பட்டனர். அவர்களை "தொறுக்கொண்ட ஞான்று பட்டார்" என்ற வாசகம் குறிப்பிடுகிறது. மந்தையைக் கவர வரும் பொழுது தடுத்தும், கவர்ந்து செல்லும் பொழுது தடுத்தும் நடைபெற்ற போர்களில் இறந்தவர்களை "பூசலில்பட்டார்" என்ற வாசகம் குறிப்பிடுகிறது. கள்வர்களையும், அரசர், சிற்றரசர் படைகளையும் விரட்டி, கவர்ந்து சென்ற மந்தைகளை ஊர் வீரர்கள் மீட்டு வந்த செய்தியை, "தொறுக்கொண்ட ஞான்று இடுவித்துப் பட்டான்" என்பது போன்ற சொற்றொடர்கள் குறிப்பிடும்.

தொறுக் கொண்ட ஞான்றும், பூசலிட்டும், தொறு மீட்டும் பட்டவர்கள் அரசியல் பெரும்போர்களில் மாண்டவர்களல்லர். ஆநிரை வளமுடைய ஊர்களை அத்தகைய வளம் இல்லாத மக்கள் தலைவர்கள் வளைத்து கொண்டு ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும்பொழுதும், சிற்றரசர், அரசர் படைகள் பகை மன்னர் நாட்டு மக்களின் ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற பொழுதும் மக்களிடையே தோன்றிய வீரர்கள், மக்களை அணியாகப் படை திரட்டிப் போராடியுள்ளார்கள். இவைதாம் பூசல்கள். போர்களல்ல. பகையரசர் படைகள் ஊரை அழிக்க முயலும் பொழுது

அதை எதிர்த்துப் போரிட்டு, ஊரைக் காப்பதில் உயிர் விட்டவர்கள், நடுகல் வீரர் களாகியுள்ளனர். இக்கல் வாசகங்களிலிருந்து எருமை மந்தைகளைக் கவரவும், மீட்க வுமே மிகப்பல பூசல்கள் நிகழ்ந்துள்ளன என்று அறிகிறோம். ஆநிரையும், ஆட்டு மந்தையும் ஒவ்வொரு சமயம் பூசலுக்குரிய செல்வங்களாயிருந்தன.

"சாத்தனூர் ஆண்தொறுக் கொண்ட ஞான்று" (ஆண்தொறு —பசுமந்தை)

"கோவலூர் ஊரரைசர் பெரும்பாணதி யரைசர்
சேவகன் சிற்றுபாடி பனையனூர் மறிதொறுக் கொண்ட ஞான்று"
(மறிதொறு ஆட்டுமந்தை)

இவ்வாறு மந்தைகளைக் கவர்வதிலும், மீட்பதிலும் உயிர்விட்டவர்களுக்கும், ஊரழியாமல் பாதுகாக்க உயிர்விட்டவர்களுக்கும், ஏன் மக்கள் நடுகல் நாட்டி, சடங்குகள் செய்து வழிபட்டனர்? அதனால் கிடைக்கும் பயன் என்னவென்று அவர்கள் கருதினர்? இவை குறித்து நடுகற்களை வழிபட்டவர்களுடைய நம்பிக்கைகள் எவை?

இவ்வினாக்களுக்கு விடையளிக்க, நாம் பண்பாட்டு மானிடவியல் ஆராய்ச்சி முடிவுகளுக்கும், நாட்டுப் பண்பாட்டு நம்பிக்கைகளுக்கும் நமது கவனத்தைத் திருப்ப வேண்டும். முதலில் இறந்து போனவர்களது ஆன்மா, அதனுடைய சக்தி பற்றி இனக்குழு மக்களுக்கும், பண்டைய நாகரிக நிலையிலிருந்த மக்களுக்கும் உலக முழுவதும் சில நம்பிக்கைகள் இருந்தன. இறந்து போனவர்களுடைய ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம். அது ஆக்கச் சக்தியாகவும், அழிவுச் சக்தியாகவும் வெளிப்படலாம். அவ்வான்மா, அவர்களுடைய சந்ததியாரோடு தொடர்பு கொள்ளும். அவற்றைச் சடங்குகள், வழிபாடுகள், சாந்திகள் மூலம் சந்ததியார் மகிழ்வித்தால், அவர்களுக்கு அவர்களுடைய முன்னோர்களின் ஆவி ஆற்ற லளிக்கும்.[11] போரில் உதவும். ஆடுமாடுகளைப் பாதுகாக்கும். வயல்களில் விளைச்சலை அதிகப்படுத்த உதவும். இதற்காக தமது முன்னோர்களின் ஆவி களுக்குச் சடங்குகள் நடத்தி ஊட்டுக் கொடுக்க வேண்டும். படையல் போட வேண்டும். இதற்கு ஆன்றோர் வணக்கம் (Ancestor Worship) என்று பெயர். ஆப்பிரிக்க மக்கள் இவ்வான்மாக்களுக்கு உருவம் கொடுத்துள்ளார்கள். அவற்றைச் சுட்ட மண்ணாலும், கல்லாலும் செய்து வழிபட்டனர். இவ்வணக்கம் கென்யா, கோல்ட் கோஸ்ட், நைஜீரியா முதலிய நாடுகளில் பல இனக் குழு மக்களிடையே வழக்கத்திலுள்ளது. இதுபோலவே தென்கடல் தீவுகளின் மக்கள், சிவப்பு இந்தியர்களில் பல இனமக்களிடையேயும் வழக்கிலுள்ளது.[12] இந்தியாவில் ஆன்றோர் உருவ வணக்கமில்லாது போயினும், ஆவி வடிவில் அவர்கள் திவசதினங்களில் வழிபடப்பட்டு, பிராம்மணர்களை ஆவியின் உறைவிடமாகக் கருதி உணவளித்து வழிபடும் வழக்கம் உள்ளது. தங்கள் தந்தையருக்குத் திவசச்சடங்கு நடத்தாத வர்களுக்கு பல இன்னல்கள் விளையுமென்பது ஒரு பரவலான நம்பிக்கை.

இந்த ஆன்றோர் வணக்கமே, குழு முன்னோர் வணக்கத்திலிருந்து தோன்றி யிருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவினரும் ஒரு குலக்குறி விலங்கை முன்னோராகக் கருதினர். அதனைப் புனிதமெனக் கருதினர். அதன் வளர்ச்சியாக மனித விலங்கு உருவில் அதனை வழிபட்டனர். பின்னர், இறந்து போன தமது முன்னோர்களை

அதனோடு சேர்த்து வழிபட்டனர். இவர்கள் தெய்வங்களிலிருந்து வேறுபட்ட வர்கள். இவர்களும் குழுவிற்கு ஆற்றல் அளிக்க வல்லவர்கள் என்ற நம்பிக்கை முற்கால இனக்குழு மக்களிடம் இருந்தது.[13] தற்கால மக்களிடமும் உள்ளது. இதன் வெளிப்பாட்டைப் பல குழு வணக்க முறைகளிலும், பலிச் சடங்குகளிலும் காணலாம்.

பண்டைய மக்கள், ஒருவன் தனது குழு உறுப்பினர்களைக் கொல்லுவது பெரிய குற்றமெனக் கருதினர். ஆனால் வேறு குழுவிலுள்ளவர்களைக் கொன்று, தமது ஆன்றோர்களுக்குக் கல்நாட்டி, அவர்களது ஆவிகளுக்கு தமது முன்னோர்களுக்குச் செய்யும் சடங்குகளைச் செய்து விட்டால், அவை தமது முன்னோர்களோடு சேர்ந்து தமது குழுக்களுக்கு ஆற்றலளிக்கும் என்ற நம்பிக்கை அங்காமிநாகர்கள், ஸரவாக்கிலுள்ள தலைவெட்டி மக்கள், நீகிரோவ ஹாட்டன் டாட் ஆகிய மக்களிடையே நிலவுகிறது.[14] இதனால் ஒரு வீரனுடைய சமூக மதிப்பு, அவன் எவ்வளவு மனிதர்களைக் கொன்று, அவர்களது ஆவிகளைத் தனது முன்னோர் ஆவிகளோடு சேர்த்துள்ளான் என்பதைப் பொறுத்து உயர்வடையும். இதை காட்டிக் கொள்ள மேலே குறிப்பிட்ட இனக்குழு உறுப்பினர்கள் மரத்தால் செய்த மண்டையோட்டு உருவங்களை நூலில் கோர்த்து அணிவார்கள். ஒவ்வொரு உருவமும், ஒரு மனிதன் தலையை அவன் வெட்டினான் என்பதைக் குறிக் கும். குழுவின் ஆற்றலை அதிகரிக்க, அதிக ஆவிகளைத் தமது முன்னோர்களாக்க வேண்டும்.[15] அதற்குப் பலரைக் கொன்று, இறந்தவர்களது ஆவிக்கு தமது முன்னோருக்குச் செய்யும் சடங்குகளைச் செய்து, அவர்களோடு சேர்த்து விட வேண்டும்.

இவ்விரண்டு நம்பிக்கைகள் உலக முழுவதிலும், இனக்குழு மக்களிடம் பரவி யிருந்தன. அவர்கள் நாகரிக அணியின் படிக்கட்டுகளில் ஏறுகிற பொழுது நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் செய்து வந்த நரபலி மட்டும் நின்று விட்டது. ஆனால் அதன் எச்சங்கள் (Survivals) இனக்குழு மக்கள் நாகரிக மடைந்த பின்னும் நிலைத்தன. அவ்வாறு நிலைத்த எச்சங்களுள் ஒன்றே நடுகல் வணக்கம். இது போன்றதோர் வணக்கம் உலகம் முழுவதுமுள்ள இனக்குழு மக்களிடையே உள்ளது. தமிழகத்தில் நடுகல் வணக்கம் பண்டை வரலாற்றுக் காலத்தில் இருந்தது. நடுகல் வீரர்களின் ஆன்மாக்களுக்கு ஊரையும், மந்தை யையும், ஊர் மக்களையும் பாதுகாக்கக்கூடிய ஆற்றல் உண்டென்ற நம்பிக்கையில் தான், அவர்களுடைய நடுகற்களுக்கு 'பெரும்படை' செய்து, உணவும், கள்ளும் படைத்ததும், ஆடிப்பாடி வாழ்த்தி மகிழ்விக்க முயன்றதும் ஆகிய செயல்களை ஊராரும், உறவினரும் செய்தார்கள். இறந்தவனது ஆன்மாவைக் கல்லில் நிலையாக இருக்கச் செய்வதற்காகத் தான், பொருத்தமான கல்லை வெட்டிக் கொண்டு வந்து நீராட்டி, ஸ்தாபித்து, உணவும், கள்ளும் கொடுத்துப் பாராட்டினார்கள். வீரன் ஆன்மாவை 'இல்கொண்டு' சேர்த்தது, தங்களோடு இருந்து தங்களுக்கு பசு, எருமை, ஆட்டுமந்தைகளைப் பாதுகாக்க ஆற்றலளிக்க வேண்டுமென்பதற்காகத் தான். தங்கள் ஊரில் வாழ்ந்தவனை மட்டுமல்லாமல், பகைவர் படை வீரர்களுக்குக் கூட, நடுகல் நட்டிருப்பது, தங்களுக்கு உதவக் கூடிய ஆவிகளின் எண்ணிக் கையை அதிகரித்து, தமது ஆவிப்படைவலிமையை அதிகரித்துக் கொள்ளவே தான்.

பிற்காலத்தில் இத்தகைய விழாச் சடங்குகளுக்காக, ஊர் நிலத்தை இரத்தக் காணிக்கையாக நடுகல்லுக்கு எழுதி வைத்தார்கள். இந்த நம்பிக்கை எவ்வளவு அழுத்தமாக இருந்ததென்பதை, இந்த நிலத்தைக் கவருபவனுக்கு எவ்வளவு கடுமையான சாபங்களை அவர்கள் அளிக்கிறார்கள் என்பதே தெளிவாக்கும்.

உதாரணம் :

> "படாரிக்கு நவகண்டங்குடுத்து குன்றகத்தலையறுத்துப்
> பிடலிகை மேல் வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார்
> வைத்த பரிசாவது. எழூர்ப் பறைகொட்டக் கல்மேடு
> செய்தார், ஆவிக்குக் குடுப்பாரானூர். பொத்தனங்
> கிழவர்களும் தொறுப்பட்டி நிலம் குடுத்தார்கள்.
> இது அன்றென்றார் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்
> றுக் காதமும் செய்த பாவத்துப் படுவார். அன்றென்
> றார் அன்றுள் கோவுக்கு காற்ப்பொன் தண்டப்படுவார்"[16]

மேற்கண்ட நடுகல் குறிப்பிடும் ஆவிக்குப் பிண்டமும் நறவும் அளித்தால் அது தமக்கு உதவும் என்ற பயன்பாட்டுச் சிந்தனைகளே அவர்களுக்கிருந்தன. 'கடவுள் எழுதிய' என்பது கூட தெய்வத்தைக் குறிப்பிடாமல், உடல் கடந்த ஆவியின் கற்பனைப் படிமம் என்றும், அதனை அவர்கள் கல்லில் செதுக்கி உருவமாக வழிபட்டனர் என்றுமே கொள்ளவேண்டும்.

போரில் இறந்தவனுக்கென்று, மிகச் சிறப்பு வாய்ந்த உலகம் ஒன்று உண்டென்பது பண்டைய நாகரிக மக்கள் அனைவருடைய நம்பிக்கை. 'எலிஸியம்' என்பது இறந்த வீரர் புகும் சுவர்க்கம் என்றும், அது இவ்வுலகிலேயே உள்ள தென்றும் பண்டைய கிரேக்கர்கள் நம்பினர். இதுபோலவே பண்டைய ஜெர்மானியர், ரோமானியர், எகிப்தியர், தமிழர், சீனர் அனைவரும் " வீர சுவர்க்கம் " என்ற கருத்தில் நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர். இதனைத் தமிழர் 'மேலோர் உலகு,' 'வானோர் உலகு' என்றழைத்தனர்.

அவ்வாறாயின், இறந்த பின் அவனது ஆவி மேலோர் உலகிற்குச் சென்றுவிடும், அவனது . புகழ் தான் இவ்வுலகில் எஞ்சும். பின் ஏன் வீரனுக்குக் கல்நாட்டி வழிபட்டுத் தங்களுக்குத் துணையாக நிற்கவேண்டுமென அவனது ஆவியை வேண்டிக்கொள்ளவேண்டும்? ஆவி இறந்த சில நாட்களுக்கு உலகில் இருப்பதாகவும், சாவுச் சடங்குகள் கழிந்த பின்னரே வேறுலகு செல்வதாகவும் மக்கள் நம்பினர். அதற்குள் கல்நாட்டிச் சடங்கு செய்தால் ஆவியின் ஒரு பகுதி அங்கு தங்கும், விழாக்காலங்களில், பழம்பிறப்பு உணர்வுடைய மேலோர் உலகிலுள்ள அந்த ஆவி, இக்கல்லுக்கு வரும் என்ற நம்பிக்கை வழிபடுபவர்களுக்கு இருந்தது. வேண்டிக் கொள்ளுகிற நேரத்தில் வானோர் உலக ஆவி, கல்லுக்கு வந்து விடும். பின் அது வணங்கும் மக்களுக்குத் துணை புரியும்.

இதனால் தான் மக்கள் போருக்குச் செல்லும்பொழுது நடுகற்களை வணங்கி, பலி கொடுத்து, நடுகல் ஆவிகளது துணை பெற்றுச் செல்வதாக நம்பினார்கள்.

நடுகற்களில் பழமையானவற்றில் வீரன் போரில் பகைவர் அம்பாலோ, வேலாலோ புண்பட்டு நிற்கும் நிலை மட்டும் தான் செதுக்கப்பட்டுள்ளது. இங்கு அவன் இவ்வுலக வீரனுக, மூவிற்காக உயிர் கொடுத்த ஓர் மேலோனுகக் காட்டப் பட்டுள்ளான்.

அதற்குப் பிற்காலத்தில், கீழே மேற்குறிப்பிட்டபடி ஓர் படைப்புச் சிறபமும், அதற்குமேல் மேலோர் உலகச் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. அதில் வான மங்கையர் அவனை மாலையேந்தி மேலோர் உலகில் வரவேற்பது போலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இது 'மேலோர் உலகு' என்ற கருத்தின் நம்பிக்கையைக் குறிப்பிடுவதாகும்.

புலப்பள்ளி நடுகல்லில் மூன்றடுக்குகள் உள்ளன. முதல் அடுக்கில் வீரன் புண்பட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளான். இரண்டாவது அடுக்கில் வான மடந்தையர் வரவேற்கிறுர்கள். மூன்ருவது அடுக்கில் ஒரு சிவலிங்கமும், நந்தியும் இருக்குமிடத்தில் அவன் வணங்கி நிற்கிறுன். நாயன்மார்கள் காலத்திற்குப் பின் சைவம் பொது மக்களிடையே பரவிய காலத்தில், வீரசுவர்க்கத்திற்கு மேல் சிவலோகம் என்ற ஓர் உலகம் உண்டென்ற கருத்துத் தோன்றியது. அதன்பின், மேலோர் உலகிற்குச் சென்ற வீரன், இறுதியில் சிவலோகம் சேர்வான் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. இக்கருத்து வளர்ச்சியைப் புலப்பள்ளி நடுகல் காட்டும்.

வீரன் எவ்வுலகம் சென்ருலும், அவனேடு தொடர்பு கொண்டிருந்த மக்கள், அவனுக்குக் கல் நாட்டி, அவன் ஆவியைக் கல்லுக்கு வரவழைத்து, அதனிடம் உலகியல் பயன்களையே பெற விரும்பினர். ஆவி செல்லுமிடம் மேலோருலகிலிருந்து சிவலோகமாயிற்றே தவிர, வழிபடும் மக்களின் பயன்பாட்டு நோக்கம் மாறவில்லை.

---

1. புறநானூறு—243.
2. மயிலை சீனி வேங்கடசாமி--சங்ககால நடுகற்கள். ஆராய்ச்சி-மலர் 1-இதழ்.
3. Myth and reality—D. D. Kosambi Chapter: At the cross roads.

4, 8. செங்கம் நடுகற்கள்—முன்னுரை.

5, 6. The golden lough—J. G. Frazer.

7. Rain in life and lore—Sankar Sengupta.
9. மேற்கோள்கள் 1 to 6 செங்கம் நடுகல் வாசகங்கள்.
10. மேற்கோள்கள் 1 to 4 செங்கம் நடுகல் வாசகங்கள்.
11. The Religion of a tribe—Venier Elwin. Chapter on Ancestor worship.
12. Myths of Africa—Hamlya-London.
13. Tribes and people of India—Majumdar, chapter on Cannibalism.
14. The study of Man—Collections of article—Anthropological Society of America.
15. Tribes and peoples of India—Chapter on Prestige among the tribes—[Majumdar.
16. செங்கம் நடுகல் வாசகம்.

# செங்கம் நடுகற்களும், இலக்கியமும்

ச. வரதராசலு.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் வெளியிடப் பட்டுள்ள 'செங்கம் நடுகற்கள்' நூலில் உள்ள நடுகற்களைப் பற்றிய செய்திகள், நாம் பண்டைத்தமிழ் இலக்கியங்களிலிருந்து நடுகற்களைப் பற்றி அறிந்து கொள்கிற செய்திகளுக்கு நேரடிச் சான்று பகர்வனவாக அமைந்துள்ளன. ஆநிரை கவர்ந்து செல்வதிலும், ஆநிரை மீட்டலிலும் நடந்த வெட்சி, கரந்தைப் போர்களில் இறந்துவிட்ட வீரர்களுக்கு நடப் பட்ட நடுகல் செய்திகளே இலக்கியங்களிலும் அதிகம். இங்கு கிடைத் துள்ளனவும் அவ்வாறே.

ஆநிரை மட்டுமல்லாது ஆட்டுமந்தைகளையும், எருமைகளையும் கவர்ந்து சென்றவர்களை எதிர்த்து, அவைகளை மீட்ட போரில் இறந்து பட்ட வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற் செய்திகளும் 'செங்கம் நடுகற்க'ளில் குறிப்பிடப்படுகின்றன. நிரையல்லாத யானைக் கன்றைக் கவர்ந்ததைப் பற்றிய செய்தியை அகநானூறு (பாடல் 83) கூறுகிறது. இதிலிருந்து ஆநிரை மட்டுமல்லாது எருமைகள், ஆட்டுமந்தை ஆகியவற்றைக் கவரும் வழக்கமும் உண்டு என்பது உறுதிப்படுகிறது.

போரில் இறந்துபட்டார்க்கும் நடுகல் எடுக்கப்பட்டது. வடக் கிருந்து உயிர்நீத்த மன்னனுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. தவிர, முதலில் புறமுதுகிட்டு, பின்னர் அதையெண்ணி நாணித் தம்மை மாய்த்த வீரர்க் கும் கல் எடுக்கப்பட்டது (மலைபடுகடாம்). செங்கம் நடுகற்களில், வீரனொருவன் தன் விரதம் முடித்ததன் நினைவாகக் கொற்றவைக்குத் தன் தலையையே அறுத்துப் பலியாகக் கொடுத்ததும், அதைக் குறித்து நடுகல் நடப்பட்ட செய்தியும் குறிக்கப்படுகிறது. இவ்விரண்டும் ஒப்பு நோக்கத் தக்கன. எருமைகளைக் கள்ளர் கவர்ந்து செல்ல, தந்தையும் மகனும் எதிர்த்துப்பட்டதை (1971/75) ஒரு கல்வெட்டுக் காட்டுகிறது. அகநானூற்றில் குறிப்பிடப்படும் நடுகல் வீரர்களில் பெரும்பாலோர், பாலை நிலத்தில் வாழ்கின்ற கள்ளர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும் போது அவைகளை மீட்கும் சண்டையில் இறந்தவர்களேயாவர்.

செங்கம் நடுகற்களில் பல சேவகர்களுக்கே நடப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. (தொடர் எண்: 77, 88, 89) ஆடவர் . . . நடுகல் (அகம் 131), தொலைந்தோர் . . நடுகல் (அகம் 156), ஆடவர் நல்நிலை பொறித்த கல்நிலை (அகம் 179), நாணுடை மறவர் நிரைநிலை நடுகல் (அகம் 387) ஆகியவற்றில் குறிக்கப்பெறும், ஆடவர், தொலைந்தோர், மறவர் முதலிய சொற்கள் சாதாரண போர் வீரர்களைப் பற்றிய செய்திகளையே குறிக்கின்றன.

நடுகற்கள் சாலை ஓரங்களில் நடப்பட்டுள்ளதை இந்நூல் எடுத்துரைக்கிறது. (எண் 48, முன்னுரை) சங்க இலக்கியங்களை இவை அரண் செய்கின்றன (அகம் 131, 179, 53, மலைபடுகடாம் 338-389).

சிற்றூர்களுக்கு அருகிலும், செல்ல அஞ்சும் காடுகளிலும் நடுகற்கள் இருப்பதைக் குறிப்பதோடு, மோத்தக்கல் என்னும் ஊரில் ஆற்றங்கரையின் நடுகற்கள் நடப்பட்டிருந்த செய்தியையும் இந்நூல் குறிக்கின்றது. புறம் 260-இல் ஆற்றங்கரையில் உயிர் நீத்த வீரன் ஒருவனையும், அவனுக்கு நடப்பட்ட நடுகல்லைப் பற்றியும்,

> கானச் சிற்றியாற் றருங்கரைக் கானுற்றுக்
> கம்ப மொடு துளங்கிய விலக்கம் போல
> அம்பொடு துளங்கி யாண் டொழிந்தன்றே

என்று குறிப்பிடுவதை ஒப்பிட்டு நோக்கலாம். சில நடுகற்கள் மராமரங்களின் அடியில் இருந்தன என்று இலக்கியங்கள் (மலைபடுகடாம் 394-6, பொருநராற்றுப்படை 50-52) குறிப்பிடும். செங்கம் வட்டத்தில் உள்ள நடுகற்கள் வேடியப்பன் போன்ற கோயில்களில் உள்ளவை. இங்கு மரங்கள் இருப்பது சாத்தியமே.

நடுகற்களை இறந்து பட்ட வீரனைச் சேர்ந்த அரசரும், ஊரினரும், இளையரும், தனிமனிதர்களும் நட்டிருக்கக்கூடும். செங்கம் நடுகற்களில் ஒன்று கூடல் இளமக்கள் நடுவித்ததைக் குறிக்கிறது. அகநானூற்றுச் செய்யுள் ஒன்று (269), போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகற்களை நட்டு, நீராட்டி, கரந்தை மாலை சூட்டி இளையர் திரும்புவதைக் கூறுகிறது.

நடுகற்கள் நிரையாக நடப்பட்டிருந்ததை இந்நூல் எடுத்துரைக்கிறது. (முன்னுரை, எண் 119)

> நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
> நிரைநிலை நடுகல்

என்ற அகப்பாடலும் (எண் 387) இதைக் காட்டும். புறப்பொருள் வெண் பாமாலையும் இதனை அரண் செய்யும்.

பல்லவர் சிற்பங்களைப் போன்று பாறைகளிலேயே வீரர்களின் படிவங்களைச் செதுக்கிய கற்கள் இருந்தனவாகவும் தெரிகிறது.

ஏறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிஅரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுகணாளர் நல்லிடை நிறுமார்
பிடிமடிந்தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி (அகம் 269)

இதில் நட்ட போலும் நடாஅ நெடுங்கல்லையும் அதிலே செதுக்கப் பட்டுள்ள பல்வேறு வடிவங்களையும் பற்றிய செய்திகளை அறிகிறோம். 'நடாஅ நெடுங்கல் அகலிடங் குயின்ற' என்பதனால் பல்லவர் காலத்திற் போல இயல்பாய பாறையைக் குடைந்து படிவம் இயற்றும் வழக்கம் அஞ்ஞான்று இருந்ததென்பது புலனாகிறது. 'பல்பெயர் என்புழி, பெயர் என்பது பொருள்; ஆவது படிவம் என்க' என்று உரையாசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மறவர்கள் அம்புகளைத் தீட்டுவதனால் நடுகற்களின் மீது எழுதப் பட்டுள்ள எழுத்துக்களில் சில மறைந்து விட்டனவாகவும், அவற்றை இணைத்துப் படிக்க இயலாமல் அவ்வழிச் செல்லும் புதியவர்கள் படிக்கும் நோக்கத்தையே கைவிட்டுச் சென்றனர் என்றும் (அகம் 287) ஒரு பாடல் காட்டும். இதுபோல உப்பு வணிகரது வண்டியின் சக்கரங்களில் உள்ள பூண்கள் சிதைத்த நடுகல்லைப் பற்றியும் அறிகிறோம். இதன் மூலம் இக் காலத்தில் கிடைக்கும் உடைந்த நடுகற்களைப் பற்றியும், சிதைந்த எழுத்து களையும், அதைப் படிக்கும் கல்வெட்டு ஆய்வாளர்களது பணி எத்தகைய சிரமமானது என்பதும் தெரிய வருகிறது.

சங்க கால நடுகற்கள் அளவில் பெரியனவாகவும், வலிமை வாய்ந்தன வாகவும் இருந்திருக்கக்கூடும். புறப்பொருள் வெண்பாமாலையும் ஓங்கியகல் (சூ.10, கொளு 11) என்று குறிப்பிடுகிறது. நெடுநிலை நடுகல் (அகம் 289), நெடுங்கல் (அகம் 269) என்று குறிப்பிடப்படுவதையும் காணலாம்.

. . . . . . புன்கண்மாலை
அத்தம் நடுகல் ஆளென உதைத்த
கானயானை கதுவாய் வள்ளுகிர்

இரும்பனை மதக்கையின் ஒடியும் (அகம் 365)
நடுகல்லை உதைத்த காட்டு யானையின் நகம் பெயர்ந்ததிலிருந்து நடுகல்லின் வலிமையை அறியலாம். ஆனை உதைத்ததால் சிறப்புக் கல்லாகவும் இருக்கலாம் என்று தெரிகிறது.

இரும்பாலான, சூலமும், கத்தியும் நடப்பட்டதைச் செங்கம் நடுகற்கள் குறிப்பிட, அக்கருத்தையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. (அகம் 67, ப. பாலை 78-81) நடுகல் வழிபாடும், சங்க இலக்கியம் காட்டுவது போல இன்றும் இருப்பதை இந்நூல் குறிப்பிடுகிறது.

இவ்விதம் வளர்ந்த நடுகல் வழிபாடு, நடுகல்லில் தெய்வம் உறைகிறது என்ற நம்பிக்கையைப் படிப்படியாக வளர்த்தது. கல்லில் உறைகின்ற தெய்வத்தினை, நெல்லால் ஆகிய கள்ளொடு செம்மறிக் குட்டியைப் பலி கொடுத்துத் துடிகளை முழக்கி வழிபட ஆரம்பித்தனர். (அகம் 35) நடுகல் வணக்கம் ஒரு நாட்டுப் புறப்பண்பாடாகவே ஆரம்ப காலத்தில் இருந்தது. 'முற்றிலும் உலகியல் இலாபங்களுக்காகவே நடுகல் நட்டதும், நடுகல் வழிபாடு செய்ததும்' என்று நா. வானமாமலை அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் (ஆராய்ச்சி இதழ் அக்டோபர் 72 பக்கம் 140). சாதாரணப் பொது மக்கள் நடுகல்லைத் தவிர வேறு கடவுளரை வணங்குவதில்லை என்று புறப்பாடல் ஒன்று கூறும் (புறம் 335).

சமுதாயத்தின் வளர்ந்த நிலையில் உள்ள குடிகளிடத்தில் சிவன், திருமால், போன்ற கடவுள் வணக்கங்கள் தோன்றிய பின்னரும், நாட்டுப்புறப் பொதுமக்கள் மத்தியில் நடுகல் வணக்கமுறையே பரவியிருந்ததை 'செங்கம் நடுகற்கள்' தெரிவிக்கிறது. தருமபுரி, வடஆர்க்காடு மாவட்டங்களில் நடுகற்கள் வேடியப்பன் என்ற பெயரிலும், வேறு சிறு தெய்வங்கள் பெயரிலும் இன்றும் வணங்கப்படுவதைக் காணலாம். நூல் முன்னுரையும் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உண்மையிலேயே 'செங்கம் நடுகற்கள்,' தமிழக மக்களுக்குக் கிடைத்துள்ள அரிய கருவூலமாகும்.

# நடுகல்லும் இலக்கியமும்

## இ. சுந்தரமூர்த்தி

வீர வணக்கத்தின் அடிப்படையில் தோன்றிய நடுகல் வழிபாடு, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வழக்கில் இருந்த ஈமச்சடங்குகளான பெருங்கற் சின்னங்களுடன் தொடர்புடையது. இன்று கோவை மாவட்டத்தில் ஒருவர் இறந்த 5-ஆவது நாள் அல்லது 7-ஆவது நாளன்று பெண்கள் 'கல்லுக்கு வைப்பது' என்று ஒப்பாரிப் பாடல்கள் பாடுவது நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியைக் காட்டுகிறது. தமிழ்இலக்கியங்களில் நடுகல் வழிபாடு, தொல்காப்பியம் முதல் திருவாரூர்மும்மணிக் கோவை வரையில் எல்லாக்கால இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

தொல்காப்பியம் நடுகல் வழிபாட்டிற்குரிய இலக்கணங்களை வரிசைப்படுத்திக் கூறுவது போலவே, புறப்பொருள் வெண்பா மாலையிலும் நடுகல் இலக்கணங்கள் வரிசைப்படுத்திச் சொல்லப் படுகின்றன.

ஆண்களுக்கு மட்டுமின்றிக் கற்பிற் சிறந்த காரிகையருக்கும் வீரக் கல் எடுத்து வழிபட்ட வழக்கினைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது (சிலம்பு 27-14-16).

நீதி இலக்கியமான திருக்குறள் 'படைச்செருக்கு' என்ற அதி காரத்தில் கல்லாய் நின்ற வீரரைப் பற்றிப் பேசும் நடுகல் வழக்கினை நாம் உணரலாம் (குறள் 771).

பழந்தமிழர் வீரம் பேசுகின்ற புறநானூற்றில் 11 க்கு மேற்பட்ட பாடல்கள் நடுகல் செய்தியினைக் குறிக்கின்றன.

வடமோதங்கிழார் என்ற புலவர், "வீரனின் உயிர் ஆநிரை மீட்ட போது பிரிந்தது; உடல் சிற்றூற்றங் கரையில் அம்புகள் துளைக்கப்பட்டு கிடக்கிறது; ஆனால் அவன் பெயரோ புடவைப் பந்தலின் கீழ் நட்ட கல்லில் விளங்குகிறது" என்று பாடுகிறார். இந்த புடவைப்பந்தலே நாளடைவில் கூரையாகி, கட்டிடமாகி, சோழர் காலத்தில் 'பள்ளிப்படை' என்ற கோயிலாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

புறநானூற்றுக் காலத்திலேயே நடுகற்கள் வழிபடப்பட்டன. தன் கணவன் வெற்றி பெற வேண்டிப் பெண்ணொருத்தி நடுகல்லை வழி பட்டதைப் புறம் 306 கூறுகிறது. மாங்குடிக்கிழார் இவை தவிர சிறந்த மலர்கள் இல்லை, இவை தவிர சிறந்த உணவுப் பொருள்கள் இல்லை, இவர்கள் தவிர சிறந்த குடிகள் இல்லை என்று கூறுமிடத்துப் பூவும், நெல்லும் சொரிந்து வழிபடுவதற்கு நடுகல் தவிர வேறு சிறந்த தெய்வம் இல்லை என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது (புறம் 335).

அதியமான் நெடுமானஞ்சியைப்பாடும் ஔவையார் வாயிலாக நடு கல், பீலிசூட்டி, மதுவால் நீராட்டப்பட்டு வணங்கப்பட்டதை அறியலாம்.

வடக்கிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ் சோழனின் நடுகல்லைப் பொத்தியார் பாடுவதன் வாயிலாகப் புகழ் மரணம் எய்தியவர்களுக்கும் நடு கல் நடப்படும் மரபுண்டு என அறியலாம்.

புறநானூறு போலவே அகநானூற்றிலும் பத்திற்கு மேற்பட்ட பாடல்கள் நடுகல் பற்றிச் சொல்கின்றன.

மதுரை மருதன்இளநாகனார், 'கன்றின் கடை மணி உகுநீர்' துடைத்தற்காக ஆநிரை மீட்டு மாண்ட வீரர்களின் நடுகற்கள், பாலை நில வழி தோறும் உள்ளதாகக் காட்டுகிறார் (அகம் 131).

மறவர்கள் தங்கள் அம்புகளைத் தீட்டியதால் நடுகல்லில் உள்ள எழுத்துக்கள் தேய்ந்து போயின என்று 297-ஆம் பாடல் கூறுகிறது.

நடுகற்களை ஆள் என்று நினைத்து உதைத்து மயங்கிய யானைகளின் துன்பத்தை 365-ஆம் பாடல் காட்டுகிறது.

பட்டினப்பாலையில் நடுகற்களுக்கு வீரர்களின் விற்களும் கேடயங் களும் அரணாக அமைந்த செய்தி அறியக் கிடக்கிறது (பட்டினப் 78-79).

இவைதவிர நடுகல் பற்றிய செய்திகளை ஐங்குறுநூறு (352-2), மலைபடுகடாம் (387-390), ஐந்திணை ஐம்பது (35 2), சீவகசிந்தாமணி (மண்மகள் 2302), பெருங்கதை, திருவாரூர் மும்மணிக்கோவை (16-1-2) ஆகிய இலக்கியங்களிலும் காணலாம்.

* * *

# நடுகல்லும் இலக்கியமும்

வித்துவான் பெ. கு. வரதராசன், எம். ஏ; பி. ஓ. எல்; பி. டி.

இலக்கியம் மக்கள் பண்பாட்டு ஓவியம் என்றால், வரலாறு புகைப் படம் எனலாம். அவ்விலக்கிய ஓவியங்காட்டும் நடுகல்லைப்பற்றிக் காணலே இக்கட்டுரையின் நோக்கம்.

சாலப் பழமை வாய்ந்த தொல்காப்பியம் போர்க்காலத்து இறந்து பட்ட வீரர்களுக்காக நடுகல் எடுக்கும் பழக்கம் தமிழ் மக்களிடையே இருந்தது என்பதை அறிவிப்பதோடு, அதனை எம்முறையில் எடுத்தனர் என்பதையும் எடுத்தியம்புகிறது. நடுகல் 'உழலைக்கல்' என்றும் வழங் கப்பட்டுள்ளது.[1]

தொல்காப்பியத்திற்குப் பின்புத்தோன்றியதாகக் கருதப்படும் சங்க நூற்களில் நடுகல் பற்றிய செய்திகள் பரக்கப் பேசப்படுகின்றன. இவற் றின் மூலம் வீரர்களுக்கேயன்றி, நாட்டு நலன் கருதி வடக்கிருந்தோர்க்கும், புலமைப் பெரியோரைப் போற்றிப் புரந்த புரவலர்க்கும், கற்புக் கடம் பூண்ட பொற்புடை மங்கையற்கும் நடுகல் எடுக்கும் பழக்கம் இருந்தது என்பது புலனாகிறது.

இங்ஙனம் அரிய செய்த பெரியோர்க்காக எடுக்கப்பட்ட நடுகற்களைப் போற்றி வழிபாடு செய்துள்ளனர். அக்கற்களுக்கு வெயில், மழை போன்ற இயற்கை ஆற்றல்களால் ஊறு நேரா வண்ணம் பந்தர் அமைத்துள் ளனர். ஆனிரைகள் தம் தினவு போக்க உராயாவண்ணம் வேல் கொண்டு வேலி இட்டனர், அவற்றிற்குக் கள்ளைப்படைத்து மறியறுத்துப் பலிகொடுத்தனர், மயிற்பீலி சூட்டி, இலையும் தழையும் தூவி வழிபாடு செய்தனர். இந்நடுகற்களை மனதில் நினைத்தால் தம் அச்சம் அகலும் என்று மக்களும், இவ்வீரக்கல்லை வழிபட்டால் தமக்கு வெற்றி கிடைக்குமென்று வீரர்களும் நம்பி வழிபட்டனர். பெயரும் பீடும் எழுதி மயிற்பீலி சூட்டப்பட்ட இந்நடுகற்களே சிறந்த தெய்வம் எனக்கருதப்பட்டன காலப் போக்கில் இவையே தெய்வம் எனப் போற் றினர். இன்று தமிழக மெங்கணும் காணப்படும் ஐயனார் கோயில்கள் இந்நடுகல் வழக்கோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

இந்நடுகற்களுக்குப் பின் வந்த புறப்பொருள் வெண்பாமாலை ஆறு
வினை அமைதிகளைக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. அதோடு இது
காறும் கூறி வந்த நடுகற்கள் தோன்றி வளர்ந்த முறையினைத் திரட்டி
இலக்கணமாக்கிவிட்டது.

மேற்கண்ட இலக்கியங்களும் இலக்கணங்களும் கூறுகின்ற நடுகற்
கள் பெரும்பாலும் சேலம், தருமபுரி, வடவார்க்காடு, மைசூர் ஆகிய பகுதி
களில் மட்டுமே காணப்படுகின்றன. அவைகளில் பலவற்றை நமது
தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.
அவற்றுள் வீரனுக்குத் துணை நின்ற நாய்க்கும் புலி, பன்றி ஆகிய
கொடிய விலங்குகளிடமிருந்து ஊரையும் ஆநிரைகளையும் காத்த வீரர்
களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையான
நடுகற்கள் தொப்பூர் காட்டிலும், மேச்சேரிக்கு அண்மையிலுள்ள ஊர்களி
லும் காணப்படுகின்றன. இவற்றுள் சில எழுத்தில்லாதிருப்பது ஒரு
குறையே.

நாகோவுன ஹல்லி எனப்படும் நாகரசம் பட்டியில் இப்பொழுது
வாழ்கிற மக்கள் தங்களைச் சேனைத்தலைவர்களென்றும், முருகப்பெரு
மானின் துணைவன் வீரபாகுவின் வழி வந்தவர்களென்றும் கூறிக் கொள்
கின்றனர். இவர்களுடைய பூர்வீகத்தினர் செங்கம், சிங்காரப்பேட்டை,
கம்பை நல்லூர், சேலம், சேந்தமங்கலம் பகுதிகளில் வாழ்ந்ததாகத் தெரி
கிறது. அங்கெல்லாம் காணப்படும் நடுகற்கள் 'அதியமான் அஞ்சி
போன்றாரோடு சேர்ந்து போரில் ஈடுபட்டவர்களுக்காக எடுக்கப்பட்டதாக
இருக்கலாம். தருமபுரி மாவட்டம் பெண்ணேசுவர மடத்தில் ஏராள
மான நடுகற்கள் இன்றும் உள்ளன.

மைசூர் பகுதியில் சீரங்கப்பட்டணத்தில் 'Thippus body was
found here' என்று பொறிக்கப்பட்ட கல்லும், நீலமலை மாவட்டம் சிங்
காரா மின் நிலையத்துக்குக் கீழ் மலையுச்சியில் காணப்படும் வெள்ளைய
வீரனுக்கு எடுக்கப்பட்ட நினைவுக்கல்லும் இங்கே குறிப்பிடத்தக்கது.
இவற்றை நடுகற்களென்று கூறுவதைவிட தாஜ்மகால், பிரமிடுகளைப்
போன்ற நினைவுச் சின்னங்கள் எனலாம்.

நாம் இதுவரை ஆய்ந்து கண்ட நடுகற்களின் இறுதிக்காலம்
பத்தாம் நூற்றாண்டோடு முடிவடைகிறது. பிற்கால சோழர் காலத்திற்குப்
பின் நடுகற்களே தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.[2]

1. மதுரைத் தமிழ் அகராதி-பகுதி 2
2. Sangam polity. Page. 131 Dr. N. Subramaniyam

# நடுகல்லும் இலக்கணமும்

முத்து. எத்திராசன்

புறப்பொருள் வெண்பாமாலையில் வாகைப்படலத்தில், 'மூதின்முல்லை' 'ஏருண் முல்லை' ஆகிய துறைகளிலும், பொதுவியற் படலத்தில், 'கற்காண்டலலே கற்கோள் நிலையே, கல்நீர்ப்படுத்தல், கல்நடுதல்லே, கன்முறை பழிச்சல்' ஆகிய துறைகளிலும் வரும் கல் என்ற சொற்கள் நடுகல்லைக் குறிப்பன. தொல்காப்பியர் 'நடுகல்' என்ற சொல்லைக் குறிப்பிடவில்லை. 'கல்நடு' என்பது முன்பின்னாகி 'நடுகல்' என்று இலக்கணப் போலியாயிற்று.

தொல்காப்பியர் கல்நடுவது வெட்சியாருக்கும் கரந்தையாருக்கும் உரியது என்னும் பொருள் படும்படி வெட்சித்திணையில் வைத்துள்ளார், ஆனால் புறப் பொருள் வெண்பாமாலை, வெட்சி முதல் பாடாண் ஈறாய ஒன்பது திணைக்கும் பொது வான துறையாகிய பொதுவியல் படலத்தில் இதைக் குறிப்பிடுகிறது. இளம்பூரண ரும் இக்கூற்றுக்கு உடன்படுவர்.

நடுகற்களில் வீரர்களைப் பெரும்பாலும், இடக்கையில் வில்லும், வலக்கையில் வாளும் வைத்த நிலையில் காண்கிறோம். இவ்விலக்கணத்தை, 'கூற்றினத்தன்னார் கொடுவில் இடனேந்தி' (வெட்சி - செலவு) என்ற வரியாலும், ஒள்வாள் வலனேந்தி' (வாகை - மறமுல்லை) என்ற வரியாலும் அறியலாம். இன்னும் அவர்தம் உருவினை

காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார் — காலன்
கிளர்ந்தாலும் போல்வார் இணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப் பெயர்வு முண்டு — பு. வெ மா. கரந்தையரவம்.

வெண்கண்ணியும் கருங்கழலும்
செங்கச்சும் தகை புனைந்தன்று — வாகையரவம்.

ஆகியவற்றின் மூலம் அறியலாம்.


இறந்துபட்ட மறவரின் நடுகல் வழிபாட்டினை, கல்முறைபழிச்சல், விற்கொண்டு புகுதல் ஆகிய துறைகள் காட்டுகின்றன.

பு. வெ. மாலை வீரர்தம் மனைவியரை 'எயிற்றியர்' (வெட்சிப்படலம்) என்று குறிக்கும். எனவே எயினர், அதாவது வேடர்களே பெரும்பாலும் மறவர்களாக இருந்ததால், அவர்க்கே கல் நடப்பட்டன. எனவேதான், நடுகற்கள் இன்றும் வேடியப்பன் கோயில் என்று வழங்கப்படுகின்றன போலும்!

தொல்காப்பியர், ஆநிரை கவர்தலை மட்டுமே குறிப்பிடுகிறார். பு. வெ. மாலை 'வெட்சி நிரை கவர்தல், என்று பொதுவாகக் குறிப்பிடும். அதற்கேற்பவே, ஆடு எருமை இவை கவரப்பட்ட செய்திகளையும் செங்கம் நடுகற்கள் தருகின்றன.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி ஆகிய திணைகளில் அடங்கும் நடுகற்கள் செங்கம் பகுதியில் கிடைத்துள்ளன. வீரணம் நடுகற்கள் இரண்டு (தொ. எண் *1971-46, 47*) மறனுடைய பாசி என்னும் துறையைச் சாரும்.

புலியுடன் போரிட்டு இறந்த மறவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லை, களிற்று டனிலைக்கண் (பு. வெ. மாலை) களிறெறிந்து எதிர்ந்தோர் பாடு (தொல்) ஆகிய துறைகளோடும், கள்ளரைக் கடித்துக் காத்திருந்த நாய்க்கு எடுக்கப்பட்ட நடுகல்லை, குதிரைமறம், யானைமறம் போன்ற துறைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்தல் சிறப்புடைத்து.



# SIMHAVISHNU

S. HARIHARAN, M.A;
Epigraphist, Department of Archaeology.

The first of the great Pallava rulers of Kanchi was Simhavishnu or Avanisimha, son of Simhavarman. No inscription or copper plate grant dated in the regnal years of this illustrious king have come down to us barring the recently discovered hero-stone epigraphs. But his name is perpetuated in the form of eulogical references by his successors in their inscriptions and copper plate grants and merited mentions by contemporary kings of Ganga and Chalukya dynasty in their records. Simhavishnu was the first Pallava sovereign who extended his sway beyond Kanchipuram as far as Thiruchirapalli in the south, as is evidenced by subsequent inscriptions.

The earliest reference to Simhavishnu can be found in a verse in the Paḷḷankoil copper plate charter of Simhavarman, Simhavishnu's father and predecessor, as follows.

"He in whom the group of virtues (Beginning with truthfulness satya), sacrifice (tyāga), modesty (vinītata), has found an abode and in whom the quality of warriors (kshātraguṇa) has become very highly developed (to the extent) not found in any one else, conquered the land of the Cholas which had as its garland the daughter of Kavera (i. e.) the river Kaviri, and as its waist-band (mēkhalā) the rice fields, the rich fields of sugarcane the groves of palm trees, plantains and the like".

सत्यत्यागविनीताादिविमलं यस्मिन्नलब्धास्पदं बृन्दक्षात्रगुणं समुन्नतमतावन्येष्वलब्धास्पदम्।
येनाहारितरांकबेरतनया हारापि चोळावानि दशालेयेक्षुवणां शुकाक्रमुकरम्भारामसन्मेखला ॥

From this we come to understand that Simhavishnu was a great warrior, who conquered the Chola country of the Kaveri delta. That this conquest of the Tamil regions was no mere formal praise is seen in the absence of reference to any similar achievements in the records of his son Mahendravarman I and suggest clearly that he must have inherited the region around the Kaveri as part of the ancestral dominions.

The Pallankoil copper plate grant of Simhavarman, instead of praising the valour and other qualities of donor king contains an eulogy of his son, an unusual phenomenon. From this it is reasonable to infer that Simhavishnu was then the crown-prince associated with the administration of the kingdom. It may be conjectured that Simhavarman was in his old days, and was exercising only nominal authority and that the son in the prime of life was the *de facto* ruler and the chief driving force in the kingdom.

The above reference finds its corroboration in the Hosakote plates of the 12th regnal year of the Western Ganga king Avinīta Kongaṇi Mahādhirāja (C.A.D. 530-609). The grant records the gift of lands to the Yavanika Sangha of the Jain as intended for the temple of God Arhat, constructed and consecrated by the mother (Jananī) of the Pallava prince Simhavishnu. The copper-plate describes Simhavishnu as "the Pallavādhiraja engaged in ruling (his subjects) skilled in all counsels and statecraft and possessed of intellect purified by being washed in the waters of the different Agamas".

शासनाधिकृतस्य सकलमन्त्र तन्त्रोन्तर्गतस्य विविधागम जलप्रक्षालित विशुध्दबुध्दे :
पल्लवाधिराजस्य सिंहविष्णु :

The Hosakote grant does not speak of the relationship between Avinita and Simhavishnu's mother but mentions only the name of her son, the prince who was then conducting the affairs of the kingdom. The contemporaneity of Avinīta and Simhavishnu is evident from this plate.

Mahendravarman I, Simhavishnu's son and successor has eulogised his father in his *magnum opus* "Mattavilāsa Prahasana" a burlesque Sanskrit Drama, in the following words.

पल्लवकुलधरणिमण्डल कुलपर्वतस्य सर्वनयविजित समस्तसामन्तमण्डलस्य आखण्डल समपराक्रमश्रिय :
श्रीमद्हिमानुरूप दानविभूति परिभूत राजराजस्य श्री सिंहविष्णुवर्मण : ||

"Simhavishnu like a mountain which bore the weight of the family of the Pallavas, had overcome all the circles of the feudatory princes by his policy, had the praises equal to that of Indra and had humiliated even Kubera, the lord of heavenly wealth by his benovalence, greatness and wealth".

The Avantisundarikathāsāra of Daṇḍin opens with a description of the Pallava court at Kanchipuram in the reign of Simhavishnu and the invocatory verse contains a veiled reference to Simhavishnu.

दनुजपतिहृदय भूधर विभेद विज्ञाता शक्ति नख कुलिशम् ।
जगदुदय हेतु विष्णुरवतु वपुर्नरसिंहं वः ॥

Further verses 13 and 14 of the same work speak of Simhavishnu's prowess in destroying the adversities of the learned.
"In the family of the Pallavas there was born the king known as Simhavishnu who had destroyed the last shred of adversity from the group of the learned".

जज्ञेबुधप्रातध्वस्ताखिल विपल्ल : । पल्लवेषु महीपाल : सिंहविष्णुरितिस्मृत : ॥
गरिम्ना स्थावरान् सर्वानोजसा जङ्गमानपि । योविजिग्ये भुजश्लाघो भूभर्तृनुभयानपि ॥

"He being famous to the praise of his arms conquered by the kings of the moveables and the immoveables, the former by his splendour and the latter by his greatness".

In the Udayendiram plates of Nandivarman Pallavamalla II, Simha vishnu's devotion to Vishnu is attested.

भक्तयाराधित विष्णु : सिंहविष्णु :

The Kāsakkuḍi plates of the same king mention that Simhavishnu vanquished "the Malaya, Kalabhra, Malava, Chola and Pandya kings, the Simhala king who was proud of the strength of his arms and the Keralas".

अभवदवनिसिंह : सिंहविष्णुर्विजिष्णु : ।
मळयम ? कळभ्रं मालवं चोळ पाण्ड्यौ ॥
निजभुज बलदृहसान् सिंहळं केरळांश्च ॥

Of these the Malaya, may be identified with the Malaiyan or Malayaman, the chief who was ruling over the Malainādu country in the Nadunāḍu with Thirukkovalur as its capital. The Malava is very probably the Malava or Malavarayan, the chieftain ruling over the region on the borders of the Thiruchirapalli and Salem Districts round about the Kothimalai. The Kalabhra is referred to in many other records, even though there has been much uncertainty about their origin and manner of their coming to the Tamil country. According to the Vēḷvikkuḍi plates

Kalabharas had occupied the Pandya country and were ruling at Madurai before Kadunkon revived Pandya rule thereafter befeating the Kalabharas sometime about that period. The Ceylonese contemporary of Simha-vishnu was Aggabodhi-I (A. D. 575-608), but the nature of Simhavishnu's relationship with Ceylon is not definitelb known.

The Pallankōil plates states that Simhavishnu conquered another Simvavishnu.

The only contemporary of Simhavishnu bearing his own name was the Telugu Choda ruler, the eldest son of Nandivarman Choda.

श्री सिंहविष्णु : जितसिंहविष्णु :

Simhavishnu's conquest of the Chola territory mentioned in the Kāsakkuḍi plates is specifically alluded to in the Vēlūrpāḷayam plates of Nandivarman III. "He (Simhavishnu) quickly seized the country of the Cholas embellished by the daughter of Kavira (i. e. the river Kaviri) whose ornaments are the forests of paddy (fields) and where (one found) brilliant groves of areca (palms)".

अथ प्रथीत विक्रमो जगति सिंहवर्माह्वयान्नृपारत्पमदा रहाद जनानि सिंहविष्णुर्ज्जयी ।
लसत्क्रमुकमण्डला : कळमकाननालंकृता : कवीरतनयाच्चितास्सपदियेन चोळाहृता : ॥

The possibility of the southern boundary of the Pallava kingdom reaching as far as Kaviri is supported by a late 9th Century record which names Kanjanūr in Kumbakonam Taluk as Simhavishnu Chaturvēdi-mangalam. Maṇali, a village near Thiruvorriyur was called in ancient times Simhavishnu chaturvedimangalam. The region from Manali to Kanjanur where this sovereign should have reigned probably constituted the kingdom.

In the Adīvarāha cave temple at Mamallapuram, is engraved on the portal of the north niche, the name Sri Simhavishnu Potadhirajan in the Pallava grantha characters. The niche below this inscription contains the seated figure of a king with a high crown (kirīta), and chest and ear ornaments flanked on either side by a standing female figure representing, by their crowns, his queens". According to Thiru R. Nagaswamy, the portrait sculpture represents Narasimha II and not Simhavishnu.

The recent discovery of hero stone epigraphs in North Arcot and Dharmapuri districts by the State Department of Archaeology has

brought to light five inscriptions, all in vatteluttu characters dated respectively in the 2nd, 14th 19th, 30th and 33rd regnal years of Simhavishnu. These are from Puliyanur and Koraiyaru in Dharmapuri District (regnal years 22nd, 14th and 19th) and Thondamanur and Narasinganallur in North Arcot District (regnal years 30th and 33rd).

The inscription from Puliyanur bearing his second regnal year is much damaged.

1. கோவிசைய சிங்கவிண்ணபருமற்கி இரு
2. ..................[வே]ணாட்டு...............

The inscription bearing his 14th regnal year from Koraiyaru records the death of one Vanna Ūr Pāvan native of Vanna Ūr in battle. The soldier Vanna Ūr Pāvan was under Sāttaparāvanār son of Perumpāṇṇarasar, a feudal chief under Pallava Simhavishnu.

1. கோவிசைய சிங்கவி
2. ண்ணபருமற்குப் பதினான்காவது
3. பெரும்பாண்ணரைசர் மக்கள் சாத்
4. தபராவ[ன]ர் சேவகன்
5. வன்ன ஊர்பா
6. வன் பூசலுட்ப
7. ட்ட கல்

The inscription bearing the 19th regnal year from Puliyanur, records the death of one "Thoruka . . . " while redeeming the cattle herd. The battle took place when Siruppaḍuvannāru sons of Pālāsiriyaru ruling, Sirupaḷ in Mēl Vēṇāḍu, raided the cattle-herd in Karungālippāḍi and one Thoruka . . . . native of Pilayaru (the present Puliyanur) in Puyanadu laid down his life while redeeming the cattle.

1. கோவிசைய சிங்க விண்ண[ப]ருமற்
2. குப் பத்தொன்பதாவது மேல்வேண்ணா
3. ட்டுச் சிறுபாழாளும் பாலாசிரியரு மக்கள்
4. சி[றுப்படு] வா[ன்] னாரு கருங்காளிப்பாடித்
5. தொறுக் [கொளப்] பூசல் சென்று புய
6. நாட்டுப் பிலயா சதங்கள்
7. எறித்து பட்டான்
8. கல்

The inscription bearing the 30th regnal year from Thoṇḍamānūr records the death of Ponnireveru sons of Vanako Atiraisar, a vassal under Gaṅga Ponnakkanār in a battle against Ponnumudannār sons of Nilakandarai . . . . . . . when the latter invaded Kodiyannur.

1. கோவிசைய சிங்
2. கவிண்ண பருமற்கு முப்பதாவது நீ
3. ல கண்டரை . . . . . கள் பொன்னுமு
4. தன்[ன] . . . கொடியன்
5. னூரு எறிந்த[ஞா] ன்று
6. கங்கரு மக்கள் பொ
7. ன்னக்கனரு சேவக ய
8. ன் வாணகோ அதிரைசரு
9. மக்கள் பொன்[னி] ரெவரு
10. எறிந்து பட்டபன் இரு
11. (ப்) பெரும் மறைய . . மக
12. ன் புதன் கல்.

The inscription bearing the 33rd regnal year from Narasiṅganallūr records the death of the son of Kandaparuma Enādi in a battle when Pasirappaṇnan Kuraṭṭāthan ruling Thoppuravamppadi in Chengam Taluk), a vassal under Viṇṇannar invaded the land ruled by the sons of Gaṅgadiaraisar.

1. கோவியைய சிங்கவிண்ண பருமற்கு முப்பத்து
2. மூன்ருவது கங்கதி அரைசரு மக்கள் மேன் விண்ணன்னர்
3. சேவகந் தொப்புரவருப்பாடி ஆ (ள்கி) ன்ற பசிரப்
4. பண்ணன் குறட்டாதன் . . வரமு கொண்ட ஞான்
5 நெறிந்
6 து பட்டா
7. ன் கந்த
8. பருபேன்
9. ஞதியார்
10. மகன் க
11. ல்

Now for the reign period of Simhavishnu. Various dates have been given by various historians ranging from Prof K. A. Nilakanta Sastri's dating of 20 years from A. D. 560-580; that of 25 years by Dr. Gopal from A. D. 575-600, and of Dr. T. V. Mahalingam from 586-610; that of 30 years by K. R. Srinivasan from 550-580 A. D. The above datings are arrived

at by the respective authors based on the available records, inscriptions, copper plates etc. The Kāsakkuḍi plates taken along with the Kūram and the Velūrpāḷayam give us that Simhavishnu was succeeded by Mahendravarman I, who in turn was succeeded by Narasimhavarman I without substantial change. That Narasimhavarman I ascended the Pallava throne by A. D. 630 has been well established and the same has been subscribed to by the above mentioned authors. Therefore in the light of the hero-stone epigraphs of Mahendravarman I recently discovered bearing the 39th regnal year of the king, Mahendravarman I must have been crowned as king by 598 A. D. -by the simple deduction of 39 years from 630 A. D. Similarly, his father and predecessor Simhavishnu, since he ruled for 33 years must have ascended the throne by at least 558 A.D. (591-33 = 558) That is Simhavishnu's reign period is to be placed as 558-591 A. D. on the basis of the high regnal years furnished by hero stones epigraphs. This goes without saying that the reign period of Simhavarman, Simhavishnu's father, too must undergo antidating.

According to the practice of marking the genealogy of Pallavas, it has been axiomatically taken to be that the heir apparent ascended the thrown only after the expiry of the predecessor's reign unlike the Chola practice of anointing one's successor as crown prince during the predecessor's reign period. Dr. T. V. Mahalingam has put forth a plausible inference that since Simhavishnu's deeds were praised in the Paḷḷan Kovil copper plate grant of Simhavarman, his father, Simhavishnu might have been the *de facto* ruler with his father exercising nominal authority;, this is further corroborated by a reference to the Hosakote plates. But we have not so far come acrossed a record by Simhavishnu issued in the period of his father Simhavarman; nor any record to further substantiate the inference of Dr. T. V. Mahalingam and to prove the prevalence of Chola practice.

*Reference :*

1. பல்லவர் செப்பேடுகள் முப்பது.
2 Kanchipuram in Early History. — Dr. T. V. Mahalingam.
3. Pallavas of Kanchi. — Dr. R. Gopal.
4. செங்கம் நடுகற்கள்.

# இலக்கியத்தில் நடுகல்

அ. பாஸ்கர பால் பாண்டியன் எம். ஏ.

நடுகல்லினை, வீரக்கல், கவலைய கல், கடவுளெய்திய கல் என்றெல்லாம் இலக்கியங்கள் குறிக்கும்.

**புறநானூறு:** *12 பாடல்களில் இச்செய்திகள் வருகின்றன. அதியனுக்கு கல் நடப்பட்டதை ஔவையார் பாடல் (எண்: 232) காட்டும். மல்லி நாட்டுக் காரியாதி என்பானுக்கு நடுகலிடப்பட்டதை ஆலூர் மூலங்கிழார் (எண்: 261) பாடுவார். நடுகல் மயிற்பீலி சூட்டப்பட்டு பந்தல் அமைக்கப்பட்டு இருந்தது என்பதை வடமோதங்கிழார் பாடலும் (எண்: 260), உடன்வந்த வீரர்கள் நீங்கிய பின்னும், தனியே நின்று போரிட்டு மாண்ட வீரனுக்கு நடுகல் அமைக்கப்பட்டதை (எண்: 263) ஒரு பாடலும் காட்டும். பதுக்கை அமைக்கப்பட்ட செய்தியை இளம்பொன்வணிகனர் (எண்: 264) காட்டுகிருர். நடுகல்லைப் பெண்ணொருத்தி வரம் வேண்டிப்பரவியதை அள்ளூர் நன்முல்லையார் (எண்: 306) பாடுகிருர். நீராட்டி, நெய் விளக்கேற்றி, பலியூட்டியதை, மற்றொரு பாடல் (எண்: 329) காட்டும். நடுகல் அன்றிப் பிறவழிபாடு முல்லை நிலத்தோர்க்கு இல்லை என்பதையும் புறம் தெரிவிக்கிறது (எண்: 335). நடுகல்லுக்குப் பலவித அலங்காரங்கள் செய்யப்பட்டன (எண்: 265). மானத்திற்காக வடக்கிருந்து உயிர் நீத்தவருக்கும் நடுகல் நடப்பட்டது (எண் 221).*

**அகநானூறு:** *11 அகநானூற்றுப் பாடல்களில் குறிப்புளது. தாயைப் பிரிந்த கன்றுகளின் கண்ணீர் துடைக்கும் பொருட்டு, கவர்ந்து செல்லப் பட்ட ஆநிரைகளை மீட்கச் சென்றதை ஒரு பாடல் (எண் 131) காட்டும். நடுகல்லின் மேல் அம்புகளை மறவர் தீட்டுதலினல், அதிலுள்ள எழுத்துக்களைப் படிக்க இயலாது வழியில் செல்வோர் தோற்றனர் என்று (எண் 297), மருதனிளநாகனர் குறிப்பிடுகிருர். பெயரும் பீடும் எழுதி வழியில் நடுகல் நட்டனர் என்பதை (எண் 67) நோய்பாடியார் என்ற புலவர் பாடுகிருர். நடுகல் நிழலில் நாய்கள் தங்கும் என்றும், நடுகற்கள் நிறைந்த பாலைவழி என்றும் குறிப்புக்கள் உள.*

**ஐங்குறுநூறு:** யானையின் துதிக்கைக்கு நடுகல் உவமையாக்கப்படுகிறது (பாடல் 332).

**மலைபடுகடாம்:** மலைகள் நிறைந்த வழியில் நடுகல் பல உண்டு. இதில் கடவுள் உறைகின்றனர் என்ற நம்பிக்கை இருந்தமையை இப்பாடல் காட்டும்.

> கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
> கடவுளோங்கிய காடேசு கவலை

**பட்டினப்பாலை:** நடுகல்லுக்கு அரணிடப்பட்ட செய்தியை (வரி 79) இதன் மூலம் அறியலாம்.

**திருக்குறள்:**

> என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
> முன்னின்று கல்நின் றவர்

என்ற பாடலில் நடுகல் குறிப்பிடப்படுகிறது.

**சிலப்பதிகாரம்:** தொல்காப்பியம் நடுகல் எடுப்பதைக், காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்து என்று காட்டும். அதன் வழியிலேயே தன் காதைகளையும் அமைத்துள்ளார் இளங்கோவடிகள். பெரும்படை தனிக்காதையாகக் குறிக்கப்படவில்லையாயினும், அந் நிகழ்ச்சிகள் குறிக்கப்படுகின்றன. பத்தினியர்க்கு எடுக்கப்படும் நடுகல் 'மாசதிக்கல்' என்று வழங்கப்படும்.

பல்வேறு துறைகளில் வீரங்காட்டியோர்க்கு, நடுகல் எடுத்து வழிபடும் வழக்கமே, பின்னர், கிராமதேவதை வழிபாடாக வளர்ந்தது எனலாம்.

பாண்டி நாட்டில் 'மதுரை வீரன்' வழிபாடு, நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. தென்பாண்டி நாட்டில் நடுகற்கள் இதுவரை கண்டெடுக்கப்படாவிட்டாலும் செங்கம் நடுகல் வழிபாட்டினையொத்த வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் சாயர்புரத்தை அடுத்த 'செபத்தையாபுரம்' என்ற ஊரில் 'காடோடிச் சாத்தன்' கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. ஊரைக் கொள்ளையிட வந்த கொள்ளைக்காரர்கள் கற்றாழைப் புதர்களிலே ஒளிந்திருக்க, அவர்களுடன் சண்டையிட்டு மாண்ட வீரன் ஒருவனுக்குக் கல்நட்டு மண்ணினால் சிறிய கோயில் எழுப்பி வழிபாடு நிகழ்த்துகின்றனர் என்பர் முதியவர்கள். இது செவி வழிச் செய்தி.

ஆண்டுக்கு ஒருமுறை பூசை செய்து மழை வேண்டும் என வேண்ட
கொள்வர். மணிகோக்கப்பட்ட வேலினை ஒரு கையிலும், தீப்பந்த
ஒன்றினை ஒரு கையிலும் ஏந்திக்கொண்டு பூசாரி, சாமி ஆடுவான். ஆ
கள் பலியிடுவர்.

'ஐயன் கோயில்' என்ற இடத்தில் 'பெரும்படைச்சாத்தன் கோயி
என்று ஒரு கோயிலுண்டு. இதிலும் இத்தகைய வழிபாடே நிகழ்த்த
படுகிறது.

'ஆறுமுக மங்கலம்' என்ற இடத்தில் 'சுடலைமாடன் கோயில்' என்
கோயில் இருக்கிறது இதுவும் நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்
நிலையாக இருக்கலாம். கொற்கையருகில் 'வாளைவெட்டி' என்ற இடத்தி
'பெத்தநாச்சியம்மன்' என்றொரு கோயில் இருக்கிறது. இக்கோயிலில் வ
பட்ட பின்னரே கொற்கைப்பாண்டியர்கள் போருக்குப் புறப்படுவார்க
என்றும், இக்கோயில் பாண்டியர் குலத்தில் உதித்த வீரமங்கையொரு
திக்காக எடுக்கப்பட்டது என்றும், இக்கோயிலில் உறையும் தெய்வ
வெற்றிக்கு வழிகாட்டும் என்று பாண்டியர்கள் நம்பியதாகவும் மக்க
கூறுகின்றனர்.

பொதுவாக உலகம் முழுவதிலும் முன்னவருக்கு நினைவுச் சின்ன
நாட்டும் வழக்கம் இருந்தது. கிரேக்க நாட்டிலே இறந்தவர் எலும்புகளை
பாதுகாத்தனர்; எகிப்திய நாட்டிலே பிரமிடுகளை எழுப்பினர்; ஆப்பிர
கர்கள், சிவப்பிந்தியர்கள் முன்னவரை வழிபட்டனர்; இப்பழக்கம்போன்றே
தமிழர்கள் முதலில் கல்நட்டு வழிபட்டனர். அக்கல், கோயிலாகவு
மாறியது. இறந்தவர் நினைவாக ஆண்டுக்கொருமுறை வீட்டில் வழிபா
செய்தல் அல்லது அவர்கள் கல்லறையிலே பலிபடைத்து வழிபாடு செய்த
தென்பாண்டி நாட்டிலே இன்றும் உள்ளது.

# நடுகல்லும் இலக்கியமும்

புலவர் வி. சீனிவாசன், M. A.,


பண்டைத் தமிழர் வாழ்க்கை அகம் புறமென்று இருபாற்படும்; அகவாழ்வினைக் கொடையாலும், புறவாழ்வினை வீரத்தாலும் சிறப்புள்ளதாக்கிக் கொண்டனர். வீரத்தின் வெளிப்பாடு போராக மலர்ந்தது. போரில் மாண்ட வீரரைப் போற்றி அவர் நினைவாகக் கல்லெடுத்து வழிபடலாயினர். இந்நடுகற்களைப் பற்றி இலக்கியங்களில் எண்ணற்ற செய்திகள் காணப்படுகின்றன.

கல்நாட்டி வழிபடும் முறையினைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல் பெரும்படை, வாழ்த்தல் எனப்பாடுகிறது புறத்திணை. இம்முறைப்படி நாட்டப் பட்ட கல்லில் பீடும் பெயரும் பொறித்தனர்; பீலி சூட்டி வணங்கினர்; துடி முழக்கி மகிழ்ந்தனர்; நொய்யினல் ஆக்கிய கள்ளைப் படைத்தனர்; செம்மறிக் குட்டியைப் பலியிட்டனர்; வேலூன்றிப் பலகையிட்டனர்; காட்டு மல்லிகைப் பூக்களைக் கொண்டு காலைப்பூசை நடத்தினர்; கூத்தர், நடுகல்லை வணங்கி யாழிசைத்துப் போற்றினர்; வீட்டிற்கு விருந்து வரவேண்டும், தன்வேந்தன் பெரும் போர் உடற்றுதல் வேண்டும் என்று வரம் வேண்டி வணங்கினர்; நடுகல்லின் முன்னர் ஏனைய வீரர் வேற்களை நட்டு அவற்றின் மீது கேடயத்தைச் சார்த்தினர்; அகம் 35, 67, 131, 289 ஆகிய செய்யுட்களில் நடுகல் வழிபாட்டு முறை பேசப் படுகிறது. நடுகல்லே வழிபடு தெய்வம்; வழிபட்டால் பயன் உண்டாகும்; வழி படான் இகழ்ச்சிக்கு உரியனுவான் என்கிறது புறம். இங்ஙனம் போற்றிப் பரவப் பட்ட நடுகற்கள் பாலைநிலத்திலே மிகுதி; இவற்றின் நிழலில் கொடுவில் எயினர்கள் தொல்படையால் வீழ்த்திய அடிநிணம் மாந்திய பேய்கள் ஒதுங்கின: செந்நாய் தன் பிணவோடு தங்கியது; யானை ஒன்று நடுகல்லை ஆளென்றெண்ணி மோதி கால் நகத்தைப் பனை நுங்கின் தோடுரிந்த மாதிரி பிய்த்துக் கொண்டது. அம்புகள் நடுகற்கள் மீது தீட்டப்பட்டு, நடுகல் வாசகம் மறையத் தொடங்கி, அவை படிப் போருக்கு வேறுபொருள் பயப்பவாயின. இதனுல் இவை பாலையில் திரிந்த யானை யின் துதிக்கைக்கு உவமையாயின எனலாம். முல்லை நிலத்துச் சிற்றூரைச் சார்ந்தும் சில நடுகற்கள் காணப்படுகின்றன. நடுகற்கள் சூழ்ந்த பகுதியில் வாழ்ந்ததால் வீரர், தாமும் நடுகல்லாயினர் போன்று பேறுபெறவேண்டுமென்று வீறுபெற்றெழுந்தனர். சிற்றூர்களைச் சார்ந்த நடுகற்கள் நாளடைவில் கிராம தேவதைகளாகவும், எல்லைத் தெய்வங்களாகவும் பரிணமித்தது எனயூகித்தற்கு இது இடமளிக்கிறது.

நடுகல்லான வீரரின் புகழ் பெரும்பாலும் கரந்தைத் திணையாகவே இலக்கியங் களில் பேசப்படுகிறது. போரில் மாண்ட வீரருக்கும், குறுநில மன்னர்களுக்கும், கற்பிற் சிறந்த காரிகைக்கும், வடக்கிருந்து உயிர்துறந்த மன்னர்களுக்கும் சான்

ரோர்களுக்கும் நடுகல்லெடுக்கப்பட்ட செய்திகளை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. நடுகல்லின்மீது நின்ற பல்லியொன்றின் சகுனத்தை அரசன் பார்த்ததாக அகம் கூறுகிறது. ஆநிரை கவர்தற்கு அரசன் சென்றதாகக் குறிப்புகள் இல்லை.

நகைச்சுவை அமைந்த பாடல் ஒன்றும், பெருமிதச் சுவையமைந்த பாடல்களும் தோன்றுதற்கு நடுகற்கள் அடிப்படையாயின. எட்டுத்தொகையுள் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு ஆகிய நூல்களாலும், பத்துப்பாட்டுள் பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பாடல்களாலும், பதினெண்கீழ்கணக்குள் திருக்குறள், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது ஆகிய நூல்களாலும், நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய சான்றுப் பாக்களாலும், ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களாலும், நடுகல் பற்றிய செய்திகளைப் பல வகையாக நாம் அறிய முடிகிறது.



# நடுகல் காட்டும் சமுதாயம்

Er. கொடுமுடி. ச. சண்முகன் B.E., D.S.S., M.I.E.

## பெருந்தேவப்பள்ளன்:

வீரங்காட்டி வீழ்ந்த பேருக்கு வீர வாழ்த்துப் பாடுவதோடு மட்டும் நின்று விடாமல் அவர்களை நம்பி இருந்தவர்களின் வாழ்க்கைப் பொறுப்பினையும் தமதாகத் தமிழ்ச் சமுதாயம் எடுத்துக் கொண்டது ஒரு நடுகல்லால் விளங்குகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுடி ஒரு சிற்றூர். அதன் அருகில் கருங்குளம் என்ற பெரிய ஏரி ஒன்று இருந்தது; இன்றும் இருக்கிறது. பதின்மூன்றும் நூற்றுண்டில் ஒருநாள் அதன் கரையில் ஒரு உடைப்பு நேர்ந்து விட்டது. அந்தக் குளத்தின் நீராளியாக இருந்த பெருந்தேவப் பள்ளன் தக்க சமயத்தில், அதைக் கண்டுபிடித்து விட்டான். கடமை பிடர் பிடித்து உந்தவே தனி ஒருவனுக இருந்து, அந்த உடைப்பை அடைப்பதில் வெற்றி கண்டான். ஆனுல் அந்த பெரு முயற்சியில் அவன் உயிரிழந்தான். அவனுக்கு ஓர் இளம் பெண் இருந்தாள். அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பினை, அந்த ஊர் மக்கள் ஏற்றுக் கொண்டனர். தக்க வேளையில் ஏரிக்கரையைச் செப்பனிட்டு அந்த ஆண்டு விளைச்சல் பாதிக்காமல் ஊராருக்கு உணவளிக்கும் வகையில் ஏரியைக் காத்த அவன் வீரத்தைப் பாராட்டி, அவன் மகளின் வாழ்க்கைச் செலவுக்காக அவ்வூரில் அரை மா நிலம் ஒதுக்கி வைத்ததோடன்றி அவன் நினைவாக ஒரு கல் நட்டு, அதில் இந்தச் செய்தியையும் பொறித்து வைத்துள்ளனர் அவ்வூரார். ஊருக்கு உழைக்கும் பணியில் உயிரிழக்கும் தொண்டர்களின் கடமையை ஊராரே ஏற்று நடத்தும் சமுதாய அமைப்பு இருந்ததை இந்நினைவுக்கல்லால் அறிகிறோம். அதன் வாசகம் வருமாறு:

குலசேகர தேவ
ர்க்கு யாண்ட 34வ
துக் கருங்குளத்திர்க்
கு ஒரு பழி உண்
டான படியாலே
இப்பழிக்கு இவ்வூர்
குடும்பரில் பெரிய
தேவப் பள்ளன் அணை
வெட்டிப் போகையா
லே இவன் மகளுக்கு
ஊரார்களிட்ட உதி
ரப்பட்டி குடுத்தபடி தபான
வ நிலம் அரை மா அணை
நிலம் . . . . . . . .

(கொங்கு-டிசம்பர் 73 இதழ்)

## சாகாடச் சிற்றன்:

செங்கம் நடுகற்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவன் சாகாடச் சிற்றன். சிற்றன் என்பது அவன் இயற்பெயர். சாகாடை என்பது அவன் சார்ந்த கொங்கு சமுதாயத்தில் குடிப் பெயர். கொங்கு இருபத்துநாலு நாடுகளில் ஒன்றான பூந்துறை நாட்டின் நான்காவது பேரூரான எழுமாத்தூரைச் சேர்ந்தவன். இன்றும் அவ்வூரில் சாகாடை, பனங்காடைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கின்றனர். கொங்கு வேளாளரில் ஒரு வகையினர்.

மீகொன்றை நாட்டுப் புலியூர் எறுமை மந்தையைப் பகைவர் அல்லது கள்ளர் ஓட்டிச் சென்று விட்டனர். அவ்வமயம் அங்கிருந்த சாகாடச் சிற்றன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அவ்வெறுமைத் தொறுவை மீட்கும் பணியில் ஈடுபட்டான். அப்பணியில் ஏற்பட்ட பூசலில் மணிக்கலவடலூரில் உயிர் நீத்தான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் என்ன சிறப்பு? நடுகல் வாசகம் இதை நன்கு உணர்த்துகிறது. பெயரும் பீடும் என்ற சொல்லிற்கேற்ப முதல் தொடரில் அவன் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது தொடரில் அவன் பூசல் ஓடிய பெருமை கூறப்பட்டுள்ளது. முதல் தொடரில் 'கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடச் சிற்றன்' என்றுள்ளது நோக்கத்தக்கது. அவன் வாழ்கின்ற இடம் கொங்கத்து எழுமாத்தூர் தான். புளியூரோ, மணிக்கலவடலூரோ அல்ல. சிற்றன் விருந்துக்கோ அல்லது வேறு காரணம் பற்றியோ புளியூர் சென்றுள்ளான். அந்த சமயத்தில் பூசல் நேர்ந்து விட்டது. தன் ஊர், தனது நாடு எனப் பாராமல் தவறு நிகழ்ந்த இடத்திலே-வீரம் தேவைப்பட்ட இடத்திலே அதைக் காட்டியுள்ளான் அம்மறவன். உறம்பறை (உறவின் முறை) யாகச் சென்ற இடத்திலும் வீரங்காட்டி வீழ்ந்து பட்டவனுக்கு எடுத்த நடுகல்லில் அவ்வூர் மக்கள், அவன் ஊரையும் நாட்டையும் குறித்துத் தெளிவாக எழுதி வைத்துள்ளனர்.

வீரர்கள் எந்த ஊராயினும் போரிடத் தயங்கியதில்லை என்பதும், அந்த வீரர்களையும் ஊரார் மறக்கவில்லை என்பதையும் இதன் மூலம் அறிகிறோம். (செங்கம் நடுகற்கள் தொடர் எண் 1971 / 51)

* * *

# பட்டோரைப் பரவுதல்

இ. ஸ்ரீதரன் எம். ஏ;
அகழ்வாய்வாளர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

நம்மில் இறந்தவர்களைத் தெய்வமாகிவிட்டனர் என்று கூறி வழிபடுவது, நமது நாட்டில் வழங்கப்படும் ஒரு மரபாகும். அவ்வாறு கற்காலந் தொட்டு, இறந்தவர்களை வழிபட்டு வந்தார்கள். அது பிற்காலத்திலும் நிலைபெற்றது.

தஞ்சைக்கு அருகே உள்ள கரந்தையில் 'கரந்தை மயானம்' என்ற இடம் உள்ளது. அங்கு சரபோஜி மன்னரும் அவரது துணைவியரும் இறந்து எரித்த இடத்தில் அவர்களது நினைவாக எழுப்பப்பட்ட பள்ளிப்படைக் கோயில்கள் உள்ளன. அதில் மன்னரின் நினைவாக எழுப்பப்பட்ட கோயிலில் சிவலிங்கம் உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் பல கிராமங்களில் மதுரைவீரன், கருப்பு ஆகிய கிராம தேவதைகளை வழிபட்டு வருகின்றனர். அக்கோயில்களின் எதிரில் செங்கற்களைப் பூமியில் புதைத்து வழிபட்டு வருகின்றனர். இதை ஊரார் 'பட்டவன்' என்று அழைக்கின்றனர். வயது முதிர்ந்தவர் அல்லது ஊருக்குப் பெரியவராக இருந்து இறந்தமேலோர்களைப் புதைத்த இடத்தில் அக்கற்களை நட்டு வழிபடுகின்றனர். மேலும் சில இடங்களில் இறந்தவர்களைப் புதைத்த அல்லது எரித்த இடங்களில் பிள்ளையார் அல்லது சிவலிங்கம் ஆகியவற்றை வைத்து வழிபடுகின்றனர். சுங்கம் தவிர்த்தான் திடல் என்ற ஊரில் ஒரு பெண் அம்மை நோய் கண்டு இறந்து விட்டாள். அப்பெண்ணைப் புதைத்த இடத்தில் ஒரு பெண்ணின் உருவச்சிலையை நிறுவி அதை மாரியம்மன் என்று கூறி வழிபடுகின்றனர்.

## சாம்பான் வழிபாடு:

தஞ்சை மாவட்டத்தில் சில கிராமங்களில் சாம்பான் கோயில் என்ற சிறு கோயில்கள் இருக்கின்றன. சாம்பான் என்பவன் பறையர் குலத்தைச் சார்ந்தவனாகக் கூடநாணல் என்ற ஊரில் கருதப்படுகிறான். இங்கு நாட்டார் குலத்தவர் சாம்பானைக் குலதெய்வமாகக் கொண்டிருக்கின்றனர். நாட்டார் குலத்தைச் சார்ந்த ஒரு தலைவனின் உயிருக்காக இச்சாம்பான் தன் உயிரைத் தியாகம் செய்த காரணத்தால் தெய்வமாக வழிபடப்படுகிறான். இங்கு சாம்பானுக்கு என்று ஒரு கற்சிலை உள்ளது. இச்சிலை கைகளில் தப்பட்டம் வைத்துக் கொண்டு அடிப்பது போல் உருவகிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடுவக்குடி, மரூர், போன்ற ஊர்களில் சாம்பானை வழிபடும் முறை முற்றிலும் வேறுபட்டு விளங்குகிறது. இங்கு அவனுக்கென்று சிலைகள் ஏதுமில்லை. விளக்கு வைத்து வழிபடுகின்றனர். அதற்கு ஏற்றவாறு ஒரு மாடம் அமைக்கப்பட்டுள்ளது. மரூரில் சாம்பானை வழிபடுபவர்கள் பறையர் குலத்தைச் சார்ந்தவர்கள். சாம்பானைத் தங்கள் குலத்தில் தோன்றி உயிர் தியாகம் செய்து உயர்ந்தோனை இம்முறையில் வழிபடுகின்றனர் போலும்!

# நடுகல்லும் வரலாறும்

( கொங்கு நாடு )

புலவர். செ. இராசு, ஈரோடு.

**நடுகல் என்றால் என்ன?**

போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் நினைவாகவோ, வேறு வகைகளில் வீரம் புரிந்து உயிர் துறந்தவர்களின் நினைவாகவோ, செயற்கரிய செயல் செய்த சான்றோர்களின் நினைவாகவோ கல்நட்டு அதில் அவர் பெயரையும் பெருமைகளையும் பொறித்து வைப்பது பண்டைய வழக்கம். இதனைத்தான் நடுகல் என்று கூறுகின்றோம்.

**நடுகல் எங்கு இருக்கும்?**

வீரன் இறந்த இடத்தில் (கொடுமுடி) - ஊர் அருகே பாதை ஓரத்தில் .(பழமங்கலம்) - ஊர்ப் பொது இடத்தில் (புருப்பாளிக்காட்டுவலசு) - ஊர் எல்லையில் (சேலூர்) - மரத்தின் அடியில் (பவானி) - கோயிலில் (பெரிய புலியூர்) - வீட்டில் (வாய்ப்பாடி) - நடுகல் நடும் வழக்கம் உண்டு என அறிகிறோம். (இவை அனைத்தும் கோவை மாவட்ட ஊர்கள்).

**நடுகல்லின் தொன்மை:**

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனாரே நடுகல் எடுக்கும் நிலைகளைத் தொகுத்து வகைப்படுத்திக் கூறியுள்ளார். "இருமூன்று மரபிற் கல்" என்று வரையறைப் படுத்தியதால் அதன் தொன்மையை அறிகிறோம். ஆடவர் பீடும் பெயரும் எழுதிய நடுகல் - செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட கல் - அந்த எழுத்துடை நடுகல்லில் கருங்கண் மறவர்கள் அறியாமல் தங்கள் அம்புகளைத் தேய்த்துக் கூராக்குகின்றனர். உருவமும் எழுத்தும் மாய்ந்து போயிற்றும் அந்த நடுகல்லில்! வழிப்போவோர் பார்த்தால் எழுத்து அவர்கட்கு மயக்கத்தை ஏற்படுத்துகிறதாம்.

இன்னொரு ஊரில் நடுகற்கள் வழியில் மிக அதிகமாக நடப்பட்டிருக்கின்றன. உப்பு வண்டிகள் செல்லுகின்றன. உப்பு வண்டியின் சக்கரங்கள் பட்டுப்பட்டு கூர்மையான உளியால் பொறிக்கப்பட்ட அந்த

எழுத்துக்கள் கோடு மாய்ந்து வழிப்போக்கர்கட்கு வேறு பொருளைத் தருகின்றதாம். சங்க காலத்திலேயே உருவமும், எழுத்தும் சிதைந்த நடுகற்கள் பல இருந்திருக்குமானால் அதன் தொன்மையை நாம் என்னவென்று வியப்பது!

## வீரக்கல்லா? நினைவுக்கல்லா?

சமண சமயத்தார் சல்லேகனை விரதம் இருந்து உயிர்விட்டால் அவர்கட்கு "நிசீதிகைக் கல்" என்ற நினைவுக்கல் நாட்டுவது வழக்கம்.[1] மேலே தீர்த்தங்கரர் சிற்பத்தைச் செதுக்கிக் கீழே உயிர் நீத்த துறவியின் சிற்பத்தைச் செதுக்குவர். இவ்வாறு உயிர் நீத்த பெண்பால் சமணத் துறவியர்க்கும் நினைவாக நிசீதிகைக்கல் எடுப்பது உண்டு.

ஈரோடு தாலுக்கா விஜயமங்கலத்தில் உள்ள ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் கோயிலில் உள்ள கல் ஒன்றில் "ஸ்ரீ சாமுண்டராயன் தங்கை புளியம்மை நிசீதிகைக் கல்" என்ற தொடர் காணப்படுகிறது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கன்னட நாட்டில் குளங்களைத் தோண்டி மக்களுக்கு நன்மை செய்த பெரியோர்களுக்கும் நடுகற்கள் இருக்கின்றன.

பவானியிலிருந்து கொடுமுடி வரை $56\frac{1}{2}$ மைல் நீளமும் 13000 ஏக்கர்கள் பாயக்கூடியதுமான ஒரு கால்வாயைக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வெட்டிய காலிங்கராயனுக்கு அணையில் சிலை இருந்ததாம். வமிசாவளி அதைப் பின்வருமாறு கூறுகிறது.[2]

> காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணையிலே கவுண்டனை சிலாபிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சுச் சிலா சாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் வருஷப்பிரதியும் உற்சவம் பண்ணிக் கொண்டு வருகிறது. வருஷப் பிரதியும் காலிங்கக்கவுண்டன் பிரதிமைக்குப் பூசை நைவேத்யம் பண்ணிக் கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாமை விளைஞ்சு கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிரகத்துநாலே ரொம்ப மூர்த்திகரம் உண்டாயிருக்கிறது.

அப்பகுதி நூலான ஐயனாரப்பன் பள்ளு, அணைகட்டி வாய்க்கால் வெட்டிய காலிங்கராயனை வழிபடும் முறையைப் பாடுகிறது.

> கங்கை கோத்திரம் காலிங்க ராயற்குக்
> கண்ட சரமும்உத் தொண்டியும் சாற்றுங்கள்

சங்க இலக்கியத்தில் வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் இருந்ததைப் பார்க்கிறோம். சீரங்கத்தில் கோயில் பூசை நன்கு நடக்கவேண்டும் என்று கோபுரத்தின் மேலேறிக் கீழே விழுந்து உயிர்நீத்த "இறந்த காலம் எடுத்த பெருமாள் அப்பாவையங்கார்" சிலையைக் காணுகிறோம்.[3]

ஆங்கிலத்தில் நடுகல் என்பதற்கு hero stone என்று கூறுகிறோம். மேலே கண்ட செய்தியை நோக்கும்போது இக்கற்களுக்கு எல்லாம் memorial stone என்று பொதுப் பெயர் கொடுத்து, அதில் ஒரு வகைக்கு hero stone என்று பெயர் கொடுக்கலாமா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒன்றற்குப் பெயர் கொடுக்கும் பொழுது, தலைமையாலும் பன்மையாலும் பெயர் கொடுக்கலாம் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.[4] எனவே வீரத்தினல் தலைமையும், கிடைக்கின்ற கற்களில் பன்மையும் இருப்பதை நோக்கினல் நடுகற்களுக்கு hero stone என்று பெயர் கொடுப்பதும் சரிதான் என்று எண்ணி அமைதியடையலாம்.

**சங்க கால நடுகற்கள் :**

சங்க கால நடுகல் 'நெடுநிலை நடுகல்' ஆக இருக்கும் என்று இளங்கீரனர் கூறுகிறார். ஐயனரிதனரும் "ஓங்கிய கல்" என்பார். சுமார் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கணிக்கக்கூடிய முதுமக்கள் தாழிகளும், புதைகுழிகளும், கல்வட்டமும் உள்ள இடங்களில் இளங்கீரனர் கூறுவது போல 'நெடுநிலை நடுகல்' இருப்பதைக் கொங்கு நாட்டில் அறச்சலூரை அடுத்துள்ள குடுமியான்பாளையம், பாசூர், பிரபுநகர் போன்ற இடங்களில் காணமுடிகிறது. 18 அடி உயரத்திற்கு மேல் 3½ அடி அகலமுடன் உள்ளது. அவைகளையும் மக்கள் 'வேடன் கல்' என்றே கூறுகின்றனர். ஆனல் எழுத்தோ, சிற்பமோ இல்லை. இவை ஆய்வுக்குரியவை.

**புலிக்குத்தி நாச்சிமுத்து :**

காடுகள் மிகுதியான பழங்காலத்தில் விலங்குகளால் ஊருக்குத் தொல்லை ஏற்பட்ட பொழுது, அவைகளிடமிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் இறந்த வீரர் பலருக்குக் கல் நட்டனர்.

பவானியில் காட்டுப் பன்றி வேட்டைச் சிற்பமுடைய நடுகல்லையும், முட்டத்தில் யானைப் போருடன் நடுகல்லையும், ஊத்துக்குழி, வெள்ளோடு, பழமங்கலம், குலவிளக்குப் பேரூர், ஊராட்சிக் கோட்டை போன்ற இடங்களில் புலியுடன் பொருதநிலையில் நடுகற்களையும் காணுகிறோம்.

ஊராட்சிக் கோட்டை அடிவாரத்தில் ஒரு நடுகல். பசவேசர் துணை' என்று தொடங்குகிறது.

பசவேசர் துணை. ஆனந்த வருஷம் சித்திரை மாதம் 15டீ ஊராள்ச்சிக் கோட்டை ஆள்கை கெம்பை நாயக்கர் புலிகுத்திப் பட்டிறந்த காணியாச்சி அப்பைய நாயக்கர்க் கிந்த மானுவக்காடும் யூராள்ச்சியும் குடுத்தோம் . . . . .

அப்பகுதி நாயக்கர் கால ஆட்சி முறையை இது விளக்குகிறது.[5]

ஈரோடு இரயில்வே தபால் நிலையத்தில் நாச்சிமுத்து என்பவர் பணிபுரிந்து வருகிறார். அவரை அனைவரும் புலிக்குத்தி நாச்சிமுத்து என்றே அழைக்கின்றனர். அவர் விஜயமங்கலம் அருகேயுள்ள வாய்ப் பாடியைச் சேர்ந்தவர். அவர் முன்னோர் ஒருவர் (அவர் 10 தலைமுறை ஆயிற்று என்கின்றார்) ஊர் மக்களைக் காப்பாற்றப் புலியைக் குத்திக் கொன்றார்; அவரும் இறந்தார். அவர் நடுகல்லை வீட்டு எல்லைக்குள் ளேயே வைத்து வழிபட்டு வருகின்றனர். மூத்த மகன் பிறந்தால் பெய ருடன் 'புலிக்குத்தி' என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொள்கின்றனர். 'புலிக்குத்தி மானிய பூமி', இன்றும் 'புலிக்குத்திக்காடு' என்ற பெயரில் உள்ளது. 'முந்தை முதல்வர் கல்காட்டி' என்று இலக்கியம் கூறுவது போல அவ்வீட்டாரும் தேவைப்படும் பொழுது புலிகுத்திக் கல்லைக் குறிக் கின்றனர்.

**இன்று வழக்கில் :**

கோவை மாவட்டத்தில் வாழும் தொட்டிய நாயக்கர்கள் இன்றும் இறுதிச் சடங்கிற்குப் பின் 'கல்லெடுத்தல்' என்ற சடங்கினைச் செய்கின்ற னர். 'கருமாதி கல்லெடுப்பு' என்ற தொடர் இணைந்தே இப்பொழுதும் வழங்கி வருகிறது.

**சதிக்கல் :**

கற்புடைய பெண்களுக்கு நாட்டப்படும் கல்லை மகா சதிக்கல், மாசதிக்கல், மாஸ்திக்கல், சதிக்கல் என்று வழங்குகிறோம். (கண்ணகிக்குச் செங்குட்டுவன் எடுத்தது மாசதிக்கல்தான்).

கன்னட நாட்டில் இவை அதிகம். கொங்கு நாட்டின் வடமேற்கு எல்லைகளில் சில கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் உருவம் இருப்ப தில்லை. தோளுடன் கூடிய ஒரு கையே காணப்படும். இவற்றில் பெரும் பாலும் எழுத்துக்கள் இருப்பதில்லை. உடன்கட்டை ஏறுதலாகிய தீப்பாய் தலைக் கன்னடத்தில் 'தோள் கொடுத்தல்' என்றே குறிப்பர். சக கமனம்,

அனுமரணம் என்றும் குறிப்பிடுவர். இக்கற்களை 'ஹாசன நோளு கல்லு' என்று கூறுகின்றனர்.[6]

புறநானூற்றில் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப் பாய்ந்ததையும்,[5] மணிமேகலையில் ஆதிரை தீப்பாய முயன்றதையும் காணுகிறோம். உடுமலைப்பேட்டை தாலுக்கா கொழுமம் கோயில் கல்வெட்டொன்றில் சோழமாதேவியார் ஒருவர் தீப்பாய்ந்த செய்தி கூறப் படுகிறது.[7]

இராசராசனின் தாயாரும் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனின் மனைவியுமாகிய வானவன்மாதேவி, கி.பி. 969-ஆம் ஆண்டு சுந்தரசோழனின் மறைவினால் வருந்தி, இராசராசன் சிறு குழந்தை என் பதையும் நோக்காமல் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள். 'முழங்கெரி நடுவணும் தலைமகற்பிரியாத்தையால்' என்று அவளைத் திருவாலங்காட் டுச் செப்பேடும், திருக்கோவலூர்க் கல்வெட்டும் பாராட்டும்.[8]

ஒரு கல்வெட்டும் இச்செயலைப் பாராட்டும்.

*வீரபிரதாப ஸ்ரீ . . . ராயமகாராயர் பிருத்விராச்சியம் செய்திருக்க சக வருஷம் 1339 ஆவது ஹேவிளம்பி சம்வத்சரத்து பாத்திரபத சுத்த பஞ்சமி ஸ்ரீசகலாட்ச புரத்தும் ரெ . . மகன் புக்கரன் ஸ்வர்க்கத்தன் ஆனதில் அவன் பெண்டாட்டியர் மூவர் தோளும் கையும் கொடுத்த கம்பம்.*[9]

இன்றும் 'விரமார்த்தி கோயில்' என்பன, 'வீரமரணத்தி கோயில்'கள் தாம் போலும்.[10] ஆடவர்கள் இக்கோயில் அருகே போகக்கூடாது என் பர். பெரியபுலியூரிலும், சேலூரிலும் காணப்படும் மூன்று நிலைக் கற்களும் உடன்கட்டை ஏறிய மனைவியருக்கும் இறந்த கணவனுக்கும் ஒருங்கே எடுக்கும் கற்கள்தான்.

**இல் எடுத்தல் :**

நடுகல் நாட்டியபின் அதனைக் கோயிலாகவும் செய்வர். அது போன்ற கற்பலகைக் கோயில்கள் (டால்மன் வடிவில்) கொடுமுடி, பழமங் கலம், புருப்பாளிக்காட்டுவலசு, மேட்டுப்பாளையம் போன்ற பல இடங் களில் காணப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர் 'சிறந்தகு மரபில் பெரும்படை' என்றும், ஐயனரிதனார், 'இற்கொண்டு புகுதல்' என்றும், இலக்கண விளக்க ஆசிரியர், 'பொன்றுர் இற்கொடுபுகுதல்' என்றும் கூறுவர்.

**தீபங்கள் வைம்மினோ பீடம் வகுத்து**[11]

என்று ஒரு பழம் பாடல் கூறுவதுபோல இக்கல் இல்லில் விளக்கு மாடங்கள் இருக்கின்றன. இன்னும் கோயிலுக்கு வேண்டிய பிற கருவிகளும் இருக்கின்றன. இந்த இல்லே ஒரு கல்வெட்டு, 'வீரசாலே' என்று கூறுகிறது.[12]

ஸ்வஸ்த ஸ்ரீமது புஜபலச் சக்ரவர்த்தி பிஜ்ஜணதேவ அரசர் சுகமாயும் புத்தியோடும் ராஜரீகம் செய்து இருக்க, வனவாசி நாட்டுத் தண்டநாயகனுன பத்மரசன் ஏவலால், தட்சிண கேதாரத்துத் தேவர் பாதாராதகராகிய வாமசக்தி தேவரைக் கட்டிப் பிடித்ததில் தொணவத்தியிலிருக்கும் மெறெ காரணனுகிய பாபெய நாயகன் செருச்செய்து ஸ்வர்க்கத்தன் ஆனதை . . . இக்க மருமகன் மது செய பாபெயன் கல்லே நட்டு "வீரசாலே" எடுப்பித்தான்.

தலேயரிந்து கொற்றவைக்குக் கொடுத்தார்க்கும் கல்லெடுத்ததை, சிலம்பு, கலிங்கத்துப் பரணி, அரிச்சந்திர புராணம், தக்கயாகப்பரணி, சோழன் பூர்வ பட்டயம், இவையும், சில கல்வெட்டுக்களும் காட்டும்.

கொங்கு நாட்டில் பேரூர், அன்னூர், அவிநாசி, சென்னிமலே ஆகிய 4 ஊர்களில் இச்செயல் நடந்ததென்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது. இவ்வமைப்பில் சிலேகளே அவிநாசி, பேரூரிலும், சாவான் கோயில் என்ற கோயிலேச் சென்னிமலேயிலும் காணுகிறோம். செங்கல்பட்டு மாவட்டம் கோயம்பேடு[13] என்ற இடத்திலும். அரகண்ட நல்லூரிலும் தருமபுரி மாவட்டத்தில் சில இடங்களிலும் இத்தகைய கற்கள் உள. "திருமஞ்சனமாடுவிடுத்துத் திருநீற்று காப்புமிட்டு ஆடையுடுத்தி, ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்து, பாலசனமிடுவித்துப் பரிமள களப கஸ்தூரிகள் பூசி, வீர சந்தனமிடுவித்து, பாக்கு வெற்றிலே கையில் கொடுத்து, வீர கொம்பு, வீரகாளம், வீரமல்லாரி, வீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே வீர மேளவாத்தியம் முழங்க பஞ்சவன்னக் குடை, பஞ்சமுகத் தீவட்டி, விருது ரண வீரவேங்கைப் புலிக்கொடியுடனே நடபாவாடையுடனே நடபாவாடை மேல் நடந்து சங்கீத ராக மேளவாத்தியம் சூழ்ந்துவர நாலுவீதி மறவனேயும் வரவித்து . . . . . . தம்தலேயரிந்தனராம்.[14]

## சில சரித்திரக் குறிப்புகள் :

கொங்கு நாட்டுப் பழங்குடிமக்கள் வேட்டுவர்களே. வேளாளர்கள் தொண்டை நாட்டிலிருந்து காவிரி, அமராவதி, நொய்யல், பவானி நதிக் கரை வழியாகவே சென்று குடியேறியவர்கள். பிற்காலத்தும் தொண்டை நாட்டோடிருந்த தொடர்பினேக் கொங்கரையன் நின்ற பெருமாள், உத்திர மேரூர்க் கோயில் கட்டியமை, கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும்

சாகாடச்சிற்றன் செங்களத்தில் போரிட்டு வீர மரணமெய்திப் புகழ்பெற்றமை ஆகியவற்ருல் அறிகிறேம். இவர்களுக்குள் பெரும்போர் மூண்டது. காட்டை நம்பி வாழ்ந்தவர்கட்கும், காடு கொன்று நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கிய வேளாளருக்கும் இம்முறையில்தான் போர் தொடங்கிற்றென்று குன்றுடையான் கதை, கள்ளழகர் அம்மானை, காணிப்பாடல், நாட்டுப்பாடல் போன்ற பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன. கொங்கர்படை வேளாண்படை என்பது இலக்கிய வழக்கு.

சிவகிரி நடுகல்லில் தலையநல்லூரில் கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன் என்பவன் குறிக்கப்படுகிருன்.

கொடுமுடி, அந்தியூர், வேபத்தேரி, பருத்திப்பள்ளி போன்ற இடத்தின் நடுகற்கள் வேட்டுவரை 'ஊராள் வேட்டுவர்', 'ஊராளி' என்ற தொடர்களால் குறிக்கின்றன.[15]

பழமங்கலம் கல்வெட்டில் காணும் சொக்கனேந்தல், வேட்டுவர்களில் கரையகுல வேட்டுவன் ஆவான். இன்றும் வேட்டுவரில் அப்பிரிவினர் உண்டு. வந்து எதிர்த்த (வேளாளர்களை) மாற்றலர் என்று பாடுகிருன் புலவன். ஆம்; அக்கல்லில் அழகிய பாடல் ஒன்று உள்ளது. 'வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச் சாய்த்தமகன் வென்ற சயம்பெருகச் சீர்த்தபுகழ் நீக்குவனம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச் சொக்கனேந்த லேவுலகில் காண்' இக்கற்பொறி இரட்சிப்பான் பாதம் எந்தலே மேலே என்பது அக்கல்வெட்டு.[16]

கொங்கு நாட்டு நடுகற்களில் பெரும்பாலும் எழுத்துக்கள் இல்லை. ஏன்?

சுமார் 21 இடங்களில் 30 நடுகற்கள் கிடைத்துள்ளன. எழுத்து உடையன ஆறு தான். இது ஏன்? நச்சினர்க்கினியர் 'கல் நாட்டுதல் பெரும்படைக்குப் பின்னுகக் கூறிற்ருல் எனின் நீர்ப்படுத்த பின்னர்க் கற்படுத்துப் பெயர் பொறித்து நாட்டுதல் காட்டு நாட்டோர் முறைமை' என்பார்.[17] கல்லை நட்டுப் பின்னர்க் கல்வெட்டுதல் காட்டு நாடாகிய கொங்கின் மரபு போலும்! பலர் அப்படியே பின்னர் கல்லில் எழுத்துப் பொறிக்காமல் விட்டு விடுதல் காரணமோ?


**காணித்தெய்வங்கள்**

இராசா, அண்ணன்மார், அப்பிச்சிமார், சடையப்பன், முனியப்பன், குப்பியண்ணன், சங்கிலிக் கருப்பன், கொள்ளிவாய்க் கருப்பன், கருமாரத்திக்

கருப்பணன், ராவுத்தனன், முதலியோர் கொங்கு வேளாளரின் காணித் தெய்வங்கள். இவை அனைத்தும் நடுகல் வழிபாட்டின் சின்னங்களே!

அடிக்குறிப்புகள் :—

1. 239 of 1904.
2. கீழ்த்திசைச் சுவடிச்சாலை காலிங்கராயன் வமிசாவளி எண். டி. 3044.
3. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் I. திருவரங்கக் கல்வெட்டு.
4. தொல்காப்பியம் சொல் 9.
5. ஈரோடு வரலாற்றுச் சங்கக் கண்டுபிடிப்பு.
6. செந்தமிழ் தொகுதி 3. து. அ. கோபிநாதராயர்.
7. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள். தொகுதி 1. 279 புறம் 246, 247.
8. பிற்காலச் சோழர் வரலாறு 1-87. தென்னிந்திய சாசனங்கள் 7-863.
9. செந்தமிழ் தொகுதி 3. து. அ. கோ.
10. வீரமாபத்தினி சிலம்பு.
11. தொல். பொருள் 60.
12. செந்தமிழ் தொகுதி 3. து. அ. கோ.
13. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் 3-2-
14. சோழன் பூர்வ பட்டயம் பக்- 72.
15. வடிவுள்ள மங்கலம்—நடுகல் (தமிழகம் 22.)
16. கொங்கு 1–4
17. புறத்திணையியல் 5.



# நடுகல்லும் இலக்கியமும்

தெ. ஞானசுந்தரம், எம்.ஏ, டிப் (வடமொழி)
தமிழ்த் துணைப் பேராசிரியர்;
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி, சென்னை.

தமிழிலக்கியங்கள் சிலவற்றுள் நடுகற்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.[1] மண்ணின் மானம் காக்க தம் இன்னுயிர் கொடுத்துப் புகழ் கொண்டோர் ஈட்டிய புகழ், உலகில் நிலைத்து நிற்குமாறு நடப்பட்ட கற்களே நடுகற்கள். போர்க்களத்தில் பட்ட வீரனுக்கும், அங்குப் பெற்ற விழுப்புண்ணால் தன் மனையிலோ வழியிலோ மாண்ட வீரனுக்குமே கல்லெடுத்து விழாவயரப்பட்டது. போரில் வேல் பாய்ந்து மாய்ந்த அதியமான் அஞ்சிக்கும், கரந்தைப் போரில் புண்ணேற்று மாய்ந்த காரியாதித் தலைவனுக்கும் (புறம்2 60, 263, 264) கல்லெடுத்தனர். புறத்திலும் அகத்திலும் பேசப்படும் நடுகற்கள் பெரும்பாலும் கரந்தைப் போரில் பட்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்டதாகவே உள்ளன. (புறம். 260, 261, 263, 264; அகம் 67, 131).

போர்க்களத்தில் வீழ்ந்து புகழ் எய்தாமல் வேறு வகையில் புகழ்பெற்றவர்களாகிய, மதுரையைத் தீக்கிரையாக்கிய வீரபத்தினி கண்ணகி, தன் மக்கள் செயலால் மானம் பொறுது வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ்சோழன் போன்றோர்க்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன. இவ்வகை நடுகற்கள் மிகச்சிலவே.

## நடுகற்களின் அமைதி

நடுகற்களில் வீரனின் பெயரும் பீடும் எழுதி அணிமயில் பீலியோடு நறு வேங்கை மலர்களைத் தொடுத்து அலங்கரித்தனர். (புறம். 260, 264, 265; அகம் 67, 131) நடுகல்லுக்குப் பாதுகாப்பாகக் கேடயத்தை நட்டு அரண் அமைத்தலும் அக்காலத்தில் வழக்கம் என்பது பட்டினப்பாலையால் (வரி 78-81) தெரியவருகிறது. இக்காலத்துச் சில வீரர் கோயில்களுக்கு முன்னே நாட்டப்பட்டிருக்கும் வேல்கள் அப்பழைய மரபின் எச்சமாகத் திகழ்கின்றனபோலும்!

## நடுகற்கள் அமைக்கப்பட்ட இடம்

நடுகல் அமைக்கப்பட்ட இடம் பறந்தலை எனப்பட்டது (புறம் 265, 314) ஊரின் பக்கத்தேயும்(புறம் 329) அச்சமிக்க கானப்பகுதியிலும் (அகம் 131) நடுகற்கள் அமைந்திருந்தன; ஐயூர் முடவனார் பாட்டில் (புறம் 134) ஓர் ஊரில் பல நடுகற்கள் இருந்தனவாகவும் பேசப்பட்டுள்ளது. இதனால் போரில் பட்ட வீரர்களுக்கு ஒரே இடத்தில் வழிவழியாகக் கல்லெடுத்தனர் எனத்தெரிகிறது. மேற்கூறியவற்றால், ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் நடவேண்டும் என்ற முறை இல்லை எனத்தெரிகிறது. இருப்பினும் ஒரு ஊரில் நடும்போது ஒரேயிடத்தில் நட்டிருக்கவேண்டும். இந்நிலை

யில், கல்வெட்டியல் என்னும் நூலில் (பக். 138) கூறப்பட்டுள்ளது போல ஊரின் ஒருபுறத்தைத் தேர்ந்தெடுத்து ஈமக்காடு போல், பாவித்து அங்கு, வீழ்ந்துபட்ட வீரர்களுக்கெல்லாம் நடுகல் எடுத்தனர் என்பதே பொருத்தமான முடிவாகத் தெரிகிறது.

## செங்கர் பகுதி நடுகற்கள்

மலைபடுகடாத்தில் பரிசு பெற்ற கூத்தன் வறிய கூத்தனுக்கு வழிகூறும்போது, வழியிடை மராமரத்தின் நிழலில் தோற்றோடியவரை இகழ்பவை போலத் தோன்றும் நடுகற்கள் இருக்குமென்று கூறுகிறான் (மலை வரி 386-389; 395-307). நன்னன் சேய் நன்னனது தலைநகர் செங்கண்மா என்பது முடிந்த உண்மை. எனவே மலைபடுகடாம் காலத்திலே செங்கம் பகுதியில் நடுகற்கள் பல இருந்தமை விளங்கும். இக்காலத்தும் பல்லவர் காலத்து நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## நடுகற்களில் எழுத்துக்கள்

நடுகற்களில் கடுங்கண்மறவர் தங்கள் அம்புகளைத் தீட்டியதனால் பக்கங்கள் சிதைந்தும், பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மறைந்தும் இருந்தன என்று மருதனிள நாகனார் தமது பாடலில் குறித்துள்ளார். (அகம் 297). இவரே பிறிதொரு பாட்டில் உப்பு வண்டிச் சக்கரங்கள் உராய்ந்து, சிதைந்த, வலிய பாறையில் உள்ள நடுகற்களில் கூரிய உளிகளால் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கோடுகள் அழிந்த நிலையில் வழிச்செல்வோருக்கு விளங்காமல் இருந்தன என்றும் குறித்துள்ளார். நடுகற்களிலுள்ள எழுத்துக்களின் நிலையை நுணுகி நோக்கிக் கூறும் மருதனிளநாகனாரை அக்காலக் கல்வெட்டியல் அறிஞர் எனக்கொள்ளலாம்.

## நடுகல் வழிபாடு

காலப்போக்கில் நினைவுச் சின்னங்களாகவும் புகழ்ச் சின்னங்களாகவும் திகழ்ந்த நடுகற்கள், தெய்வ நிலைக்கு உயர்ந்துள்ளன. மறக்குடி மக்கள் அவற்றை வழிபட்டு பட்ட வீரனுக்கு, வீரன் விரும்பியுண்ணும் கள் போன்றவற்றை படையலாக்கினர் (புறம் 232) என்று தெரியவருகிறது. நடுகல்லுக்கு விடியற்காலத்தில் பலியைப்படைத்து நன்னீராட்டி நெய்விளக்கேற்றி வழிபட்டனர் (புறம் 329). முல்லை நிலத்துச் சிறு குடியினர் நடுகல்லாகிய வீரனையே ஒப்பற்ற கடவுளாகக் கொண்டனர். (புறம் 335). நடுகல்லை வீரம் வளர்தல் வேண்டி மட்டும் வழிபடாது வாழ்வு வளம் பெறவேண்டியும் வழிபட்டனர், பண்டைய தமிழர். இதனை, வழியில் ஆநிரையைக் காக்கப் போரிட்டுக் கல்லாகிய தலைமகனின் நடுகல்லினை வழிபடாது செல்லற்க, வழிபடுவையாயின் செழிப்பற்றிருக்கும் இவ்வழி, வண்டு மேம்பட்டு வாழும் வளமுடையதாகும் என்று புறப்பாட்டு ஒன்றில் பாணன் ஒருவன் மற்றொரு பாணனுக்கு அறிவுறுத்துவதிலிருந்து அறியலாம். அள்ளூர் நன்முல்லையாரது பாட்டில் மறக்குடி மகளொருத்தி, தனக்கு விருந்தோம்பும் சிறப்பு வேண்டுமெனவும், போர் செய்யும் பகைவர் அரசனுக்கு வேண்டுமெனவும் வேண்டுகிறாள்.

இதுகாறும் கூறியவற்றால் நடுகற்களின் நோக்கம், அமைப்பு, நடுகற்கள் அமைக்கப்பட்ட இடங்கள், நடுகற்களின் எழுத்துக்கள், நடுகல் வழிபாடு முதலியவற்றை அறியலாம்.

# நடுகல்லும் இலக்கியமும்

இரா. ஆ. கணேச நம்பி, எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி, காரைக்கால்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் போர்க்களத்துப்பட்ட வீரரை நடுகல்லில் நிறுத்தி ஏத்துதற் பொருட்டு உரிய கல்லைக்காண்டலும், கல்லைக்கொள்ளுதலும், அதனை நீர்ப்படுத்தலும், நடுகல்லாகக் குறித்த இடத்தே நாட்டுதலும், நட்ட பின்பு அக்கல்லைத் தெய்வமாகக் கருதிப் பெருஞ்சிறப்புப் படைத்தலும் எல்லோரும் கூடி வாழ்த்தலும் ஆகிய ஆறு துறைகளாக வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

## புறநானூறும் நடுகல்லும்

பகைவர் கவர்ந்து சென்ற ஆனிரைகளைத் தொடர்ந்து சென்று மீட்டு வந்து, விழுப்புண்ணால் உயிர்துறந்த வீரனுக்கு ஊரவர் கல்நட்ட செய்தியை (புறம் 260) வடமோதங்கிழார் பாடலில் காணலாம். பாண்டி நாட்டின் சிறுநாடாம் மல்லி நாட்டின் தலைவன் காரியாதி நடுகல்லான செய்தியை ஆவூர் மூலங்கிழார் குறிக்கிறார். தன்னுடன் வந்தவர் தன்னை நீங்கவும் தான் நீங்காது, மீண்டு வந்த ஆனிரையைக் காத்து வெட்சியாரை எதிர்த்து நடுகல்லான வீரனை வணங்கிச் செல்லுமாறு கிணைப் பாணனுக்கு ஒரு பெயர் தெரியாத புலவர் உணர்த்துவது போன்று புறநானூற்றில் (263) ஒரு பாடல் காணக்கிடக்கிறது.

நிரைகளைக் கவர்ந்துசென்ற பகைவரை வென்று விரட்டி மீட்டுக்கொணர்ந்த தலைமகன், நிரைகளை மீட்ட ஞான்று புண்பட்டு அதன் காரணமாக உயிர் நீத்தான். அவனுக்குப் பெயரும் பீடும் எழுதிய நடுகல்லை நாட்டி மயிற்பீலியைச் சூட்டிச் சிறப்புச் செய்ததை உறையூர் இளம்பொன்வணிகனாரின் பாடலில் காணலாம்.

வல்லார் என்னும் ஊர்த் தலைவன் பண்ணன் பகைவரிடமிருந்து நிரைமீட்டுத் தந்து கரந்தைப்போரில் உயிர் துறந்தான். அவனுக்கு நடுகல் நாட்டிச் சிறப்பு செய்தனர். இதனை 'முரம்பு நிலமாகிய முதிர்ந்த பறந்தலை இடத்து, உயர்ந்த நிலையையுடைய வேங்கையின் ஒளி பொருந்திய கொத்தாகிய நறுமலரை பனைத் தோட்டிற் புனைந்து தொடுத்து, பல்லான் கோவலர் வழிபடும்படி கல்லாயினனே' என கலங்குகிறார் சிறுகருந்தும்பியார். அள்ளூர் நன்முல்லையார் கூறும் மறக்குடி மகள் தன்னூரிடத்து புகழ் நிறுவி நிற்கும் நடுகல்லினை நாடோறும் வணங்கி விருந்தெதிர் பெறல் வேண்டும் என்றும் தன் கணவருக்கு நாடுதரு விழுப்பகை எய்தல் வேண்டும் என்றும் வேண்டுகிறாள். மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார் பாடலிலும் விடியற்காலையில் நடுகல்லை நீராட்டி நெய் விளக்கேற்றி வழிபடும் மறக்குடிமகள்

வருகிருள். மாங்குடி மருதனுர் முல்லை நிலத்து மக்கள் சூடும் பூ, உண்ணும் உணவு, நிலங்களில் மாறுபட்டாலும், வழிபடும் கடவுள் என்று கூறும் நிலையில் கல்லே பரவினல்லது நெல்லைச் சொரிந்து வழிபடும் வேறு கடவுளில்லை என்கிருர். ஐயூர் முடவனுர் ஓர் ஊரில் நடுகற்கள் மிக்கு நின்ற செய்தியைக் குறிக்கிருர்.

நாடுகாவல் செய்து நல்லறம் பேணி, நானிலம் போற்ற வாழ்ந்த நல்லரசன் கோப்பெருஞ்சோழன், வடக்கிருந்து உயிர்துறந்து வீரக்கல்லாய் விளங்கியமையும், பகைவருடன் அஞ்சாநெஞ்சோடும் ஆண்மையோடும் போர்பற்றி விழுப்புண் பெற்று வீரமரணம் எய்திய அதியமான் நடுகல்லாய் விளங்கியமையும் முறையே பொத்தியாராலும், ஒளவையாராலும் புறப்பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றன.

## அகநானூறும் நடுகல்லும்

அகநானூற்றில் பாலை வழியை, அம்மூவனுர் விழுத்தொடை மறவர்கள் கடவுளை வழிபடற்கு நடுகல்லின் மேல் பீலிசூடி கள்ளோடு செம்மறியை பலி கொடுக்கும் போவதற்கரிய வழி என்கிருர் (அகம் 35) நோய்பாடியாரோ 'நல்லமர்க் கடந்த மறவர் பெயரும் பீடும் எழுதி அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' என்கிருர் (அகம் 67) பாலை வழியில் நடுகல்லிற்கு நாட்பலி-காலைப்பலி கூட்டப் பெறுகின்ற செய்தியை எயினந்தை மகன் இளங்கீரனுர் 'நெடுநிலை நடுகல் நாட்பலி கூட்டும் சுரன்' என்று குறிக்கிருர். மதுரை மருதனிளநாகனுர் ஒரு பாடலில் நிரை மீட்ட கரந்தையார் பட்டு வீழ்ந்து நடுகல்லாய் நிற்கும் பாலைவழி என்றும், மற்ருெரு பாடலில் சுரத்தில் நிற்கும் நடுகல் பாலைமறவர் அம்பைத் தீட்டுவதால் தேய்ந்து நிற்கும் என்றும், காண்பாருக்கு தெளிவுதராத எழுத்துக்களைக் கொண்டு தளர்ச்சி மைத்தந்து நிற்கும் என்றும், பிறிதொரு பாடலில் புகழை நிறுவிப் போன கரந்தை மறவர் நடுகற்களில் இரை நசைஇக் கிடக்கும் முதுவாய்ப் பல்லி ஒலி எழுப்பும் என்றும், வேருெரு பாடலில் மாலைக் காலத்தில் நடுகல்லை ஆள் என்று உதைத்து நகம் சிதைந்து காட்டு யானை வருந்தும் சுரம் என்றும் கூறியுள்ளார். அகம் 179-ஆம் பாடலில் செங்கணை கொடுவில் ஆடவர் நன்னிலை குறித்த நடுகல் என்று நடுகல் பற்றி செய்தி வருகிறது. சீத்தலைச் சாத்தனுர் வெப்பமிக்க கொடிய பாலையின்கண் நிற்கும் நடுகல்லின் நிழலில் செந்நாய் வதியும் என்கிருர் (அகம் 53). ஐங்குறுநூறில் பாலைத்திணையில் ஓதலாந்தையார், எழுத்துடைய நடுகல்லைப் பெரிய யானையின் துதிக்கைக்கு உவமைப்படுத்தி உரைக்கிருர்.

## பத்துப்பாட்டும் நடுகல்லும்

நடுகற்களைச் சுற்றி அரணுக வேல் நடப்பட்டிருக்கும் என்று பட்டினப்பாலையும், நடுகற்கள் மிகுந்த வழியில் கூத்தன் அவைக்கு விருப்பமான பாடலை இசைத்துச் செல்லவேண்டும் என்று மலைபடுகடாமும் (மலை 387-91) கூறுகின்றன.

## பதினெண்கீழ்க்கணக்கில் நடுகல்

வள்ளுவர் குறளில் வரும் வீரன், என் தலைவன் முன்னின்றவர் கல்லாயினர் என்கிருன். கொடிய வெப்பமுள்ள சுரத்தில் நிணமுண்ட பேய்கள் நடுகல்லின் நிழலில் நித்திரை கொள்கின்றன என்று ஐந்திணை ஐம்பதும், 'எழுத்துடை கன்னிரை'

யுடைய சுரம் என்று ஐந்திணை எழுபதும் நடுகற்கள் பற்றிய செய்திகளைப் பகர்கின்றன. இவையேயன்றிப் பிற்கால இலக்கியங்களிலும் நடுகற்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கொங்குவேளிர் மாக்கதையில் 'நடுகற்படப்பை இடுகற்சிறார்' என்றும் 'படுகற்சுரமும்......நடுகல் அடுக்கமும்' (உஞ்சைக். கா. 271-72) என்றும் வருகின்றன. 'பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி நட்ட கல்லும்' என்று திருவாரூர் மும்மணிக்கோவை ஆசிரியர் குறிக்கிறார்.

## சிலப்பு சித்தரிக்கும் நடுகல்

வீரனுக்கே அன்றி வீரபத்தினிக்கும் நடுகல் எடுக்கப்பட்டதைச் சிலம்பால் உணரலாம். செங்குட்டுவன், கண்ணகிக்கு வடவரையில் கல்லெடுக்கச் சென்றதைப் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் பதிகம் சுட்டி நிற்கிறது. இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத்தைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்துக் காதைகள் என்று பெயரிட்டிருப்பது கருதத்தக்கது. இமயத்தில் கற்கால் கொண்டு வஞ்சியில் நட்ட அதனை முதுகுடி மகளிரும், பாணரும், புலவரும், வீரரும், சான்றோரும் போற்றி வழிபட்டனர் என்பது வஞ்சிக் காண்டத்தால் அறியகிடைக்கிறது.



# CHHAYA-STAMBHAS FROM NAGARJUNAKONDA

**H. SARKAR**
Superintending Archaeologist,
Archaeological Survey of India, Madras.

More than a score of *chhāyā-stambhas* or memorial columns have been discovered at Nagarjunakonda, a site now under complete submergence as a result of the construction of the Nagarjunasagar Dam, about 160km. to the north of Hyderabad, the capital of Andhra Pradesh. The valley of Nagarjunakonda was the site of the ancient city of Vijayapura or Vijayapurī, the capital of the southern Ikshvākus, who ruled over the lower Krishna basin during the third and the early part of the fourth centuries. For the history of memorial pillars, including hero-stones, these *chhāyā-stambhas* constitute an invaluable source, perhaps one of the earliest sources so far as south India is concerned. These are mostly free-standing limestone columns, although a few of them stood close to some pillared hall or the other. Here we propose to give the salient features of these memorial pillars, forming an important chapter in the history of the architectural tradition under the rule of the Ikshvākus, who succeeded the later Sātavāhanas in the lower Krishna delta.

The tradition of raising *chhāyā-stambhas* was to commemorate the death of some important personage, who may not necessarily be a hero. At Site 56 was raised a memorial pillar in honour of one Koḍaraka who has been described as *araka-bhaḍaraka* (Sanskrit *āryaka-bhaṭṭāraka*) and *yati-samaṇa-khaṁdhikata* (Sanskrit *yati-śramaṇa-skandhīkṛita*). These epithets suggest that Koḍaraka was a religious personage, may be the head of a religious institution. In fact, the pillar was discovered close to a brick temple, having a subsidiary shrine meant for some female deity. Significantly, *chhāyā-stambha* was raised also in honour of the foreman of artisan (*āvesanika*). His name is Mūlabhūta, hailing from Pavayāta.

It is no wonder that the *chhāyā-stambha* would be raised also to commemorate the death of kings and queens. As a matter of fact, the earliest known memorial pillar from Nagarjunakonda is that of the first

king Vāsishṭhīputra Chāṁtamūla, who founded the Ikshvāku line of monarchs. Curiously, the lastknown *chhāyā-stambha* belongs to a queen but it has been raised within the precinct of a Buddhist monastery. The memorial belongs to Śrī Vaṁmabhaṭā, the mother of the last known Ikshvāku king Rudrapurushadatta.

The third category belongs to *senāpatis* and *mahātalavaras*, and these are located mostly outside the citadel, primarily towards its eastern side.

Memorials have been erected also in honour of the dead soldiers and their chiefs, such examples coming from Site 113, located towards the north-eastern side of the citadel.

These *chhāyā-stambhas* bear not only inscriptions but also bas-reliefs, both being associated with some military or other exploits of the person. Here we may describe a few important examples, though the number of intact specimens is not more than two.

Fortunately, the earliest example is an intact limestone column coming from an area close to Stūpa 9. It is tetragonal in section with a rounded top, rising to a height about 12 feet. In its lowest part is engraved an inscription, in thirteen lines, preceded by five panels arranged one above the other. The uppermost one displays an edifice in three vertical planes, denoting either a palace or the idea of *vīra-svarga*. Below this has been delineated a scene from the palace, an oft-repeated theme in the plastic tradition of Nagarjunakonda. It shows a corpulent male figure, evidently a monarch, seated on a throne in the *ardha-paryaṅka* pose. On his either side stands a lady, perhaps his queen. Two other women stand behind them, one of them holding a fly-whisk. In the third panel figures the same person as the central character, surrounded by ladies, three of them, perhaps musicians, being seated on the floor; another lady to his left is in the dancing posture. Below this palace scene is portrayed the same royal figure mounting on an elephant; a man seated behind him on the elephant holds the parasol over the monarch's head. Four marching attendants surround the elephant. The fifth scene is the most interesting as the same central figure, indeed a corpulent person, stands bare-headed, in front of a heap of coins, arranged almost like a pyramid. Here he is dressed in a simple manner, though wearing sandles, and holds a staff, the *rāja-daṇḍa*, in his left hand. A man behind him holds the parasol

over the king's head. On his right is the priest holding a vessel in both the hands. Five other figures have been depicted like monks or ascetics. Undeniably this scene represents the distribution of gifts during the performance of some *Hiraṇyakoṭi* sacrifice. It is well-known that Vāsishṭhīputra Chāṁtamūḷa performed *Hiraṇyakoṭi, go śata sahasra, Aśvamedha, Vājapeya, Agnishṭoma* and other sacrifices (*āgīṭh[o]ma-vājapey asamedha-yājisa hiraṇa-k[o]ṭi-go-satasahasa-hala-satasahasa-padāyisa*).

Below these panels portraying the life-sketch of the king runs the inscription, rather the epitaph which is important in many respects. The memorial pillar was raised during the early years of the rule of Māṭharīputra Vīrapurushadatta, the son and successor of Vāsishṭhīputra Chāṁtamūla, but the *chhāyā-stambha* was raised by the ladies, who were Chāṁtamūla's sisters, mothers and his queens. All the names of the ladies have the honorific *Śrī*, while there are two names, Sarasikā and Kusumalatā, without the *Śrī*. They have been described in the inscriptions as *abhatarikā* (Sanskrit *abhyantarikā*), which may mean an intimate female friend or concubine.

The memorial pillar raised in honour of Vaṁmabhaṭā, the queen-mother, was raised in the 11th regnal year of Rudrapurushdatta. Śrī Vaṁmabhaṭā is a Śaka princess and she is dressed almost like a foreign lady, accompanied by two female attendants. She holds a mirror in one of her hands. This *chhāyā-stambha* has only one panel, below which runs an inscription, in nine lines, the later part of which runs as follows: *raño Vāsiṭhīputtasa Ikhākūnaṁ siri-Ruḍapurisadatasa mātūya mahādevīya-dhūtūya Ba[ha] phala sagōtaya siri Vaṁmabhaṭāya saṁvachharaṁ ekkāraṁ 101 vāsā pakhaṁ pathamaṁ 1 divasaṁ aṭhamaṁ 8 saga-gatāya chhāya-khaṁb[ho]*.

Yet another pillar representing the memorial of the royal personage, prince Eli Ehuvuladāsa, a step-brother of the ruling king Ehuvula Chāṁtamūla, came from the vicinity of a pillared hall, Site 61. It is a fragmentary pillar in which only one panel is now extant. The scene depicts a princely person seated in the *ardha-parayaṅka* pose surrounded by four ladies. To his left is a dancing figure, while to his right is a lady playing on *viñā*. Two other ladies are seated at two corners with outstretched legs. The inscription below it is dated in the 13th regnal year of Ehuvula Chāṁtamūla. The last four lines of this seven-lined epigraph reads as follows: *[Mā]ḍhari-pūtasa Ikhākuṇa[ṁ] sa(si)ri-Virapūrusadatasa*

*mahisija(ya) Mahavalabhikāya Yakhilinikāya putasa mahāsenapatisa kum-(ā)rasa Eli-Ehav(ū) ladāsaṁnakasa chhaya-tha[ṁ]bh[o] thāpito.*

There are about a dozen memorial pillars raised in honour of *senāpatis* and *mahātalavaras*. Of all such memorials the one installed in honour of the Kuḷahaka chief Chaṁtapuḷa occupied the most prominent position by virtue of its location just outside the eastern gate of the citadel. The relief on this pillar depicts an elephant with a rider. Three epithets are applied to his name and these are *amita-janasa dapa-damana, khaṁdhā-vārāna okhaṁdhaka* and *olabaku-hathi-gahaka.* The expression *hathi-gahaka* (Sanskrit: *hasti-grāhaka*) may mean one who seizes the elephant, evidently of the enemies. Apart from elephants, the horse and chariot are sometimes depicted on the *chhāyā-stambhas.* For instance, one of the memorial pillars shows a rider on a prancing horse. Originally, this must have been a beautifully-carved pillar with at least four panels, although it bears a single-lined inscription *mahāsenāpati mahātalavara Mayabhala (?).* But for the three small lotus medallions, the topmost panel is lost. The next relief depicts a corpulent figure with a dancing woman to his left. There is no trace of the next panel; the last one, however, depicts the rider on the prancing horse, followed by an attendant. In front of the horse is also shown a human figure. An interesting relief on a frag-mentry *chhāyā-stambha* shows ornamental chariot, in which a square-faced man, with tight head-gear, is shown looking through the opening. A seated lion is shown in the front left of the chariot. Perhaps it is a hunting scene, and the figure may be that of a Śaka.

At Site 133 had been discovered about five memorial pillars in honour of the dead soldiers and their chiefs. Sometimes a single memorial pillar was raised for a number of dead soldiers. These fragmen-tary pillars are not only inscribed but also carved with various battle-scenes. One such pillar portrays a horseman approaching a fortress, guarded by three cavaliers with drawn swords. Another pillar at the same site depicts four warriors with sword or spear and shield in their hands. The inscriptions on these pillars provide at least three leaders of the soldiers: Raṭapuṭa, prince Karadaru, and Haraka. The last-men-tioned person has been referred to as a *Raṭhika (Rāshṭrika)* or governor of a *Rāshṭra*; the other two leaders seem to be only *senāpatis.* Signifi-cantly, all of them hail from a place called Magalarana, the location of which is not known. But all these certainly indicate that a battle was

ought near about the Ikshvāku citadel and the memorials were raised ubsequently in honour of the dead soldiers and their leaders.

It is thus evident that *chhāyā-stambhas* have been raised not only or kings, queens, generals or soldiers but also for religious teachers and amous artisans. And these memorials date from about A.D. 250 to A.D. 25, and hence, by and large, may be dated anterior to the hero-stones liscovered in Tamilnadu and Karnataka. It is to be seen whether this radition of erecting *chhāyā-sthambha* was prevalent in the Tamil country luring the early centuries of the Christian era.

REFERENCES :

H. Sarkar and B. N. Misra, *Nagarjunakonda* (New Delhi, 1972); ). C. Sircar and K. G. Krishnan, 'Two Inscriptions from Nagarjunakonda'' *Epigraphia Indica* XXXIV, pt. I (January 1961), pp. 20–22; and D. C. Sircar, More Inscriptions from Nagarjunakonda', *Epigraphia Indica*, XXXV, pt. I January 1963), pp. 1-36.



# முதல் மகேந்திரவர்மனின் நடுகற் கல்வெட்டுகள்

கு. தாமோதரன், எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர்

## முதல் மகேந்திரவர்மன் யார் ?

நடுகற் கல்வெட்டுகளில் சிங்கவிண்ணபருமன் என்று குறிச் பெறும் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் மகனே முதல் மகேந்திரவர்ம இவன் பலதுறைகளில் சிறந்து விளங்கினுன். தர்க்க சாத்திரத்தில் நர தேர்ச்சி பெற்றவன்.[1] சங்கீர்ணஜாதி என்ற பண்ணை அமைத் சிறந்த இசைப்பித்தனுக விளங்கினுன். இவன் கலைப்பித்தனுக இரு காரணத்தால் கலைத்துறையிலும் மிகுந்த ஆர்வம் காட்டினுன். இ பயனுகத் திருச்சி, மாமண்டூர், மண்டகப்பட்டு, வெல்லம், பல்லாவரம் முத இடங்களில் முதன் முதலில் குகைக்கோயில்களைத் தோற்றுவித்தா குடைவரைக் கோயில்கள் இவன் காலத்தில்தான் உருவெடுத் என்ருல் அது மிகையாகாது. ஓவியக்கலையிலும் இவன் சிறந்து விளங் தால் சித்ரகாரப்புலி என்று அழைக்கப்பட்டான். மகாசேத்தாக லலிதாங்குரன், விசித்திரசித்தன் போன்ற பட்டங்களைப் பூ விளங்கினுன். சமயப்பற்று மிகுந்தவன். முதலில் சமண மதத்தில் பாடு கொண்ட இவன் பின்னர் அப்பர் பெருமானுல் சைவ சமயத்தி மாற்றப்பட்டான். போரிலும் ஆர்வம் காட்டினுன். சாளுக்கிய மன் இரண்டாம் புலிகேசியைப் புள்ளலூரில் தோற்கடித்தான். இவன் ஆட் காலத்தில் மிகுந்த போர்கள் நடைபெற்றுள்ளன என்பதை அண்மை புதிதாகக் கிடைத்துள்ள இவனுடைய நடுகற் கல்வெட்டுகள் தெ படுத்துகின்றன.

## மகேந்திரவர்மனின் நடுகற் கல்வெட்டுகள்[2]

முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தைச்சார்ந்த நடு கல்வெட்டுகள் இவனுடைய 2-ஆவது ஆட்சியாண்டிலிருந்து 39- ஆட்சியாண்டுவரை கிடைத்துள்ளன. இந்தக் கல்வெட்டுகள் வட ஆற்க மாவட்டம், செங்கம் வட்டத்தில் உள்ள ஊர்களிலிருந்தும் தர்ப மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள ஊர்களிலிருந்தும் த நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் படியெடுக்

பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டுகள் வேடியப்பன் கோயில், ஐயனாரப்பன் கோயில், ஊமைவேடியப்பன் கோயில் ஆகிய கோயில்கள் அமைந்துள்ள இடங்களிலும், இடுகாட்டினருகிலும், ஏரிக்கரையிலும் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ்மொழியிலும், வட்டெழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மோத்தக்கல், எடுத்தனூர், சாத்தனூர் (மல்லிகாபுரம்) ஆகிய ஊர்களில் கிடைத்துள்ள நடுகற் கல்வெட்டுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இதுவரை இம்மன்னன் கால நடு கற்கள் 12 கிடைத்துள்ளன.

## மகேந்திரவர்மனின் பெயர்

இவனுடைய கல்வெட்டுகள் இவனை மயிந்திரபருமர், மயேந்திர பருமர், மசீந்திரபருமர் என்று குறிக்கின்றன.

## பல்லவர் வரலாற்றில் மாற்றம்

செங்கம் வட்டம் நரசிங்கநல்லூரில் சிம்மவிஷ்ணுவின் 33-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு கிடைத்துள்ளது. இக்கல்வெட்டைக் கொண்டு ஆராயும் பொழுது இம்மன்னன் 33 ஆண்டுகள் ஆண்டிருக்கிறான் என்பது தெரியவருகிறது. இவனுடைய மகன் மகேந்திரவர்மன் 39 ஆண்டுகள் ஆண்டிருக்கிறான் என்பதைச் சாத்தனூரில் கிடைத்துள்ள கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது. சிம்மவிஷ்ணு கி.பி. 580 முதல் 600 வரை 20 ஆண்டுகளும், மகேந்திரவர்மன் கி.பி. 600 முதல் 630 வரை 30 ஆண்டு களும் ஆட்சி செலுத்தினர் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கின்றனர். மகேந்திரவர்மனுக்குப் பிறகு முதலாம் நரசிம்மவர்மன் கி.பி. 630ல் அரியணை ஏறினான் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. புதிதாகக் கிடைத்துள்ள நடுகற் கல்வெட்டுகளிலிருந்து மகேந்திரவர்மன் 39 ஆண்டுகள் ஆட்சி செலுத்தி உள்ளதால், இவன் 9 ஆண்டுகள் கூடுதலாக ஆண்டிருக்கிறான். ஆதலால் இவன் கி.பி. 590இல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும் என்ற மாற்றத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதே போன்று இவனுடைய தந்தை சிம்மவிஷ்ணு 33 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்பதிலிருந்து இவன் கி.பி. 556-இல் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

## யாருக்குக் கல் எடுக்கப்பட்டது?

போர்க்காலங்களில் ஆநிரைகளைக் கொள்ளும் பொழுதும் அல்லது மீட்கும் பொழுதும் வீரர்கள் விழுப்புண் ஏற்று வீரமரணம் அடைந் தனர் என்பதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அப்படி இறந்துபட்ட வீரர்களின் பீடும் பெயரும் பொறித்துக் கல் எடுக்கப்பட்டது.

வடஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய பகுதிகள் மலைக்குன்றுகளும், காடுகளும் அடர்ந்து காணப்படுவன. எனவே அங்குத் தொல்லை தரும் விலங்கினங்களிடமிருந்து ஊர்மக்களைக் காத்த பொழுது வீர மரணம் அடைந்த வீரனுக்குக் கல் எடுக்கப்படுவது உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக மோத்தக்கல் என்ற இடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு விளங்குகிறது. மகேந்திரவர்மனின் 32ஆவது ஆட்சியாண்டில் பொன்மோதனூர் என்பவருடைய சேவகன் வின்றண்வடுகன் என்பான் புலியுடன் போரிட்டு வீரமரணம் அடைந்த நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு : கோவிசைய மயேந்திரபருமற்கு முப்பத்திரண்டாவது பொன் மோதனூர் சேவகன் வின்றண்(வ)டுகன் புலி குத்திப் பட்டான் கல்

## மகேந்திரவர்மன் ஆட்சியில் நாய்க்கும் நடுகல்

சமுதாயத்தில் அங்கம் வகித்து வந்தவர்களுக்கும், அறிய செயல் செய்தவர்களுக்கும், எருமைகளைக் கள்வர்களிடமிருந்து காப்பதற்காக வீர மரணம் அடைந்த வீரர்களுக்கும், அவர்களுக்கு உதவியாக இருந்த நாய்க்கும் மகேந்திரவர்மன் காலத்தில் நடுகல் எடுக்கப்பட்டது என்ற செய்தியினை எடுத்தனூரர் கல்வெட்டு தெரிவிக்கிறது. பாண அரசருடைய மருமக்கள் பொற்றேக்கையாரின் இளமகன் கருந்தேவக்கத்தி என்பான் தன்னுடைய எருமைகளைக் காத்து வீரமரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இவர்க்கு உற்ற துணையாக இருந்த கோவிவன் என்னும் நாய் இரு கள்ளர்களைக் கடித்து துரத்தி அடித்து அவன் அருகில் நின்றது. அவ்வீரனின் உருவின் அருகில் அந்நன்றியுள்ள நாயின் உருவமும், பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு: கோவிசைய மயிந்திரபருமற்கு முப்பத்து நான்காவது வாணகோஅரைசரு மருமக்கள் பொற்றெக்கை ஆர் இளமகன் கருந்தேவக்கத்தி தன்நெருமைப் புறத்தே வாடிபட்டான் கல்

(கோவிவ)ன் னென்னுந் நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு

## குறிக்கப்பெறும் சிற்றரசர்கள்

பல்லவர் ஆட்சிக் காலத்தில் கங்கர், பாணர் என்ற சிற்றரசர்கள் வலிமை பொருந்தி விளங்கினர் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. மகேந்திரவர்மனின் 33-ஆவது ஆட்சியாண்டில் இவன் கீழ் ஆண்ட பாண அரசனுன் வாணகோ அரசர் மருமக்கள் பொன்னரம்பனூர் மேல், வாணகோ

அரசர் மருமக்கள் கந்தவிண்ணனுர் என்பார் படையெடுத்துச் சென்ருர். அப்பொழுது கந்தவிண்ணனுரின் சிற்றப்பனுர் ஆகிய பொன்னிதனுரின் இளமகன் பொங்கியார் என்பவருடைய மகன் கத்தி பாய்ந்து வீரமரணம் அடைந்த நிகழ்ச்சி கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. பாண அரசனின் மருமக்கள் இருவர் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இவர்கள் எதற்காகப் போரிட்டனர் என்பது தெரிய வில்லை. ஒருவேளை இவர்களுக்குள் யார் பெரியவர் என்ற பூசலையொட்டி போர் நிகழ்ந்திருக்கலாம்.

## பிற குறிப்புகள்

மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் கூடல், பெருமுகை ஆகிய ஊர் களில் நடைபெற்ற போர் நிகழ்ச்சியினைக் கல்வெட்டு குறிக்கிறது. மேல் வேண்ணுடு என்பது நாட்டுப்பிரிவாக இருந்திருக்கிறது. இந்தப் பகுதியில் அடங்கி இருந்த ராராற்றூர், கருங்காலிப்பாடி, நரிப்பள்ளி, ஆந்தைபாடி ஆகிய ஊர்களை இவனுடைய சிற்றரசர்கள் ஆண்டனர் என்பது தெரிகிறது.

## குறிக்கப்பெறும் பெயர்கள்

மகேந்திரவர்மனின் கல்வெட்டுகளில் கட்டங்கன்ஞர், கந்தவிண்ண ஞர், கருசாத்தனுர், குன்றக்கண்ணிபார், பொங்கியார், பொணைமனைன்ஞர், பொற்காடன்ஞர், பொற்ஜெக்கையார், பொன்மோதன்ஞர், பொன்பானன் ஞர், பொன்னந்தியார், பொன்னரம்பனுர், பொன்னிதன்ஞர், வீரவாண்ண ரையர் போன்ற பெயர்கள் குறிக்கப்படுகின்றன. இந்தப் பெயர்கள் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களை நமக்கு நினைவூட்டு கின்றன. பல்லவர் காலத்திலும் நல்ல தமிழ்ப் பெயர்கள் வழக்கில் இருந் திருக்கின்றன என்பது தெரிகிறது. மக்கள், சேவகர், மருமக்கள், இளமக் கள், போன்ற சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன.

## நடுகல் சிற்ப அமைதி

நடுகற்களில் பொறிக்கப்பட்டுள்ள வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் அமைந்துள்ளது. வீரனின் அரையில் நீண்ட துணி சுற் றப்பட்டிருக்கும். உடலின் மேல் பகுதியில் ஆடை கிடையாது. தலையில் முடியையும், சில உருவங்களில் நீண்ட சடைப்பின்னலையும் பார்க்க முடி கிறது. வீரனின் உருவம் மெலிந்தும், தலையில் கவசம் அணிந்தும், மிடுக்கான தோற்றத்துடன், மிகவும் அழகாக இருக்கும். இடது கையில் கேடயமும், சில சமயங்களில் வில்லும் காணப்படும். விலங்குகளுடன் போரிடும் பொழுது இடக்கையை விலங்கின் வாய்க்குள் விட்டு கிழிப்பதைப்

போன்று இருக்கும். வலது கையில் வாளும், சில சமயங்களில் குறுவாளும் இருக்கும். சில உருவங்களில் உடைவாள் மீது கையை ஊன்றியும் காணப்படும். இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி, கண்ணாடி, சிமிழ், அம்புத் தூணி போன்ற பொருள்கள் காணப்படும். வலதுகாலின் அருகில் சிமிழும், கெண்டியும் காணப்படும். இந்தப் பொருள்கள் மங்கலப்பொருட்களாகக் கருதப்பட்டதால், இறந்துபட்ட வீரர்களின் உருவங்களுடன் பொறிக்கப்பட்டன.

## வழக்காறும் பண்பாடும்

வீர மறவர்களுக்கு மட்டுமல்லாது, நன்றியுள்ள நாய்க்கும் நடுகல் எடுக்கப்பட்டது. இதை வைத்துக்கொண்டு பார்க்கும்பொழுது மனிதர்களாக இருந்தாலும், விலங்குகளாக இருந்தாலும் அவரவர் செயலுக்கு ஏற்ப அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் கல் எடுக்கப் பெற்றதிலிருந்து தமிழ்ச் சமுதாயத்தின் நாகரிகம் வெளிப்படுகிறது. இறந்துபட்டவர்களுக்குக் கெண்டி, கண்ணாடி, சிமிழ் போன்ற மங்கலப் பொருள்களை வைத்து வணங்குகின்ற பழக்கம் இருந்திருக்கிறது.

நடுகற் கல்வெட்டுகள் நல்ல தமிழில் பொறிக்கப்பெற்றுள்ளன. இவற்றில் குறிக்கப்பெறும் பெயர்களும், சொற்களும், எழுதப்பெற்றுள்ள நடையும் சங்ககால இலக்கியங்களின் சாயலை வெளிப்படுத்துகிறது.

மகேந்திரவர்மன் காலத்தில் குடைவரைமண்டபங்களும், கோயில்களும் தோன்றியதைப்போன்று, அழகான சிற்பங்களும் உருவெடுத்தன என்பதை அவனுடைய நடுகற்-கல்வெட்டுகளில் பொறிக்கப்பெற்றுள்ள உருவங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

எனவே, மகேந்திரவர்மனின் நடுகற் கல்வெட்டுகள் மூலம் இலக்கியம், வரலாறு, சமுதாயத்தில் நடைமுறையில் இருந்த பழக்க வழக்கங்கள், கலைச் சிறப்பு ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

---

1. மாமல்லை - இரா. நாகசாமி (இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை)
2. செங்கம் நடுகற்கள் - பதிப்பாசிரியர், இரா. நாகசாமி

# AGAMAS ON MEMORIAL STONES

R. NAGASWAMY

It is well known that the erection of religious edifices, making of images, and their consecration, the daily and periodical rites and festivals and the philosophy behind them are dealt with in the group of works called agamas or Tantras. Agamas also speak of the erection of memorials to the dead and its worship.

A full chapter is dedicated to the erection and sites of memorials to the dead in Rauravāgama (Rauravagama-Part II. Edited by N. R. BHATT Institute Francaise Indology–Pondichery 1972 P. 35-46). It is called *Kshetraliṅga Pratishta*. Mr. N.R. BHATT has added very useful information, by listing other agamas where this subject is dealt with. The Kamika, Kārana, Kirana, Cintya, Dipta, Makuta, Matangaparamesvara, Yogaja, Suprebheda and Sukshma agamas deal with memorials. In some texts it is called *Samādhiliṅga sthāpana.*

The purpose of erecting memorials is twofold namely for confering benefits to the builder and to relieve the cycle of births and deaths to the dead (Raurava, 30–31). The memorials can be erected within a temple or outside it. It can be erected on the banks of rivers, lakes, tanks, coastal regions, in the midst of forests, on the foot hills or in cemetries if it is to be an independent one. Kamika divides such memorials as independent (*svapradhana*) or dependent (*Parānga*) (Kamika 11-66).

If it is to be erected as a secondary or dependent one it should be installed in a temple, either in the central ambulatory or in the outer *sāla* (Raurava 30, 9-10). Various quarters are also prescribed for different desired effects.

The memorial can be either in the form of a linga or in the form of a figure sculpture. If it is a linga it may face either eastern or western direction, but if it is a figure sculpture it should face south. A temple of the

variety of *Sarvakāmaprada* or *Jayada* may be erected for the memorial. For erecting normal temples it is necessary to build a small miniature temple to perform the rites before erecting the main temple. Such miniature temples are called *bālālayas*. But for erecting memorial temples no *bālālaya* should be constructed.

The text prescribes the selection of stone, carving of the image placing under water for a particular period (called *nīrppaduttal* in Tamil and *Jalādhivāsa* in Sanskrit) followed by resting it on grains for a particular period (*Sayanādhivāsa*) which are to be done as for installation of other deities. The laying of base-stone and special gems (*ratnavyāsa*) are to be followed by the installatory rites. Final fire offerings and consecratory rite called *kumbhabhisheka* must be performed.

From the above it is seen that from the selection of stone to consecration, almost all rites prescribed for other deities are to be gone through for memorial structures. The consecration of Kannaki as described in Silappadhikaram corresponds to these texts.

We have a few instances conforming to this Agamic prescription that needs our attention. In the 8th regnal year of Kampavarman a certain Rajaditya erected a memorial to his diseased father, where he was laid to rest. The inscription reads "in the place where his father was laid to rest Rajaditya erected an Isvarālaya and *Atītagrha* (E. I. VII, p. 122-123) It is evident that the temple was erected in *smasāna*, in the cemetry. In the temple itself there were two parts one the main temple dedicated to Siva and the *Atītagrha* probably a temple bearing a figure sculpture of the dead enshrined as a secondary temple. This is a very striking example of such memorial temples, mentioned in epigraph. (see also page 8 of this book) A number of *Pallipadai* temples mentioned both in Chola and Pandya records are memorial temples. The images of the Bhaktas, including that of the Saivaite Nayanmars and Vaishnavaite Alwars installed in temples and worshipped is probably after this tradition. A number of lingas to be seen in the enclosures of the temples, like the great temple of Tanjore were probably the edifices installed in memory of those who were once intimately connected with the temple.

# நடுகல் மேற்கோள்கள்

அகநானூறு

முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற்பீலி சூட்டி துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளோடு துரூஉப்பலி கொடுக்கும் — பாடல் 35

நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
..............................................................
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும் — பாடல் 53

நிரம்பா நோக்கின் நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை யெல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் — பாடல் 67

நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி யுகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும் — பாடல் 131

விடுவாய்ச் செங்கணைக் கொடுவி லாடவர்
நன்னிலை பொறித்த கன்னிலை யதர் — பாடல் 179

ஏறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்டபோலும் நடாஅ நெடுங்கல்
அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி — பாடல் 269

சிலையேறட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்

நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டுஞ்
சுரனிடை விலங்கிய மரனோங்கு இயவு பாடல் 289

கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும் பாடல் 297

மரங்கோ ளுமண்மகன் பேரும் பருதிப்
புன்றலை சிதைத்த வன்றலை நடுகற்
கூருளி குயின்ற கோடுமா யெழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும் பாடல் 343

அத்த நடுகல் ஆளென வுதைத்த
கான யானைக் கதுவாய் வள்ளுகிர்
இரும்பனை யிதக்கையின் ஒடியும் பாடல் 365

வில்லீண் டருஞ்சமந் ததைய நூறி
நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல் பொருந்தி இமையாது
இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி பாடல் 387

## புறநானூறு

நனந்தலை யுலக மரந்தை தூங்க
கெடுவி நல்லிசை சூடி
நடுகல் லாயினன் புரவல னெனவே பாடல் 221

பலர்க்கு நிழலாகி உலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற பாடல் 223

நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லோ பாடல் 232

மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே பாடல் 260

பல்லாதழீஇய கல்லா வல்வில்
உழைக்குரற் கூகை யழைப்ப ஆட்டி
நாகுமுலையன்ன நறும்பூங் கரந்தை

விரகறியாளர் மரபிற் சூட்ட
நிரையிவண் தந்து நடுகல் ஆகிய
வென்வேல் விடலை — பாடல் 261

பல்லாத் திரள்நிரைப் பெயர்தரப் பெயர்தந்து
கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே — பாடல் 263

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனிநட் டனரே கல்லும் — பாடல் 264

ஓங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லாயினையே கடுமான் தோன்றல் — பாடல் 265

ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவும் — பாடல் 306

முனைக்குவரம் பாகிய வென்வே னெடுந்தகை
நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலை — பாடல் 314

இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்
புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் — பாடல் 329

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும் இலவே — பாடல் 335

## ஐங்குறுநூறு

விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுக லன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை — பாடல் 352

மலைபடுகடாம்

ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே — வரி 386-389

செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை — வரி 394-396

பட்டினப்பாலை

கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண் போல — வரி 78-79

சிலப்பதிகாரம்

இமய மால்வரைக் கற்கடவுளாம் என்ற வார்த்தை இடந்துரப்ப ஆரிய நாட்டரசோட்டி அவர்முடித்தலை அணங்காகிய பேரிமயக் கற்சுமத்திப் பெயர்ந்து போந்து நயந்த கொள்கையில் கங்கைப் பேர் யாற்றிருந்து நங்கைதன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி வஞ்சிமா நகர்புகுந்து நிலவரசர் நீண்முடியாற் பலர்தொழு படிமங்காட்டி தடமுலை பூசலாட்டியைக் கடவுள் மங்கலம் செய்த பின்னாள் கண்ணகி கோட்டத்து . . . – உரைப் பாட்டு மடை

திருக்குறள்

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல் நின் றவர் — எண் 771

ஐந்திணை எழுபது

எழுத்துடைக் கல்நிரைக்க வாயில் விழுத்தொடை
அம்மாறு அலைக்கும் சுரம்நிறைந்து—அம்மா
பெருந்தரு தாளாண்மைக்கு ஏற்க அரும்பொருள்
ஆகும் அவர் காதல் அவர் — பாலைத்திணை எண் 1

ஐந்திணை ஐம்பது

கொடுவில் எயினர்தம் கொல்படையால் வீழ்ந்த
அடிநிணம் மாற்றிய பேஎய்—நடுகல்
விரிநிழல் கண்படுக்கும் வெங்கானம் என்பர்
பொருள் புரிந்தார் போய சுரம் — பாலைத்திணை எண் 35

திருவாரூர் மும்மணிக்கோவை

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும்

பெருங்கதை

அடுகளிக் குரவைசே ரார்கலி யாளர்
நடுகற் படப்பை இடுகற் சிறூர்
கண் கூட்டிருந்த ஐம்பதிற் றிரட்டிப்
புல் பரந்து கிடந்த கல்லதர் — உஞ்சைக் காண்டம் வரி 62-65

படுகற் சுரமும் பாறையும் படுவும்
நடுகல் அடுக்கமும் நறும் பூஞ்சாரலும் — உஞ்சைக் காண்டம்வரி 271-72

தொல்காப்பியம்

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர — தொல்-புறத்திணை-நூற்பா எண் 5

புறப்பொருள் வெண்பாமாலை

ஆளு வென்றி அமரில்வீழ்ந் தோற்குக்
கான நீளிடைக் கற்கண் டன்று — கற்காண்டல் — கொளு

மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப் — பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறுகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல் — வரலாறு

மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று — கற்கோள் நிலை — கொளு

பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப — மேவார்
அழன்மறங் காற்றி யவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல் — வரலாறு

வண்டுசூழ் தாமம் புடையே யலம்வரக்
கண்டுகொண்ட கன்னீர்ப் படுத்தன்று — கன்னீர்ப் படுத்தல் — கொளு

காடுகனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ள—பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத் துய்த்திட்டார் கல் — வரலாறு

ஓங்கியகல் லுய்த்தொழுக்க
லாங்கெண்ணினு மத்துறையாகும் கொளு

கணனர்ந் துவப்பக் கடுங்கண் மறவர்
பிணனர்ந்து பேய்வழங்கு ஞாட்பி—னிணனர்
விழுக்கினல் வேய்ந்த விறல்வேலார் கல்லே
யொழுக்கினு ரொன்றெருவர் முன் வரலாறு

அவன்பெயர்கன் மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கன்னட்டின்று கல் நடுதல் - கொளு

மாலே துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து—வேலமரு
ளாண்டகை நின்ற வமர்வெய்யோற் காகென்று
காண்டக நாட்டினர் கல் வரலாறு

நிழலவி ழெழின்மணிப்பூட்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று கன்முறைபழிச்சல் - கொளு

அடும்புகழ் பாடி யழுதழுது நோன
திடும்பையுள் வைகி யிருந்த—கடும்பொடு
கைவண் குருசில் கற்கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றன் திசைக்கு வரலாறு

வேத்தமருள் விளிந்தோன்கல்லென
வேத்தினர் துவன்றி யிற்கொண்டு புக்கன்று இல் கொண்டு புகுதல்-கொளு

வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குருசில்க—லாட்கடிந்து
விற்கொண்ட வென்றி விறன்மறவ ரெல்லோரு
மிற்கொண்டு புக்கா ரியைந்து வரலாறு

முந்தை முதல்வர் கல்தான் காட்டி மூதின்முல்லே - வரலாறு

கன்னின்றன் எந்தை கணவன் களப்பட்டான் ஏறண்முல்லே - வரலாறு

தொல்காப்பிய உரை

தாழி கவிப்பத் தவஞ்செய்வார் மண்ணக
வாழிய நோற்றனை மால்வரை—ஆழிசூழ்
மண்டில மாற்ற மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனெ னின்மாட்டோர் கல்

அன்றுகொ ளாபெயர்த் தாரமரில் வீழ்ந்தோன்கற்
கின்று கொள் பல்லா வினைமெல்லாங் - குன்றுமற்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ பீடம் வகுத்து

ஆவாழ் குழக்கன் றுய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுகல்—ஓவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் பெயர்பொறித்த
பொற்கோட் டிமயமே போன்று

பொரு. 60 நச்சி

பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க யானை தன்னொடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுகன் னெடுநிலை நோக்கி யாங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோ னந்நிலைச்
சென்றுழிச் செல்க மாதோ

பொரு. 79 நச்சி

## திருவண்ணாமலை அருணாசலேச்சுவரர் கோயிற்சாசனம்

வேலை தடுங்கல்லும் வெட்டும்வீ ரக்குகையும்
மூலை தெறிக்கு முடித்தலையும்—நாளை
மதிவா னுதன்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணந்தொடர்விட் டால்

கல்லாயு மெற்றெரிந்து காண்டற் கெளிவந்த
வல்லாண் விடலைக்கு வம்மினோ—வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாந் தொட

வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வல்வேல் விடலைக்கும்
ஓராற்ருற் செய்வ துடைத்து

காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி செய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து கால்கொண்மின்
நாளை வரக்கடவ நாள்

வாளமர் வீழ்ந்த மறவோன்க லீர்த்தொழுக்கிக்
கேளி ரடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பிற்
கார்படுத்த வல்லேறு போலக் கழலோன்க
னீர்ப்படுத்தார் கண்ணீரி னின்று

பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லை
வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனுற்
கண்ணீ ரருவியுங் கழீஇத்
தெண்ணீ ராடுமின் றீர்த்தமா மதுவே

சீர்த்த துகளிற்ருய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்து

கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்—நாள்வாய்த்
திடைகொள லின்றி யெழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து

கைவினை மாக்கள் கலுழக்க ணேக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது